பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 232 ஆடி 03 ஆம் நாள் வெள்ளிக்கிழமை 19 ஜூலை 2019 வள்ளுவர் ஆண்டு 2050

Now in JAFFNA
PhD / DBA
Doctor of Business Administration
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

## இன்னும் தீராத கல்முனை விவகாரம்:

# ரணிலுடனான சந்திப்பை கூட்டமைப்பு புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19

கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்தில் வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்படாமையால், தலைமை அமைச்சர் ரணில் மற்றும் பொதுநிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சர் ஆகியோருடனான சந்திப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுப் புறக்கணித்தனர்.

02

## கிழக்கு தமிழர் ஒன்றியம் கட்சியாக உதயமாகியது

மட்டக்களப்பு, ஜூலை 19

கிழக்கு தமிழர் ஒன்றியம் ஒன்றிணைந்த தமிழ் மக்கள் கட்சியாக உதயமாகியுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வு மட்டக்களப்பு கூட்டுறவு மண்டபத்தில் கடந்த 16ஆம் திகதி இடம் பெற்றது.

கட்சியை ஆரம்பித்து அது தொடர்பில் கருத்துத் தெரிவித்த, கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் தலை

19

## எச்சில்தேநீர் ஊற்றியவருடன் சமாதானமாகச் செல்லுமாறு பொலிஸார் வலியுறுத்தினர்

### தம்பிரான் அடிகளார் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 19

தென்கையிலை ஆதீன குரு முதல்வர் மீது எச்சில் தேநீர் ஊற்றியவருடன் சமாதானமாகச் செல்லுமாறு, உப்பு வெளிப் பொலிஸார் கோரினர் என்று தென்கை யிலை ஆதீன இரண்டாம் குரு முதல்வர் தம்பிரான் அடிகளார் தெரிவித்தார்.

சமாதானமாகச் செல்வதையே

19

## கன்னியா விவகாரம்

# மைத்திரி, தமிழ் எம்.பிக்கள் நேற்றுச் சந்தித்துப் பேசினர்

யாழ்ப்பாணம், ஜூலை 19

கன்னியா விவகாரம் தொடர்பாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் ஆக்கபூர்வமான முடிவுகள் எவையும் எடுக்கப்படவில்லை என்று இந்து அமைப்புக்கள் கடுமையான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளன.

19

## தண்ணீரை சேமிக்க நடவடிக்கை தேவை

*வவுனியா நகரசபை உறுப்பினர் கோரிக்கை*

வவுனியா, ஜூலை 19

எதிர்காலத்தில் தண்ணீருக்கான போராட்டம் இடம்பெறலாம் என்பதைக் கருத்தில் கொண்டு நகர சபைக்குட்பட்ட குளங்களை ஆழப்படுத்தி அழகுப

06

## யாழ். மாநகர சபையில் கன்னியா அசம்பாவிதங்களை கண்டித்து நேற்றுத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

திருகோணமலை கன்னியாவில் இடம்பெற்ற அசம்பாவிதங்களைக் கண்டித்து யாழ்ப்பாணம் மாநகர சபையில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினரால் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்

06

## சம்பந்தனை அழைக்கவில்லை ஆதலால் நாம் செல்லவில்லை

*கூட்டமைப்புக் கூறுகின்றது*

யாழ்ப்பாணம், ஜூலை 19

அரச தலைவருடனான சந்திப்புக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு எந்தவொரு தரப்பினிடமிருந்தும் அழைப்புக் கிடைக்

19

## மிருக பலியிடல் விவகாரம்

# யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற தீர்ப்பு மேன்முறையீட்டு மன்றால் தள்ளுபடி

யாழ்ப்பாணம், ஜூலை 19

இந்து கோவில்களில் மிருக பலியிட்டு வேள்வி நடத்தத் தடை விதித்து, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைத் தள்ளுபடி செய்து, மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. அந்தந்தப் பிரதேச சபைகளின் அனுமதியுடனேயே வேள்வியை நடத்தப்பட வேண்டும் என்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் குறிப்பிட்டது.

யாழ்ப்பாணம் கவுணாவத்தை நரசிம்ம வைரவர் ஆலயம் சார்பில் மேன்முறையீட்டு மனுவை மூத்த சட்டத்தரணி கே.வி.எஸ்.கணே

19

## தூக்கை கைவிடுக

*ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் அழுத்தம்*

கொழும்பு, ஜூலை 19

இலங்கையில் தூக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்தும் தீர்மானத்தைக் கைவிட வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினர்கள் மற்றும் அதன் உறுப்பு நாடுகளின் தூதுவர்களை அண்மையில் சந்தித்தனர். அதன்போது தூக்குத் தண்டனை விடயம் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் தீர்மானத்தைக் கைவிட வேண்டும் என்று அதன் போது வலியுறுத்தப்பட்டுள்

06

## இலங்கையின் 22 மாவட்டங்களிலும் கம்பங்கள் உள்ளன!

*5ஜி கருத்துக்கு ஆனல்ட் விளக்கம்*

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கையின் 22 மாவட்டங்களிலும் தொலைபேசிக் கம்பங்கள் பூட்டப்பட்டுள்ளன. தொலைத்தொடர்பு ஆணைக் குழு அனுமதி

19

## கையிலை ஆதீனம் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

கன்னியா போராட்டத்தின் போது தென் கயிலை ஆதீனம் தாக்கப்பட்டமை தொடர்பாக யாழ்ப்பாணம் கைலாச பிள்ளையார் முன்றலில் இன்று வெள்ளிகிழமை மாலை 4.30 மணிக்கு கண்டன போராட்டமொன்று நடத்தப்படவுள்ளது. சைவ மகா சபை உள்ளிட்ட அமைப்புக்கள் இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளன.

இது தொடர்பில் ஏற்பாட்டாளர்களால் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:

கன்னியா போராட்டத்தின் போது ஆதீனத்தின் மீது பொலிசார் முன்னிலையில் தேநீர் வீசி தாக்குதல் நடத்திய காடையர்கள் கைது செய்யப்படாமை கடும் கண்டனத்திற்குரியது. சாத்வீக மான முறையில் கன்னியாவின்

19

## எதிர்வரும் 30ஆம் திகதியுடன் உயர்தர வகுப்புகளுக்கு தடை

கொழும்பு, ஜூலை 19

இந்த மாதம் 30ஆம் திகதி நள்ளிரவு முதல் உயர்தர வகுப்புக்கள், கருத்தரங்குகள் என்பன நடத்துவதற்குத் தடை விதிக்கப்படுகிறது என்று பரீட்சைகள் திணைக்களம்

06



அனைவருக்கும் ஏற்ற DFCC வங்கி

வங்கியென்றால் அது அனைவருக்கும் ஏற்ற வங்கியாக இருக்கவேண்டும். சேமிப்புக் கணக்கு, நடைமுறைக் கணக்கு, நிலையான வைப்பு, கிரடிட் காட், லீசிங், வீட்டுக் கடன், தனிப்பட்ட கடன், வேர்ச்சுவல் வொலட், வியாபார நிதிச் சேவைகள் உட்பட அனைத்து வங்கிச் சேவைகளையும் வழங்கும் வங்கிதான் DFCC வங்கி.

24 மணிநேர அழைப்பு நிலையம்: 0112 350000
www.dfcc.lk


DFCC வங்கி

## காணி விற்பனைக்கு

K.K.S வீதி சுன்னாகத்தில் வீதி முகப்பாக 120 அடி உடைய 5 1/2 பரப்பு காணி சுற்றுமதில், வீடு உட்பட விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 076 0312299


## மரண அறிவித்தல்



பிறப்பு 24 . 07 . 1937

இறப்பு 10 . 07 . 2019

### மார்ஷல் சார்ள்ஸ் கிளிபேட்

(ஓய்வுபெற்ற இலங்கை புகையிரத நிலைய அதிபர்)

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட மார்ஷல் சார்ள்ஸ் கிளிபேட் கடந்த 10.07.2019 புதன்கிழமை அன்று Scarborough கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜேம்ஸ் மார்ஷல் றோசலின் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சத்தியநாதன் சிசிலியா தம்பதியரின் அன்பு மருமகனும், ரஞ்சினி அவர்களின் அன்புக் கணவரும், ராதிகா, ரஜீவ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராஜன், நிலாந்தி ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற லோரன்ஸ், புளோறா (பேபி), அன்ரனி (நெல்சன்), காலஞ்சென்ற ஸ்ரெலா (சந்திரா), அருளானந்தம் (அரியராசா), கிப்பொலிற்றா (சறோ), கெலன்ஜெசி (ராஜினி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சஞ்சய், ஷரோன், யோசுவா, பிறெண்டன், அஸ்ரன், ஷெரினா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற மரியதாசன், மகேஸ்வரி, மரியதாசன், எட்வேட், திரேசா(கனி) கொன்சி, அன்ரனிப்பிள்ளை, காலஞ்சென்ற கிளரிஸ் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (20.07.2019) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: எட்வேட் (மைத்துனர்)

077 735 3661 (c23037)(13.17)

## மரண அறிவித்தல்



அன்னை மடியில் 05.07.1934

இறைவன் அடியில் 17.07.2019

### திருமதி.புவனேஸ்வரி சிவராஜசிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியை யா/நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை)

யாழ் வடமராட்சி பொலிகண்டியை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி சிவராஜசிங்கம் அவர்கள் 17.07.2019 புதன்கிழமை கொழும்பில் இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற நடராசா தங்கமணி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வல்லிபுரம் சிவராஜசிங்கம் (இளைப்பாறிய அரச கரும மொழி திணைக்கள ஆணையாளர்) அவர்களின் அன்பு மனைவியாரும் Dr. நவநீதன் (மகப்பேற்று வைத்திய நிபுணர் அவுஸ்திரேலியா), பூங்கோதை (ஆசிரியை கொ/விபுலானந்தா கல்லூரி) Dr. சௌதாமினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அபிராமி (அவுஸ்திரேலியா), Dr. பாலசந்திரன் (தேசிய வைத்தியசாலை கொழும்பு) Dr. கருணபாலன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், Dr. பரஞ்சோதி, ராஜேந்திரம், கனகேஸ்வரி, பாலசோதி, பத்மசோதி, பாஸ்கரசோதி ஆகியோரின் அன்பு சகோதரியும், சசிகலா, சரஸ்வதி, குலேந்திரராஜா, ரஜனி, அருந்தவராணி, ஜெயந்தி, மாலினி ஆகியோரின் அன்பு மைத்துனியும், அரிணி, நயனி, பாலமுரளி, குருபரன், மதுமிதா, பிரியரதன், ஜானவி ஆகியோரின் அன்பு பேத்தியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்சாலையில் வெள்ளிக்கிழமை (19.07.2019) காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 5.00 மணிவரை அஞ்சலிக்கு வைக்கப்பட்டு மறுநாள் சனிக்கிழமை 20.07.2019 காலை 11.00 மணியளவில் இறுதி சடங்கு நடைபெற்று, கல்கிசை பொதுமயானத்தில் 2.00 மணிக்கு தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :

மகன். Dr. நவநீதன்- 077 9577030

மகள். பூங்கோதை - 077 5061489

மகள். Dr.சௌதாமினி - 076 1433839

## ரணிலுடனான...

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்ப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியது. அதற்கு நிபந்தனையாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு நிதி அதிகாரம் முழுமையாக வழங்கப்பட்டு கணக்காளர் நியமிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது. தலைமை அமைச்சரும் அதற்கு உடன்பட்டு எழுத்துமூலம் உறுதி வழங்கப்பட்டது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கு இடையிலான கலந்துரையாடல் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் எல்லை நிர்ணயம் தொடர்பில் ரவூப் ஹக்கீம் கருத்துக்களை முன்வைத்திருந்தார். முதலில் கணக்காளர் நியமனம் இடம்பெறட்டும். அதன் பின்னர் எல்லை நிர்ணயம் தொடர்பில் ஆராயலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பில் தொடர் சந்திப்பு எதிர்வரும் வியாழக்கிழமை (நேற்று) நடத்த தீர்மானிக்கப்பட்டது.

தலைமை அமைச்சர் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஆகியோர், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை நேற்றைய சந்திப்புக்கு அழைத்துள்ளனர்.

'வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் கணக்காளர் பதவியைப் பொறுப்பேற்கவில்லை. முதலில் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். அதன் பின்னர் பேசலாம்' என்று அவர்களிடம் தெரிவித்ததாக, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரனை உள்நாட்டலுவல்கள் அமைச்சர் தொடர்பு கொண்டு சந்திப்புக்கு வருமாறு அழைத்துள்ளார். மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை தொடர்புகொண்டு, நீங்கள் சந்திப்புக்கு வரத்தேவையில்லை. கோடீஸ்வரனை சந்திப்புக்கு அழைத்துள்ளோம் என்று சாரப்பட சுமந்திரனிடம் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரனும், வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்படாமல் சந்திப்பில் கலந்துகொள்ள மாட்டார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அமைச்சருக்குப் பதில் வழங்கியுள்ளார். இதன் காரணமாக நேற்றைய சந்திப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பங்கேற்கவில்லை. (ம-ஓ.5)

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் ஓய்வூதிய உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி சுகந்தினி கேதீஸ்வரன்
அவர்களின் பாசமிகு தந்தை

**மார்க்கண்டு தெய்வேந்திரம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம், நல்லூர்

(IN/107181)(11.17)

## வேலணை பிரதேச சபை சட்ட ஆலோசனை வழங்குநர்களை பதிவு செய்தல் 2019

சபையானது 2019 ஆண்டிற்கு சட்ட ஆலோசனை வழங்குவதற்கு சட்ட ஆலோசகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்கவுள்ளது.

விண்ணப்பப்படிவங்கள் சபையின் தலைமை அலுவலகத்தில் நிதிக் கிளையில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணபத்திற்கும் பதிவு கட்டணமாக ரூபா 1,000.00 (வரி நீங்கலாக) செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"சட்ட ஆலோசனை வழங்கலுக்கான விண்ணப்பம் 2019 "** எனக்குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் **"தவிசாளர், வேலணை பிரதேச சபை, வங்களாவடி, வேலணை.** எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் 31.07.2019ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விவரங்களுக்கு 021 221 1506 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி,
தவிசாளர்,
வேலணை பிரதேச சபை.

## மரண அறிவித்தல்

### வைரவேஸ்வர ஐயர் சந்திரசேகரசர்மா



ஐயர்லேன், நுணாவில் மத்தி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், முன்னேஸ்வரம் சிலாபத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைரவேஸ்வர ஐயர் சந்திரசேகரசர்மா 11.07.2019 முன்னேஸ்வரத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவேஸ்வர ஐயர் (சின்னமணி ஐயர்) - அனந்தலட்சுமி அம்மா தம்பதிகளின் மகனும், வத்ஸலாதேவியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.07.2019 முன்னேஸ்வரத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயர் லேன்,
நுணாவில் மத்தி, சாவகச்சேரி. (ACH/646)(11.17)

தகவல்: மைத்துனர்
(ப.நீலகண்ட ஐயர்)

## மரண அறிவித்தல்

### மார்க்கண்டு தெய்வேந்திரம்

சங்கரத்தையை பிறப்பிடமாகவும் துணவியை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு தெய்வேந்திரம் 18.07.2019 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் சித்தங்கேணியை சேர்ந்த மார்க்கண்டு கனகம்மா தம்பதிகளின் மூத்த மகனும் இரத்தினம் அன்னம்மா தம்பதிகளின் மருமகனும், கமலராணியின் அன்புக் கணவரும் புஸ்பலதா (துணவி), விஜயேந்திரன் (ஜேர்மனி), சினி (அளவெட்டி), புஸ்பசெல்வி (ஜேர்மனி), சுகந்தினி (ஓய்வூதிய உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்), மைதிலி (கொலண்ட்), சிவானந்தன் (லண்டன்), பொன்திருமலர்(கனடா), நித்தியசக்தி (கொலண்ட்), சாமினி (சங்கரத்தை) ஆகியோரின் அன்புத் தந்தையும் தனுஜா (ஜேர்மனி), தவனேசமலர் (அளவெட்டி), சதானந்தன் (ஜேர்மனி), கேதீஸ்வரன் (ஜசுபி பழரசத் தொழிற்சாலை), தயாபரன் (கொலண்ட்), வாகீஸ்வரி (சமுர்த்தி முகாமையாளர் - மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.), கோணேசதாசன் (கனடா), சுரேஸ்குமார் (கொலண்ட்), சேந்தன் (சிறைச்சாலை பாதுகாவலர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுஜீவன், சஜித்தா, கஜானா, கிருத்திகா, கிரிஷாந்த், மகிஷினி, நிதர்சன், திவிகா, வினுஜா, லக்சிகா, ஆகாஷ், திருமகன், திசானன், லாவண்யா, தாஹிண்யா, மதுரங்கன், கஜானன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.07.2019) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

துணவி,
வட்டுக்கோட்டை

தகவல்,
குடும்பத்தினர்


## தேவை

திருநெல்வேலியில் உள்ள நிறுவனத்திற்கு தையல் தெரிந்த பெண்கள் தேவை.

தொடர்பு :-076 329 0663

## தவறிவிட்டது

வே. மனோகரன் ஆகிய எனது மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம், NIC இல.543631426V ஆகியவை யாழ் சத்திரச் சந்தியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும்.

T.P :- 078 495 8476

## வேலையாள்கள் தேவை

* மேசன் வேலை
* தச்சு வேலை
* பெயின்டர்
* வெல்டர்

பழகுவோரும் விரும்பத்தக்கது.
தங்குமிடம், மதிய உணவு வழங்கப்படும்.

071 693 3601 , 076 686 0047

## சிவப்பு மணல் விற்பனைக்கு

பள்ள நிலங்கள் சீர் செய்வதற்கும், கட்டட அத்திபாரங்கள் நிரப்புவதற்கும் உகந்த சிவப்பு நிற சுத்தமான மணல் எம்மிடம் விற்பனைக்குண்டு.
தேவைப்படுவோருக்கு டிப்பர் மூலம் தங்கள் இடத்துக்கே குறைந்த விலையில் கொண்டு வந்து இறக்க முடியும்.

தொடர்புகளுக்கு:- 077 940 0963
077 790 6291

## தொழில்நுட்ப உத்தியோகத்தர் தேவை

பிரபல்யம் வாய்ந்த தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றுக்குத் தொழில்நுட்ப உதவியாளர் தேவை. கணினி மென்பொருள், வன்பொருள் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

Please Send CV:-
sri05101974@yahoo.com

**தேங்காய் விற்பனைக்கு**

தோலுடன் தேங்காய் மற்றும்
நாற்றுத் தேங்காய் மொத்தமாக
விற்பனைக்கு உண்டு.

**077 921 3835**

**கடை வாடகைக்கு**

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, சிறீலங்கா
இன்சூரன்சுக்கு முன்பாக கடை ஒன்று வாடகைக்கு
உண்டு.

**077 798 6429**

## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில் மீள் சுழற்சிபொருள்கள் மற்றும் விவசாய தேவைக்கான இயற்கைப் பசளையாக்கக் கூடிய கழிவுகள் விற்பனை செய்வதற்கான கூறுவிலை கோரல்

நல்லூர் பிரதேசசபையின் காரைக்கால் இயற்கைப் பசளை நிலையத்தில் உள்ள மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய பொருள்களான கண்ணாடிப்போத்தல், பிளாஸ்ரிக் போத்தல், தகரப்பேணி (சாதாரணம், தட்டையாக்கியது), காட்போட் மட்டை, பழைய பத்திரிகைகள், பிளாஸ்ரிக் பொருள்கள், உக்கக் கூடிய பசளையாகப் பயன்படுத்தக் கூடிய இயற்கைக் கழிவுப் பொருள்கள் என்பவற்றை விற்பனை செய்வதற்காக கூறுவிலைகள் கோரப்படுகின்றன. அவற்றினை அலுவலக நாள்களில், தலைமை அலுவலகத்தில் அனுமதியைப் பெற்று காரைக்கால் இயற்கைப் பசளை நிலையத்தில் பார்வையிடலாம்.

கூறுவிலைகளுக்கான படிவம் பெறவிரும்புபவர்கள் அலுவலகத்தில் ரூபா 1,000.00 பிணைப்பணம், படிவக் கட்டணம் ரூபா 117.30 (வரி உள்ளடங்கலாக) ஆகியவற்றைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| கூறுவிலைப்படிவம் வழங்கும் இறுதித் திகதி :- | 29.07.2019 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.00 |
| கூறுவிலைப் படிவம் ஏற்றுக்கொள்ளும் திகதி:- | 30.07.2019 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 12.00 |
| கூறுவிலைப் படிவம் திறக்கப்படும் திகதி:- | 30.07.2019 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.00 |
| கூறுவிலைப் படிவம் திறக்கப்படும் இடம் :- | கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேசசபை. |

திருதா.தியாகமூர்த்தி
தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்
19.07.2019

## வவுனியா தெற்கு சிங்கள பிரதேசசபை

## கேள்வி அறிவித்தல் - 2019

### ஈரற்பெரியகுளம் கலாச்சார மண்டபமும் அதனுடன் இணைந்த அறைகளையும் வருட குத்தகைக்கு விடுதல்

வவுனியா தெற்கு சிங்கள பிரதேசசபை எல்லைக்குள் அமைந்த ஈரற்பெரியகுளம், கலாச்சாரமண்டபமும் அதனோடு இணைந்த அறைகள் என்பனவற்றை 2019 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03 ம் திகதி தொடக்கம் 2020.08.02ம் திகதிவரை நடாத்துவதற்கு கேள்விகள் 2019.08.02ம் திகதி பி.ப.3.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்கள் கீழ்க்காட்டப்படும் கேள்விப் பிணைப்பணம் கேள்விப்பத்திரக் கட்டணங்கள் ஆகியவற்றை செலுத்தி இவ்வலுவலகத்தில் 2019.08.02ந் திகதி காலை10.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம் கேள்விப்படிவங்களில் ஒரு பிரதி தலைவர், வவுனியா தெற்கு சிங்கள பிரதேசசபை ஈரற்பெரியகுளம் வவுனியா எனும் முகவரிக்கும் ஒரு பிரதி பி.உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பூங்கா வீதி, வவுனியா எனும் முகவரிக்கும் இடப்பட்டுபதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகவும் கையளிக்கலாம். கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் எதற்கான கேள்வி என குறிப்பிடுதல் வேண்டும் குறிப்பிட்ட திகதிக்கு பின்னரோ நேரத்திற்கு பின்னரோ கிடைக்கும் கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2019.08.02ம் திகதி பி.பகல் 3.15 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும் கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும்போது கேள்விதாரர் அல்லது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்டவர் சமூகமாக இருக்க அனுமதிக்கப்படுவர். மேலதிக விவரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகை, மாதாந்த வாடகை மின்சார கட்டணம், தொலைபேசி கட்டணம் என்பவற்றுடன் அரசினால் விதிக்கப்படும் VAT, NBT என்பவற்றை செலுத்துதல் வேண்டும்

| குத்தகை விவரம் | 2019.08.03 தொடக்கம் 2020.08.03 காலப்பகுதிக்கான கேள்வித்தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | கேள்விப்படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| கலாச்சார மண்டபமும் அதனோடு இணைந்த அறைகள் | 1,825,000.00 | 200,000.00 | 2,000.00 |

சபைக்குரிய கலாச்சார மண்டபம் அறைகளுக்கான கேள்விக்குரிய நிபந்தனைகள்

1. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் (கிராம சேவையாளர் ஊடாக பிரதேச செயலாளர் உறுதிப்படுத்தல் வேண்டும்).
2. பகிரங்க கேள்வி வைப்பு கட்டணம் ரூபா 200,000.00 சபைக்கு செலுத்துதல் வேண்டும் (மீளளிக்கப்டும்).
3. கேள்விபடிவக் கட்டணம் ரூபா 2,000.00 செலுத்தவேண்டும்.
4. கலாச்சார மண்டப பாதுகாப்பு கட்டணமாக ரூபா 200,000.00 சபைக்கு செலுத்தவேண்டும், கலாச்சார மண்டபம் சபையின் சொத்தாகும் இச் சொத்துகளுக்கு ஏற்படும் இழப்புகளுக்கு தாங்களே பொறுப்புடையவர்.
5. கலாச்சார மண்டபம் நடத்துவதில் 02 வருட அனுபவம் நிறைந்தவர்கள் என்பதை உறுதிசெய்தல் வேண்டும்.
6. கேள்வியில் சித்திபெறுபவர் கேள்வியில் 1/3 பகுதியை கேள்வி திறந்து சபையால் அறிவித்தல் விட்டு 7 நாள்களுக்குள் கேள்விப் பணத்தை செலுத்தி ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.
7. கேள்வி சித்திபெற்றவர் 1/3 பகுதி பணத்தை 7 நாள்களுக்குள் செலுத்தும் பட்சத்தில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 200,000.00 மீளளிப்பு செய்யப்படும்.
8. கேள்வி சித்திபெற்றவர் 1/3 பகுதி பணத்தை 2019.08.07 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் செலுத்தாதவிடத்து அடுத்துவரும் கேள்விதாரருக்கு விருப்பத்தின் அடிப்படையில் 1வது கேள்விக்கு எடுப்பது சம்மந்தமாக ஒப்புதல் கோரப்படும்.
9. கேள்வியில் சித்திபெறுபவர் 1/3 பகுதியை செலுத்தி ஒப்பந்தம் செய்த பின்னர் மாதாந்த குத்தகையை மாதம் முடிந்து 05 ஆம் திகதிக்கு முன்னர் சபைக்கு செலுத்திப் பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும் செலுத்தத் தவறின் 10 % தண்டம் விதிக்கப்படும்.
10. 03 மாதங்கள் குத்தகைக்கு எடுத்தவர் குத்தகைப் பணத்தை செலுத்தாதவிடத்து எதுவித முன்னறிவித்தலுமின்றி ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு அப்புறப் படுத்தப்படும்.
11. கலாச்சார மண்டபத்திற்கு ஏற்படும் மின்சார கட்டணம், தொலைபேசிக் கட்டணம் என்பன குத்தகைக்கு எடுத்தவர் மாதாந்தம் செலுத்தி பட்டியலை சபைக்கு பாரப்படுத்தல் வேண்டும்.
12. குத்தகைக்கு விடுவது, இரத்துச் செய்வது, மாற்றம் செய்வது என்பவற்றிற்கு கேள்விச் சபையின் தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு. இக் கேள்விகோரலானது தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் பத்திரிகை விளம்பரப்படுத்தலில் இவ் இரு மொழிகளிலும் சொற்பதங்களில் வேறுபாடு காணப்படின் சிங்களமொழியிலான கேள்விகோரலிலுள்ள அனைத்து நிபந்தனைகளும் செல்லுபடியாகும்.

எஸ்.எம்.கசுன் தயாகே ஸ்ரீ அலகல்ல,
தலைவர்.
வவுனியா தெற்கு சிங்கள பிரதேசசபை.

ஈரற்பெரியகுளம்,
வவுனியா.
18.07.2019

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



தோற்றம் 28.01.1949 — மறைவு 20.06.2019

கடந்த 20.06.2019 சிவபதம் அடைந்த எமது அன்பு குடும்பத் தலைவி

**அமரர் குணபாலசிங்கம் உருத்திராட்சரூபவதி (தேவி)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 20.07.2019 சனிக்கிழமை காலை 6 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதரவும்.**


அச்சுவேலி,
கதிரிப்பாய்.

(CS/26611)(11.17)

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
16
.
06
.
1932



மறைவு
16
.
07
.
2019

## வேதவனம் மார்க்கண்டு

**(இளைப்பாறிய அதிபர், எழுதுமட்டுவாழ் வடக்கு)**

யாழ்.சாவகச்சேரி கல்வயலைப் பிறப்பிடமாகவும், உசனை வசிப்பிடமாகவும், பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட வேதவனம் மார்க்கண்டு 16.07.2019 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேதவனம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற முத்துப்பிள்ளையின் (முத்து ரீச்சர்)அன்புக் கணவரும், வாசுகியின் அன்புத் தந்தையும், சின்னையா நவரத்தினத்தின் (சிவா) அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான முருகேசு, பொன்னையா, இரத்தினம், ஆறுமுகம், மாணிக்கம் மற்றும் குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான முருகேசு, விநாசித்தம்பி மற்றும் சிவயோகநாதன், இராமநாதர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (22.07.2019) திங்கட்கிழமை பிரான்ஸ் Gien இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS/26741)(11.17)

**தகவல்: மகள், மருமகன்**

வாசுகி - (மகள் - 0033766585399, 0033652285495)
நவரத்தினம் (மருமகன் - 0033238361446)

## மரண அறிவித்தல்கள்



தோற்றம்
22 . 03 . 1946

மறைவு
18 . 07 . 2019

### யோகநாதன் பத்மாவதி (பட்டு)

கன்னாதிட்டியைப் பிறப்பிடமாகவும், கலைப்புலவர் வீதியை வசிப்பிட மாகவும் கொண்ட யோகநாதன் பத்மாவதி 18.07.2019 இறைபத மடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை மாணிக்கம் தம்பதி யரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், யோகநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலாயுதப்பிள்ளை, அமிர்தலிங்கம் மற்றும் நவரட்னம் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், பஞ்ச லிங்கம் மற்றும் மகேஸ்வரதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நந்தினி, சுபாஜினி (ஜேர்மனி), கஜேந்திரன் (லண்டன்), சுதாகர் (பிரான்ஸ்), மேனகா ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சுரேஸ் குமார் மற்றும் ரவிக்குமார் (ஜேர்மனி), கார்த்திகா (லண்டன்), யயந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், தருஷன், சுபராஜ், கீர்த்தனா, ரகின், ரகிதா, ரபின், வேதிகா, வருணிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.19, கலைப்புலவர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொ.பேசி: 077 633 7758**



தோற்றம்
29 . 04 . 1947

மறைவு
18 . 07 . 2019

### திருமதி இராசேந்திரம் திரேசா

நாரந்தனை வடக்கு பெரியபுலம் வீதியைப் பிறப்பிடமாகவும், இல. 231, இராச வீதிச் சந்தி, கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசேந்திரம் திரேசா அவர்கள் 18.07.2019 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வஸ்தியாம்பிள்ளை இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், இராசேந்திரத்தின் அன்பு மனைவியும், நிஜிலா (அபிவிருத்தி உத்தியோகத்தர், சுகாதார அமைச்சு, கொழும்பு) , நிறஞ்சன்(சஞ்சனா பன்முக வர்த்தகம், கல்வியங்காடு ), நித்தியா (உதவி முகாமையாளர் , மக்கள் வங்கி, சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ், கிறிஸ்தோத்திரம், கிறிஸ் ரீனா மற்றும் மரிஸ்ரெலா, இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயராகவன் (சுவிஸ்), புஸ்பலதா (பிரதேச விற்பனை ஒருங்கிணைப்பாளர், LIC, யாழ்ப்பாணம்), ஜெகதீபன் (தீபன் ஏக விநியோகஸ்தர், கோப்பாய்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் , சஞ்ஷயன், சகீனா, அக்ஷயா, அஸ்விந் அபிஷனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (19.07.2019) வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு ஆடியபாதம் வீதி, கல்வியங்காட்டில் அமைந்துள்ள புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலிஒப்புக்கொடுக்கப்பட்டுகொஞ்சேஞ்சிமாதாசேமக்காலையில்நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு: நிரஞ்சன் (மகன்) +94 077 122 0100**

## ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## கேள்வி கோரல்

**01) எரிபொருள் நிரப்பு நிலைய நிலக்கீழ் தாங்கிக்கான தொட்டி அமைத்தல் -**

எமது சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலைய நிலக்கீழ் தாங்கி தொட்டி அமைத்தல் வேலைக்கான கேள்வி கோரல் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கோரப்படுகின்றது. இது தொடர்பான விவரங்களை சங்க அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத வைப்பாக ரூ.1000/- செலுத்தி கேள்விப் பத்திரங்களை 27.07.2019 இற்கு முன் பெற்றுப் பூரணப்படுத்தி 29.07.2019 இற்கு முன்னதாக " பொதுமுகாமையாளர், ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம், ஊர்காவற்றுறை" எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

**02) நிலக்கீழ் தாங்கி கொள்வனவுக்கான கூறுவிலை கோரல்**

பின்வரும் அளவுடைய நிலக்கீழ் தாங்கிகள் நியமதரத்தில் உற்பத்தியாளர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றது. (ஏற்றுக் கூலி உட்பட)

**3000 (IG) 06mm - 02 தாங்கிகள்**

கூறுவிலைகளை உற்பத்தியாளர் தாங்களே தயாரித்து 29.07.2019 இற்கு முன்னதாக **"பொதுமுகாமையாளர், ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம், ஊர்காவற்றுறை"** எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும்.

**குறிப்பு:- அலுவலக நேரம் (காலை 8.30 மணி - மாலை 5.00 மணிவரை)**

**தொலைபேசி இல :- 021 221 1648**

**பொதுமுகாமையாளர்,**
**ஊர்.ப.நோ.கூ.சங்கம், ஊர்காவற்றுறை.**

(CS/26758) (11.17)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
## வெளிவாரிப் பரீட்சைகள்

**வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி (வெளிவாரி)**

1. முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை – 2017
2. இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை – 2017
3. மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை – 2017

மேற்படி பரீட்சைகளினை 03.08.2019 (சனிக்கிழமை) தொடக்கம் 25.08.2019 (ஞாயிற்றுக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளினையும் 29.07.2019 (திங்கட்கிழமை) தொடக்கம் 02.08.2019 (வெள்ளிக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு **021 - 222 - 3612** என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**
**18.07.2019**

(IN/10720) (11.17)

## மரண அறிவித்தல்
### இறுதிக்கிரியைகள் மாற்றம்



தோற்றம்
30 . 01 . 1992

மறைவு
29 . 06 . 2019

### ஸ்ரீஸ்கந்தராசா ஜெயரூபன்

அரியாலையைப்பிறப்பிடமாகவும் பிரப்பங்குளம் வீதி, வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் பிரான்ஸில் வசித்தவருமான ஸ்ரீஸ்கந்தராசா ஜெயரூபன் 29.06.2019 அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் ஸ்ரீஸ்கந்தராசா - ஜெயகுமாரி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் ஜெயபாஸ்கரன் (பிரான்ஸ்), ஜெகன் (பிரான்ஸ்), ஜெயசீலன் (வாயுபுத்திரா போன் சொப், யாழ்ப்பாணம்), ஜெயவாஜினி (யாழ்ப்பாணம்), ஜெசிந்தன் (பிரான்ஸ்), ஜெயவாகீசன் (யாழ் மத்தியகல்லூரி A/L மாணவன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**ஜெயசீலன் : 077 364 4246,**
**ஸ்ரீஸ்கந்தராசா : 076 051 7347, 077 468 9401**

## ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்
### வலிகாமம் தெற்கு பிரதேசசபை, உப அலுவலகம், ஏழாலை.
### வட்டாரம் - 18, பலாலி வீதி.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலகத்துக்குட்பட்ட புன்னாலைக்கட்டுவன் தெற்கு என்னும் முகவரியில், வட்டாரம் - 18, பலாலி வீதியில் உள்ள ஆதனமானது எமது ஆதனவரிப் பதிவேட்டில் முன்பு பதிவுசெய்யப்படவில்லை.

வடக்கு மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி தற்போது வலிகாமம் தெற்கு மல்லாகம் கோவிற்பற்று ஏழாலை இறை கிராம சேவகர் பிரிவு J/207 **புன்னாலைக்கட்டுவன் தெற்கு** எனும் முகவரியில் உள்ள **“ வதிராக்கடவை”** நில.பர. **நான்கும் குழி பன்னிரண்டு தசம் மூன்று ஒன்பதும்** (நில 04 குழி 12.39) இதற்கு எல்லைகள் கிழக்கு சின்னத்தம்பி அரசரத்தினத்தின் ஆதனம் வடக்கு மல்லாகம் புன்னாலைக்கட்டுவன் வீதி மேற்கு தாணியா செல்வரமேசின் ஆதனமும் நல்லதம்பி கந்தையாவின் ஆதனமும் தெற்கு முதலி வைரமுத்துவின் ஆதனமும் இவ்வெல்லைப்படி இதனடங்கலும் கிணறும் பயிர்களும் எனக்குறிப்பிடப்பட்ட ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு **ஆறுமுகம் ரகுபதி** அவர்களால் **2017.10.30** ஆம் திகதி எழுதப்பட்ட **90 ஆம்** இலக்க உறுதி மூலம் **பசுபதி சுதாகரன் பெண் நளினி** ஆகியோரை வந்தடைந்துள்ளது. உத்தரவு பெற்ற நில அளவையாளர் வி.தவராசா அவர்களால் தயாரிக்கப்பட்ட 1207 ஆம் இலக்க 2017.10.21 ஆம் திகதிய நில அளவை வரைபடத்தின்படி **துண்டு 01 எனக் குறிப்பிடப்பீட்ட நிலப்பரப்பு 04 குழி 04.21** அளவுடையதாகக் காணப்படுகின்றது. குறித்த ஆதனத்தினைப் பிரதேச சபையின் ஆதனவரிப் பதிவேடுகளில் **பசுபதி சுதாகரன் பெண் நளினி** எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்யும் பொருட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த ஆதனமானது ஏழாலை தெற்கு ஏழாலையைச் சேர்ந்த செல்லர் தனபாலசிங்கம் பெண் தனநாயகி ஆகியோரால் **பசுபதி சுதாகரன் பெண் நளினி** என்பவருக்குப் பிரசித்த நொத்தாரிசு **ஆறுமுகம் ரகுபதி** அவர்களால் 2017.10.30 ஆம் திகதி எழுதப்பட்ட 90ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் வந்தடைந்துள்ளது. மேற்குறித்த உறுதியில் இவ்வாதனம் 1979ஆம் ஆண்டு ஆவணி மாதம் 18 ஆம் திகதி யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிஸ் பூ.இளையதம்பி அவர்கள் முகதாவில் இல.31292 இல் முடிந்த சீதன உறுதிப்படியும் 1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13ஆம் திகதி யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிஸ் பூ.இளையதம்பி அவர்கள் முகதாவில் இல. 35306 இல் முடிந்த அறுதி உறுதிப்படியும் 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் திகதி யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிஸ் மு.சபாநாதன் அவர்கள் முகதாவில் இல. 5907 இல் முடிந்த அறுதி உறுதிப்படியும் எமது நீடித்த தடங்கலற்ற குறுக்கீடற்ற பிரசித்தமான ஆட்சியிலும் உரித்திலும் உள்ளதென்றும் வெளிப்படுத்துகின்றோம் எனவும் **1.** முதலாவது 31292 ஆம் இலக்க சீதன உறுதியில் ஆதன நிலப்பரப்பு 5 குளி 1 1/5 என்றும் பின்னர் ஆதனத்தின் மேற்குப் பக்கமாக 121 அடி நீள 24½ பாதைக்குக் கொடுத்து மற்றும் தங்கள் மகளுக்கு 2905ஆம் இலக்க உறுதியின் மூலம் வழங்கிய நிலப்பரப்பு 02 போக தற்போது மிகுதியாக நிலப்பரப்பு 02 உம் குழி 12.39 உம் மிகுதியாவுள்ளது. இவ்வாதனமானது யாழ். காணிப்பதிவகத்தில் H419/119 ஆம் இலக்கத்தில் பதியப்பட்டுள்ளது. **2.** இரண்டாவது 35306ஆம் இலக்க அறுதி உறுதியால் விற்பனையாளர்களால் கொள்வனவு செய்யப்பட்ட அயல் ஆதனம் நில.பர 01 இவ்வாதனம் யாழ்.காணிப் பதிவகத்தில் H718/176 ஆம் இலக்கத்தில் பதியப்பட்டுள்ளது. **3.** மூன்றாவது அறுதி உறுதி இலக்கம் 5907 மூலம் விற்பனையாளர்களால் கொள்வனவு செய்த அயல் ஆதனம். இவ்வாதனமானது யாழ். காணிப்பதிவகத்தில் H779/67 ஆம் இலக்கத்தில் பதியப்பட்டுள்ளது. மேற்படி மூன்று ஆதனங்களும் அருகருகே அமைந்தும் விற்பனையாளர்களின் தொடர்ச்சியான உரித்திலும் ஆட்சியிலும் இருந்து வந்துள்ளது எனவும் இவ்வுறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஆதனத்தின் தாயுறுதி இலக்கங்கள் 31292 உம் 32365 உம் மற்றும் தோம்பு இலக்கம் H419/119 உம் தொலைந்துவிட்டதால் உறுதிப்படுத்திய சான்றிதழ் ஒன்றை வழங்கமுடியாதுள்ளது எனவும் யாழ்ப்பாண மாவட்ட காணிப்பதிவகத்தினால் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்குறித்த ஆதனத்தினை தற்போதைய உரிமையாளர் **பசுபதி சுதாகரன் பெண் நளினி** எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் **இன்றிலிருந்து 30 நாள்களுக்குள்** தகுந்த **ஆதாரங்களுடன்** எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **பசுபதி சுதாகரன் பெண் நளினி** எனும் பெயருக்குப் பெயர்மாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளுக்கும் வலிகாமம் தெற்கு பிரதேசசபை எந்தவகையிலும் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை.**

## காணி உரிமைமாற்ற அறிவித்தல்
### வலிகாமம் வடக்கு பிரதேசசபை - உப அலுவலகம் - மல்லாகம்

விண்ணப்பதாரர் - ஆனந்தநடராசா நவானந்தன் மனைவி ஆனந்தகௌரி
முகவரி - R.D.S. ஒழுங்கை, மல்லாகம்.

வலிகாமம் வடக்கு, பிரதேசசபை மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் - 14, யாழ்ப்பாண வீதி. ஆதன இலக்கம் 70/02 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் திருமதி N.அம்பிகைபாகன் எனும் பெயரில் ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் ஆனது பிரசித்த நொத்தாரிஸ் செல்லையா இராமலிங்கம் முகதாவில் சங்கரப்பிள்ளை அம்பிகைபாகன் பெண் நகுலாம்பிகை, சிவப்பிரகாசம் பஞ்சலிங்கம் பெண் மகேஸ்வரி ஆகியோர் 9170/10.06.1970 இலக்க உறுதியின் மூலம் சரவணமுத்து சர்வேந்திரன் மனைவி பூங்கோதைக்கு அரைப்பங்கினை சீதனமாகவும் அதே ஆதனத்தின் அரைப்பங்கினை அதே நொத்தாரிஸ் முகதாவில் 13597/13.04.1981 இலக்க உறுதி மூலம் ஆனந்தநடராசா நவானந்தன் மனைவி ஆனந்தகௌரிக்கு சீதனமாக வழங்கப்பட்டுள்ளது.

பின்னர் சரவணமுத்து சர்வேந்திரன் மனைவி பூங்கோதையும், ஆனந்தநடராசா நவானந்தன் மனைவி ஆனந்தகௌரியும் பிரசித்த நொத்தாரிஸ் மு.சபாநாதன் முகதாவில் 4683/09.04.1998 இலக்க உறுதியின் மூலம் சுப்பிரமணியம் இரவீந்திரன் பெண் அந்தோணியம்மா என்பவருக்கு வீட்டில் சொரியலாய் ¼ பங்கினை நன்கொடையளித்துள்ளனர். அதன் பின் அவர்கள் பிரசித்த நொத்தாரிஸ் மா.திருவாதவூரன் முகதாவில் 2124/02.03.2018 இலக்க உறுதியின் மூலம் ஆனந்தநடராசா நவானந்தன் மனைவி ஆனந்தகௌரி ஆகியவர்களுக்கு வீட்டில் உள்ள சொரியல் ¼ பங்கினை அறுதியளித்துள்ளனர்.

இவ்வாதனத்தின் 1981 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 13 ஆம் திகதி செல்லையா இராமலிங்கம் முகதாவில் எழுதிய 13597 இலக்க உறுதியானது யுத்த சூழ் நிலையில் தொலைந்துவிட்டதெனவும் அதன் பிரதியினை யாழ்ப்பாணம் காணிப்பதிவுக் கந்தோரில் விண்ணப்பித்தபோது யுத்த காலத்தில் தொலைந்து விட்டதென ஆவணம் வழங்கப்பட்டமையினால் பிரசித்த நொத்தாரிஸ் மா. திருவாதவூரன் முகதாவில் 3709/13.08.2018 இலக்க உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.

### ஆதன விவரம்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் கோவிற்பற்றும் இறையும், மல்லாகம் மத்தி கிராம சேவையாளர் பிரிவு (J/213) மயிலியோடையும் கொட்டாரக்கலட்டியும் நிலப்பரப்பு பதினொன்றும் குழி பதின்மூன்று தசம் ஏழு ஆறும் (நிலப்பரப்பு 11 குழி 13.76) வீடும் கிணறும் எல்லைகள் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.லோகநாதன் அவர்களின் வரைபட இலக்கம் (J/15166) இன்படி நிலப்பரப்பு 11 குழி 13.76 என காட்டப்பட்டுள்ளது.


கிழக்கு - பிரத்தியேகப்பாதை
வடக்கு - தங்கப்பிள்ளை சங்கரப்பிள்ளையின் ஆதனம்
மேற்கு - பொன்னம்பலம் கோபாலராசாவின் ஆதனமும் பொன்னர் தங்கராசாவின் ஆதனமும், பாதையும்.
தெற்கு - ஒழுங்கை

மேற்குறித்த ஆதனத்தை ஆனந்தநடராசா நவானந்தன் மனைவி ஆனந்தகௌரி எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாள்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சோ. சுகிர்தன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசபை,**
**காங்கேசன்துறை, (கொல்லங்கலட்டி)**



## வழி காட்டுவோம்




### தூக்கை...

ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் சபை, பிரான்ஸ், ஜேர்மன், இத்தாலி, நெதர்லாந்து, ருமேனியா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் தூதரகங்களின் ஒருமித்த இணக்கப்பாட்டுடனேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. (எ)

### கன்னியா...

டமைப்பின் உறுப்பினர் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதியில் அமைந்திருந்த பிள்ளையார் ஆலயத்தை உடைத்து பௌத்த விகாரை அமைக்கும் முயற்சியைக் கண்டித்தும் தமிழர் கலாசார வழிபாட்டு முறையை மேற்கொள்ளச் சென்ற மக்களை தடை செய்தும், இந்து மதகுருக்களை இழிவுபடுத்தும் நோக்கிலும் செயற்பட்ட சிங்கள இனவாதிகளுக்கு எதிராக இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

குறித்த தீர்மானம் இனத்தின் இருப்போடு தொடர்புபடுவதனால் குறித்த தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு இதற்கு உடனடியாக இந்து கலாசார அமைச்சு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும் உடன் இந்தத் தீர்மானம் இந்து கலாசார அமைச்சுக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் வழிமொழிந்தார். (ம-105)

### எதிர்வரும்...

அறிவித்துள்ளது.
அத்துடன் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கான கருத்தரங்குகள், மேலதிக வகுப்புக்கள் என்பன எதிர்வரும் 31ஆம் திகதி நள்ளிரவுடன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.
எந்தவொரு தனி நபரோ அல்லது நிறுவனமோ இந்தத் தடை உத்தரவை கருத்திற்கொள்ளாது செயற்பட்டால், பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவாளியாக கருதப்படுவார் என பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித தெரிவித்துள்ளார். (ம)

### தண்ணீரை..

டுத்தி அதனூடாக தண்ணீரைச் சேமிக்க வேண்டும் என்று வவுனியா நகரசபையின் உறுப்பினர் ஏ.ஆர். எம்.லரீப் கோரிக்கை விடுத்தார்.
நகர சபையின் 16ஆவது மாதாந்த சபை அமர்வு நேற்று நடைபெற்றது. அதன்போதே இந்தக் கோரிக்கையை விடுத்தார்.
முதன்மை வீதியில் நவீன தரத்திலான தெருவிளக்கு அமைக்கும் திட்டங்கள் தேவை. வர்த்தக நிலையங்கள் பெயர் மாற்றம் விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அங்காடி வியாபாரிகளின் நீண்ட காலப் பிரச்சினையான நிரந்தர இட ஒதுக்கீடு தீர்க்கப்பட வேண்டும்.
மாடு அறுக்கும் தொழுவத்தை பொருத்தமான வகையில் மக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத இடத்துக்கு மாற்ற வேண்டும்.
பல்துறை விளையாட்டுக்களுக்காகப் பயன்படுத்தப்படும் நகர சபை மைதானத்தை சீரமைக்க வேண்டும்.
மைதானத்தைச் சுற்றியுள்ள கழிவுதண்ணீர்க் கான்கள் தூய்மைப்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார். (த)

# கேள்வி அறிவித்தல்

## சபைநிதி வேலைத்திட்டம் (CF)– 2019

## சாவகச்சேரி பிரதேசசபை

1. தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை கொடிகாமம் அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 30.06.2016 ஆந் திகதிய 04/2016(i) ஆம் இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கையின் படி வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்தில் கொள்ளப்படலாம்.
3. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடிவீதி புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள்,கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம் தொலைபேசி இல-0212050356, தொலைநகல் - 0212050348 மின்னஞ்சல்: chavakachcherips1@yahoo.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் **19.07.2019** ஆம் திகதியிலிருந்து **01.08.2019** ஆம் திகதிவரை அலுவலக நாள்களில் மு.ப **9.00** மணிமுதல் **14.00** மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் அவர்களிடமிருந்து **19.07.2019** ஆம் திகதியிலிருந்து **01.08.2019** ஆம் திகதிவரை மு.ப **9.00** மணிக்கும் பி.ப **02.00** மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. **2,000/-** (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் எனும் முகவரிக்கு **01.08.2019ஆம் திகதி பிற்பகல் 03.00 மணிக்கு** முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்தொன்பது 18.09.2019) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்


**கேள்விஅறிவித்தல் அட்டவணை**

| கேள்வி எண்ணிக்கை | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (Vat, நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்விபிணை வைப்பு(ரூபா) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(6) /02/ CF/2019/ 27,28,,29 | 1) வரணி பொதுச் சந்தை சுற்றுமதில் திருத்தம்,<br>2) வரணி உப அலுவலக சுற்றுமதில் திருத்தம், தலைமை<br>3) தலைமை அலுவலக வாகன சுத்திகரிப்பு நிலைய கூரை நிர்மாணம் கொடிகாமம் | 0.76 | 01 மாதம் | C9 | 7700.00 | 14.10.2019 |
| NP/14/41(6)/02/ CF/2019/30 | கல்லாகம் மயான எரி கொட்டகை அமைத்தல் கைதடி | 0.05 | 01 மாதம் | C9 | 500.00 | 14.10.2019 |
| NP/14/41(6) /2/ CF/2019/31 | பாலவிதல் மயான எரி கொட்டகை அமைத்தல் கச்சாய் | 0.39 | 01 மாதம் | C9 | 4,000.00 | 14.10.2019 |
| NP/14/41(6)/02/ CF/2019/32 | பொதுச் சந்தை திருத்தம், சுற்றுமதில் அமைத்தல் கைதடி | 0.782 | 01 மாதம் | C9 | 8,000.00 | 14.10.2019 |
| NP/14/41(6)/02/ CF/2019/33,34,35 | 1) மிருசுவில் சந்தை சுற்றுமதில் நிர்மாணம்<br>2) உப அலுவலக சுற்றுமதில் நிர்மாணம் மிருசுவில்,<br>3) வாசிகசாலை சுற்றுமதில் நிர்மாணம் மிருசுவில், | 0.73 | 01 மாதம் | C9 | 7400.00 | 14.10.2019 |
| NP/14/41(6)/02/ CF/2019/ 36,37,38 | 1)இடைக்குறிச்சி கரம்பைக்குறிச்சி வீதி திருத்தம் மந்துவில்,<br>2)பட்டாவளை வீதி திருத்தம் சரசாலை,<br>3)உள்ளக வீதி திருத்தம் மந்துவில் வட்டாரம் | 0.26 | 01 மாதம் | C9 | 2,700.00 | 14.10.2019 |

| இல | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை(மில்லியன் ரூபா) | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை வைப்புத் தொகை | வைப்பு செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(6)/02/ CF/2019/39 | வீதி விளக்குகள் கொள்வனவு | 1.00 (இலங்கை மின்சார சபை பொருத்துதல் கட்டணம் உள்ளடங்கலாக) | அங்கீகரிக்கப் பட்ட தரம் | 10,000.00 | 14.10.2019 |

10. கேள்விகோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 26.07.2019 ஆம் திகதிபி.ப. 03.00 மணிக்கு சாவகச்சேரி பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

தலைவர்,
பெறுகைக்குழு,
சாவகச்சேரி பிரதேசசபை,
18.07.2019



# ஒற்றுமையே வலிமை

கோவில் கோபுரத்தில் சில நீல நிறப் புறாக்களும் சில மஞ்சள் நிறப் புறாக்களும் அடக்கலமாகியிருந்தன. கோபுரத்தில் திருவிழாவுக்கான வேலைகள் தொடங்க ஆரம்பித்தால் இது நாள்வரை எதிரும் புதிருமாக இருந்து வந்த இரு வகைப் புறாக் கூட்டமும் இப்போது ஒன்று கூடி வேறு இடம் தேடிப் புறப்பட்டன. செல்லும் வழியில் ஓரிடத்தில் வெயிலில் உலர்த்துவதற்காகப் பரப்பப்பட்ட தானியங்களைத் தின்று தீர்த்து விட்டு மரக்கிளை ஒன்றில் அமர்ந்தன.

தானியத்தை உலரவிட்டுச் சென்ற வேடன் திரும்பி வந்து பார்த்தபோது தானிய மணிகள் ஒன்று கூட இல்லாதது கண்டு அதிர்ச்சி அடைந்தான். தானியங்கள் உலரைப் போட்ட இடத்தில் புறாக்களின் எச்சம் காணப்பட்டது. அவற்றைக் கண்ணுற்ற வேடன் தானிய மணிகளுக்கு என்ன நடந்திருக்கும் என ஊகித்துக் கொண்டான்.

நாளைக்கு இந்தப் புறாக்களை எப்படியும் வலை விரித்து பிடித்து விட வேண்டும் என்று முடிவு செய்து அதன்படி மறுநாள் வலை விரித்து வைத்தான்.


அடுத்த நாள் அங்கே வந்த புறாக்கள் தானியத்தைப் பார்த்ததும், அதை உண்ணும் ஆசையில் வேகமாக தரையிறங்கி உண்ணத் தொடங்கின. சில நொடி நேரங்களில் அவற்றின் கால்கள் வலைகளில் சிக்கிக் கொண்டன.

சற்று தொலைவில் மறைந்திருந்த வேடன் நிலைமையை நன்கு புரிந்து கொண்டு புறாக்களை பிடிக்க ஓடி வந்தான். வேடன் வருவதைப் பார்த்த புறாக்கள் ஆபத்தை உணர்ந்து கொண்டு, உயிர் மீதுள்ள ஆசையால் எல்லாப் புறாக்களும் ஒன்றாக இறக்கையை விரித்து வலையோடு சேர்ந்து பறக்க ஆரம்பித்தன.

உடனே வேடன், "ஐய்யய்யோ… புறாக்கள் போனாலும் பரவாயில்லை. நான் கஷ்டப்பட்டு தயாரித்த வலையும் அதோடு போகிறதே…" என்று புலம்பிக் கொண்டே, பறந்து செல்லும் புறாக்களின் பின்னே ஓடினான்.

பறந்து செல்லும் போதே, அதில் இருந்த மஞ்சள் புறாக்கள் கர்வத்தோடு, "எங்களது வலிமையால்தான் நீங்களும் காப்பாற்றப்பட்டு இருக்கிறீர்கள். நாங்கள் சிறகை மிக வேகமாக அடித்து பறக்கவில்லை என்றால்… அவ்வளவுதான்" என்று கூறின. உடனே நீல நிறப் புறாக்களும் தம் பங்குக்கு, "நாங்கள்தான் வலிமையோடு பறந்தோம். உங்களுக்கு அழகு இருக்கலாம், ஆனால் ஆற்றல் கிடையாது" என்று கூறிக் கொண்டு ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக் கொண்டே பறந்ததினால். அவற்றின் பறக்கும் வேகம் குறைய வலை ஒரு மரக்கிளையில் சிக்கிக் கொண்டது.

இதனைப் பார்த்த வேடனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. "ஒற்றுமையே வலிமை" என்ற பழமொழிக்கேற்ப இந்தப்புறாக்கள் தப்பி விடுமோ என்று பயந்தேன். நல்லவேளையாக "ஒற்றுமை நீங்கியதால் அனைவருக்கும் தாழ்வு" என்ற நெறிப்படி பறந்த புறாக்களை நோக்கி புறாக்களே நன்றி" என்று கூறிக்கொண்டு அவைகளைத் தனது கூடைக்குள் போடத் தொடங்கினான்.




## விடுபட்ட இடத்தில் வரவேண்டிய பகுதியை கண்டுபிடிப்போம்

## விடுகதைகள்

1. முள்ளுக்குள்ளே முத்துக்கு வலயம். அது என்ன?
2. அள்ள அள்ளக் குறையாது; ஆனால் குடிக்க உதவாது. அது என்ன?
3. உரசினால் உயிரை விடுவான். அவன் யார்?
4. கழற்றிய சட்டையை மறுபடியும் போடமாட்டான். அவன் யார்?
5. பட்டுப்பை நிறைய பவுண் காசு அது என்ன?
6. ஒட்டியவன் ஒருத்தன், பிரித்தவன் இன்னொருவன். அது என்ன?

## விடைகள்

1. பலாப்பழம்
2. கடல்நீர்
3. தீக்குச்சி
4. பாம்பு
5. மிளகாய்
6. கடிதம்



# நிலாவில் உலா வந்தார் நீல்ஆம்ஸ்ரோங்

1969ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் திகதி அப்பல்லோ II என்ற விண்கலம் சந்திரத் தரையில் இறங்கியது. அதிலிருந்து இறங்கிய நீல்ஆம்ஸ்ரோங் சந்திர மண்ணில் கால்பதித்த முதல் மனிதனாகப் பிரசித்தி பெற்றார். இந்த நிகழ்வின் மூலம் சந்திரனில் தரை இறங்கிய முதலாவது விண்வெளி வீரர் என்ற பெருமைக்குள் அவரின் பெயர் உலகறியச் செய்யப்பட்டது. இவரைத் தொடர்ந்து அவரது சக விண்வெளி விஞ்ஞானியான புஸ் ஆல்ட்றின் சந்திரத் தரையில் இறங்கி அவருடன் இணைந்து கொண்டர். இருவரும் நடந்து சந்திரனின் ஈர்ப்புச் சக்தியின் வலிமையை அளந்தனர்.

சந்திரனின் பாறை மாதிரிகளையும் தரையின் அமைப்பையும் படம் பிடித்துக் கொண்டனர். அவர்கள் மூன்று மணி நேரம் நிலாவில் நடந்தனர். இவர்கள் நிலாவில் உலாவிய காட்சியைப் பூமியில் உள்ள மக்கள் தொலைக்காட்சியூடாகப் பார்த்தும் வானொலி மூலம் கேட்டு மகிழ்ந்தனர்.

"என்னுடைய சிறிய காலடி மனித குலத்துக்கு ஒரு மாபெரும் பாய்ச்சல் ஆகும்" என நீல்ஆம்ஸ்ரோங் தனது நிலாப் பயணம் குறித்து கூறிக்களித்தார். இவர் தனது 30ஆவது வயதில் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் பயிற்சி பெற்றார். அப்பல்லோ விண்கலங்கள் தயாரிக்கப்பட்டு விண்வெளி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட வேளையிலே அப்பல்லோ விண்கலத்தின் மூலம் இவர் சந்திரனுக்குப் பயணமானார். முதன் முதலாக சந்திரனில் கால்பதித்தவர் என்ற பெருமை அவருக்கு கிடைத்தது. 2012ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதி அவர் தனது 82ஆவது பிறந்த நாளைக் கொண்டாடிய பின்னர் ஓகஸ்ட் 25ஆம் திகதி சனிக்கிழமை காலமானார்.



## தீராத விளையாட்டுப் பிள்ளை

தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ண்ன்
தெருவிலே பெண்களுக்கு ஓயாத தொல்லை

தின்னப் பழங்கொண்டு தருவான் - பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்
என்னப்பன் என்னையன் என்றால் - அதனை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான்

புல்லாங் குழல்கொண்டு வருவான் - அமுது
பொங்கித் ததும்புநற் கீதம் படிப்பான்,
கள்ளால் மயங்குவது போலே - அதைக்
கண்மூடி வாய்திறந்தே கேட்டிருப்போம்

அங்காந்து இருக்கும்வாய் தனிலே - கண்ணன்
ஆறேழு கட்டெறும் பைப்போட்டு விடுவான்
எங்காகிலும் பார்த்த துண்டோ - கண்ணன்
எங்களைச் செய்கின்ற வேடிக்கை யொன்றோ

## மரண அறிவித்தல்

### திருமதி திருமகள் தனபாலரத்தினம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை - யா/ கோண்டாவில் இந்துக்கல்லூரி)



தோற்றம் 01.06.1958 மறைவு 17.07.2019

புகையிரத நிலைய வீதி, கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருமகள் தனபாலரத்தினம் 17.07.2019 புதன்கிழமை காலமானார்.

அன்னார் கோண்டாவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி - மங்கையற்கரசி தம்பதியரின் மகளும், காங்கேசன்துறையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அழகராஜா–தனலக்ஷ்மிதம்பதியரின் மருமகளும், தனபாலரத்தினத்தின் (ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர் - நவாலி வடக்கு) அன்பு மனைவியும், பூங்குழலி, ஆதவன் ஆகியோரின் அன்புத் தாயும், ஜானகி, காலஞ்சென்ற சிவானந்தன் மற்றும் சிவராஜா, சிவகுமாரன், சகுந்தலா, அனுசியா, சிவபாலன், தேவகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற முத்துகுமாரு மற்றும் கௌரி, ரஞ்சினி, மகேந்திரன், ஜெயேந்திரன், சிவரதி, லகுபரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (21.07.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புகையிரத நிலைய வீதி,**
**கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**021 205 3311**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# சிந்திப்பீர்களாக!

குடாநாட்டில் ஆலயங்கள் சிலவற்றில் நிகழ்ந்து வந்த வேள்வி தொடர்பான வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு நேற்று வெளியாகியது. இந்தத்தீர்ப்பை அடுத்து வேள்வியை நடத்துவதற்கு நீதிமன்றம் அனுமதித்துவிட்டது என்கிற கருத்து வேகமாகப் பரவிவருகின்றது. குறிப்பாகச் சொன்னால் "வேள்விக்கு நீதிமன்றம் அனுமதி" என்பதாகப் பொது வெளியில் இந்தக் கருத்து பரவுகின்றது.

ஆனால், மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்திலும் இடம்பெற்ற வழக்குகள் வேள்வியை நடத்தலாமா இல்லையா என்பதைப் பற்றியவையல்ல. இறைச்சிக்காக மிருகங்களை வெட்டுவதற்கான சட்டங்களின் கீழ் ஆலயங்களில் மிருகங்கள் வெட்டப்படலாமா இல்லையா என்கிற சட்டச்சிக்கல் தொடர்பான வழக்குகளே அவை. அதன் மீதே மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பும் வந்திருக்கின்றது. இறைச்சிக் கடைச்சட்டங்களின் கீழ் ஆலயத்தில் மிருகபலியிடுவதற்குத் தடை விதிக்கப்பட வேண்டும் என்பதே யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு. அதனடிப்படையில் இறைச்சிக்கடைச் சட்டங்களின் கீழ் ஆலயங்களில் கொல்களம் உருவாக்கப்படுவதற்கு அதிகாரிகள், பிரதேசசபையினர் அனுமதிக்கக்கூடாது என்று மேல் நீதிமன்றம் தடை விதித்தது.

இவ்வாறு விதிக்கப்பட்ட தடை 2013ஆம் ஆண்டில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நடந்த சிறி போதிராஜ நிதியம் எதிர் பொலிஸ் மா அதிபர் வழக்கிலும் பின்னர் 2015இல் உயர் நீதிமன்றத்தில் நடந்த கனகரட்ணம் எதிர் சிறி போதிராஜ நிதியம் வழக்கில் உறுதிப்படுத்தப்பட்ட தீர்ப்புக்குஎதிராக இருப்பதைச் சுட்டிக்காட்டி, எனவே அதனை இல்லாது செய்ய வேண்டும் என்று கேட்கும் மனு கவுணாவத்தை நரசிம்ம வைரவர் கோயில் தலைவர் சின்னத்துரை புஸ்பராஜாவால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

மனுவை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் தனது தீர்ப்பை நேற்று வழங்கியது. யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஏற்கனவே 2013ஆம் ஆண்டு மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு பின்னர் 2015ஆம் ஆண்டில் அந்தத் தீர்ப்பை உறுதிப்படுத்தி உயர் நீதிமன்றமும் வழங்கிய தீர்ப்பு ஆகியவற்றுடன் முரண்படுவதால் அந்தத் தீர்ப்பை தள்ளுபடி செய்வதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்தது.

ஆலயத்தில் கொல்களம் ஒன்றை உருவாக்குவதற்கு இறைச்சிக் கடைச் சட்டங்களின் கீழ் அனுமதி கோரப்பட்டால் உரிய அதிகாரிகள் அதனை மீளாய்வு செய்து அனுமதிக்கலாம் அல்லது நிராகரிக்கலாம். அப்படியல்லாமல் அதற்குத் தடை விதித்தால் அது இறைச்சிக் கடைச் சட்டங்களை உரிய அதிகாரிகள் நடைமுறைப்படுத்துவதற்கு தமது கடமையைச் செய்யவிடாது தடுத்ததாகிவிடும். அதனால் அத்தகைய தடையை விதிப்பது சரியானதல்ல என்று கருதுவதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் 2013ஆம் ஆண்டு தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தது.

அதாவது ஆலயங்களின் மிருகப் பலியிடலானாலும் அவை சட்டத்தை மீறி நடக்கலாகாது என்பதைத்தான் மேன்முறையீட்டு நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருப்பதாக மேன்முறையீட்டு நீதிமன்றின் நேற்றைய தீர்ப்பில் விளக்கமளிக்கப்பட்டிருக்கின்றது.

இதனடிப்படையில் ஆலயத்தில் கொல்களம் உருவாக்கலாமா இல்லையா என்கிற பிரச்சினையை பிரதேச சபையே தீர்வுக்குக் கொண்டு வரலாம் என்பதே உண்மை. ஆக, இப்போது வேள்வியை நடத்துவதா இல்லையா என்கிற முடிவை வலி. வடக்கு பிரதேசசபையே எடுக்க முடியும். தனது எல்லைக்குட்பட்ட பகுதி மக்களில் ஒரு பகுதியினர் பலியிடலை விரும்புகின்றனர், அல்லது அது அவர்களின் சமய நம்பிக்கையாக விளங்குகின்றது என்று சபை நம்புகின்றமையால் பலியிடலுக்கு இதுவரை அனுமதி வழங்கி வந்தது.

இனியும் வழங்கக்கூடும். அதேநேரம் அந்த மக்களிலும் பார்க்கக் கூடுதலான எண்ணிக்கையான மக்களும் இந்து மத அமைப்புக்களும் ஆலயத்தில் மிருக பலியிடலை விரும்பவில்லை என்பதையும் பிரதேச சபையினர் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு தொகுதி மக்களின் விருப்பமாக இருக்கின்ற அதேவேளை மற்றொரு தொகுதி மக்களின் வெறுப்புக்குரியதாகப் பலியிடல் இருக்கின்றது என்பதையும் சபை கவனத்தில் எடுக்கவேண்டும். இதனடிப்படையில் சமயப் பெரியார்கள், அமைப்புக்கள், பிரதேச சபையினர் ஒன்றுகூடி ஆலய நிர்வாகிகள் பக்தர்களுடன் பேசி பலியிடலை நிறுத்த வேண்டும் அல்லது அதனை ஆலய வளாகத்தில் இருந்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். பலியிடலுக்கு நீதிமன்றம் அனுமதித்துவிட்டது என்கிற தவறான கருத்துருவாக்கத்துடன் அதனைத் தொடர்வதற்கு கண்மூடித்தனமாக அனுமதி வழங்கப்படக்கூடாது.



# மக்களைக் குழப்புகின்றனர் நாட்டின் தலைவர்கள்

சேரலாதன்

இன்னமும் இரண்டு ஆண்டுகளுக்குள் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு கிடைத்து விடுமென தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் வைத்துக் கூறியிருக்கிறார். எந்த அடிப்படையில் அவர் இதைக் கூறினார் என்பது புரியவில்லை.

இதேவேளை அடுத்த ஐந்து மாதங்களில் புதிய அரசொன்று உருவாக்கப்படுமென அரச தலைவர் கூறியிருக்கிறார். அவரும் எதன் அடிப்படையில் இதைக் கூறினார் என்பதையும் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏனென்றால் அடுத்த அரச தலைவரையும் அரசையும் தேர்தல்கள் மூலமாக மக்களே தெரிவுசெய்யப் போகின்றார்கள். அவர்களின் தெரிவு எதுவாகவிருக்கும் என்பதை இப்போதே கூறிவிட முடியாது.

> மக்களின் உரிமைகளுக்காகவும் அவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவும் போராட வேண்டியவர்கள் பதவிகளுக்காகத் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர். கூட்டணி அமைத்து தேர்தலில் வெற்றிபெறுவது ஒன்றையே தமது நோக்கமாகக்கொண்டு செயற்படுகின்றனர்.

தலைமை அமைச்சரும் அரச தலைவரும் கூறியதை முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தலைமை அமைச்சர் கூறிய சில விடயங்களை நாம் மனதில்கொள்ள வேண்டும். நாடாளுமன்றத்தில் தமக்குத் தேவையான பெரும்பான்மை பலம் இல்லாத காரணத்தாலேயே தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்க முடியவில்லையெனவும் தமிழர்கள் வேண்டி நிற்கின்ற அதிகாரப் பகிர்வை சிங்களவர்கள் மட்டுமல்லாது முஸ்லிம்கள் மற்றும் ஏனைய இனத்தவர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். சிலவேளை அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் அரசை அமைப்பதற்கு அவரால் முடியாமல் போனால் அவரது வாக்குறுதி செல்லாக் காசாகிவிடும். இதற்கு மாறாக பெரும்பான்மை பலத்துடன் அவர் ஆட்சியமைத்தாலும் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்குவதில் ஏனைய இனத்தவர்களின் சம்மதத்தை இவரால் பெற முடியுமா? என்பதும் சந்தேகமாகவே உள்ளது. கடந்த கால வரலாறுகளைப் புரட்டிப் பார்க்கும்போது இவ்வாறான எண்ணம் மனதில் எழுகின்றது. இதனால் தலைமை அமைச்சரின் வாக்குறுதி நிறைவேறுமெனத் துணிந்து கூற முடியவில்லை.

மேலும் ஏற்கனவே ஏமாற்றத்துக்குள்ளான தமிழ் மக்கள் இன்னமும் இரண்டு ஆண்டுகள் காத்திருப்பதற்குத் தயாராக இருப்பார்களெனவும் எதிர்பார்க்க முடியாது.

அரசியல் ரீதியாகத் தமிழர்கள் வெவ்வேறு திசைகளில் பயணிக்கின்றனர். மக்களின் உரிமைகளுக்காகவும் அவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவும் போராட வேண்டியவர்கள் பதவிகளுக்காகத் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர். கூட்டணி அமைத்து தேர்தலில் வெற்றிபெறுவது ஒன்றையே தமது நோக்கமாகக்கொண்டு செயற்படுகின்றனர். இத்தகையவர்களின் கபடத் தனத்தைப் புரிந்து கொள்ளாத மக்களில் ஒரு பகுதியினர் இவர்களுக்குப் பின்னால் செல்வதைப் பார்க்கும்போது பரிதாபமாகவுள்ளது.

தமிழர்கள் அனைவரும் ஒரே அணியாகத் திரண்டு தமது உரிமைகளுக்காகப் போராடினால் ஏதோவொரு தீர்வைக் கண்டுவிட முடியும். ஆனால் அதற்கான வாய்ப்புக் கிட்டுமா? என்பது சந்தேகமாகவேயுள்ளது. இதைத்தான் இனவாதிகளும் தமிழ் விரோதசக்திகளும் எதிர்பார்த்துக் காத்திருப்பதை எம்மவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அதேவேளை இன்னும் ஐந்து மாதங்களில் புதிய அரசு உருவாகுமென அரச தலைவர் கூறியிருக்கிறார். இது எவ்வாறு சாத்தியமாகுமென அவர் தெரிவிக்கவில்லை. ஓர் உத்தேசமாகவே அவர் இதைத் தெரிவித்திருப்பதாகக் கருத முடிகின்றது. அவரது பதவிக்காலம் டிசெம்பர் 7ஆம் திகதி முடிவடையவுள்ள நிலையில் புதிய அரசு அமைவது தொடர்பாக அவர் அக்கறை கண்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. அரச தலைவர் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனாவுக்கு மகிந்த தரப்பின் ஆதரவு கிடைக்குமெனத் தற்போதுள்ள சூழ்நிலையில் உறுதியாகக் கூற முடியவில்லை. தனித்து நின்றாலும் இவரால் வெற்றி பெற முடியுமெனக் கூற முடியாது. மகிந்த தனது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அரச தலைவர்தேர்தலில் போட்டியிடுவதையே விரும்புகின்றார். அதிலும் கோத்தபாயவின் பெயரே பலமாக அடிபடுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளும் குழப்பமானதொரு நிலையே காணப்படுகின்றது. சஜித் பிரேமதாசவை முன்னிலைப்படுத்துவதில் சிலர் முனைப்புடன் செயற்படுகின்றனர். இதில் சந்திரிகா அம்மையாரும் ஈடுபட்டுள்ளதைக் காண முடிகின்றது. அது மட்டுமல்லாது சஜித்துக்கு முன்னொரு தடவை ஆதரவு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழர்களைப் பொறுத்த வரையில் தெற்கில் எவர் ஆட்சிக்கு வந்தாலும் தமது உரிமைகளைப் பெறுவதற்கு கெஞ்ச வேண்டிய நிலையிலேயே உள்ளனர். தெற்கில் உறுதியான ஆட்சியென ஒன்றையும் கூற முடியாது. ஆட்சியாளர்கள் இனவாதிகளுக்கும் பௌத்த தேரர்களுக்கும் அமைவாகவே செயற்படுகின்றனர். நாட்டின் சகல விடயங்களிலும் பௌத்த மதவாதிகள் மூக்கை நுழைப்பது பெரும் சாபக்கேடாகவே மாறிவிட்டது.

நீதிமன்றத்தை அவமதித்த வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்த ஞானசாரதேரர் அரச தலைவரின் கருணையால் வெளியில் வந்த பின்னர் தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளார். வாயில் வந்ததையெல்லாம் உளறிக்கொட்டுகின்றார். இது நாட்டுக்கு நல்லதா? இந்த நிலை அறவே ஒழிக்கப்படல் வேண்டும். எதற்கும் அஞ்சாது நடுநிலையுடன் செயற்படக்கூடிய தொரு அரசே நாட்டின் இன்றைய தேவையாகும். ஆனால் இது விரைவில் சாத்தியமாகுமென எதிர்பார்க்க முடியாது.

## இன்றும் நாளையும் தெற்கில் கடும்மழை

கொழும்பு, ஜூலை 19

இலங்கையின் தெற்குப் பகுதியில் இன்றும் நாளையும் கடும் மழைபெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று அறிக்கை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

நாளையும் நாளைமறுதினமும் (இன்றும் நாளையும்) தென்மேற்குப் பகுதியிலும் மத்திய மலைநாட்டிலும் மற்றும் வடமேல், மேல், தென்மேல் மற்றும் தென் கடற்பரப்புகளிலும் காற்றுடன் கூடிய மழை நிலமையில் மேலும் அதிகரிப்பு ஏற்படுவதற்கான சாத்தியம் உயர்வாகக் காணப்படுகின்றது. நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மேகமூட்டமான வானம் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாடு முழுவதும், குறிப்பாக மேல், தென், மத்திய, சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 '60 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். ஏனைய பகுதிகளில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 4050 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சப்ரகமுவ, மத்திய, மேல், தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. ஏனைய பகுதிகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 150 மி.மீக்கும் அதிகமான மிகப் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படு கின்றது. கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் சில இடங்களில் 100 மி.மீற்றர்க்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் என்றுள்ளது. (ம)

## சகல ஆலயங்களும் உதவிகளை வாரிவழங்க முன்வரல் வேண்டும்!

### சுட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலய தலைமைக் குருக்கள் கோரிக்கை

கொடிகாமம், ஜூலை 19

அனைத்துப் பகுதிகளிலும் உள்ள ஆலயங்களின் நிர்வாகங்களும் மக்களுக்கான உதவித் திட்டங்களை முன்னெடுக்க முன்வர வேண்டும். ஆலய நிர்வாகத்தினரின் உதவிகள் சமூகத்துக்கு அவசியமாகவுள்ளன. இதனூடாகச் சமய, கலாசார விழுமியங்களையும் பேணிப் பாதுகாக்க முடியும். வறுமையில் உள்ள குடும்பங்கள், மாணவர்கள் பயன்பெற முடியும். இவ்வாறு சுட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலய தலைமைக்குரு இராமலிங்கம் ஐயர் குமாரசாமி குருக்கள் தெரிவித்தார்.

வரணி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு ஈருருளிகள் வழங்கும் நிகழ்வு வரணியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அதில் ஆசியுரை வழங்குகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காலத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு இந்த நிகழ்வு நடக்கிறது. புலம்பெயர்ந்து இருந்தாலும் எம்மவர் சமய விழுமியங்களை மறக்கவில்லை என்பதை இது காட்டுகிறது. திருமுறைகளில் குளம் வெட்டுவது தொடர்பாக நாயன்மார்கள் கூறியுள்ளனர். வரணி ஒன்றியத்தினர் குளம் ஒன்றையும் சீரமைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்று 40 மாணவர்களுக்கான ஈருளிகளை வழங்குகின்றனர். இதேபோன்று இங்குள்ள ஆலயங்களும் உதவிகளை வாரி வழங்க முன்வர வேண்டும். இது காலத்தின் கட்டாயம் என்றார்.

**குறைபாடு யாரிடம்?**

தென்மராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் த.கிருபாகரன் தெரிவித்ததாவது:

கடந்த வருட பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் 53 வீதமான மாணவர்களே சித்தியடைந்தனர். இது எங்களுடைய கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிலுள்ள குறைபாடா அல்லது மாணவர்களுடைய செயற்பாட்டிலுள்ள குறைபாட்டை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

மாணவர்கள் இங்கே தொடர்ந்து கல்வி கற்க வேண்டும் என்றால் மாணவர்கள் விழிப்புடன் இருக்க, பெற்றோர்கள் அக்கறையுடன் இருக்க வேண்டும். உங்கள் பிள்ளைகளின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிலே மிகவும் ஆர்வமாக இருக்க வேண்டும் - என்றார்.

**தொழிற் கல்வியை தவறவிடாதீர்கள்**

தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு தெரிவித்ததாவது:

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய எந்தவொரு மாணவனும் 13 ஆம் ஆண்டுக் கல்வித்திட்ட கல்விப் பிரிவில் இணைந்து கல்வி கற்க முடியும். அது தொழில் கல்வியாகக் காணப்படுகிறது. க.பொ.த சாதாரணப் பரீட்சையில் சரியான முறையில் சித்தி பெறாவிட்டாலும் கூட சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தொழிற்கல்வி நடைபெறுகிறது. அந்தத் தொழில் பயிற்சி மூலம் பல்வேறுபட்ட வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியும் என்று கூறினார்.

**பணம் பறிக்கும் மரமில்லையே!**

அடுத்து யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் செ சந்திரசேகரம் உரையாற்றுகையில், வெளிநாட்டில் பணம் பறிக்கும் மரம் இருப்பதாக எமது உறவுகள் நினைக்கிறார்கள். அவர்கள் மிகவும் கஸ்ரத்தின் மத்தியில் பணம் சேர்க்கின்றனர். அங்கிருந்து அனுப்பும் பணத்தை எப்படிச் செலவழிப்பது என்று இங்குள்ளவர்களுக்கு தெரியவில்லை. யாழ்ப்பாணத்தில் 70 வீதமான குடும்பங்கள் வெளிநாட்டு தொடர்பில் இருக்கிறார்கள். சுயமுயற்சியில் ஈடுபட்டு முன்னேற வேண்டும் - என்றார். (த-159)

## இலங்கைக்கு வழங்கும் உதவிகளை மேலும் அதிகரிக்கிறது உலகவங்கி!

கொழும்பு, ஜூலை 19

மூன்று புதிய செயற்திட்டங்களின் கீழ் இலங்கைக்கு வழங்கும் உதவிகளை மேலும் அதிகரிப்பதற்காக உலக வங்கியின் தெற்காசிய வலய உபதலைவர் ஹார்ட்விங் சேபர் தெரிவித்தார். அரச தலைவர் அலுவலகத்தில் நேற்று அரசதலைவர் சிறிசேனவைச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

திடீர் காலநிலை மாற்றங்களுக்கு முகங்கொடுத்துள்ள விவசாயத் துறை மற்றும் நீர்ப்பாசனத் துறை, மீள்பிறப்பாக்க மின்சக்தி, கிராமிய பிரதேசங்களில் குளங்களை புனரமைப்பு செய்வதற்கான உதவி ஆகியன இந்தப் புதிய செயற்திட்டங்களில் உள்ளடங்குகின்றன. வளமான பொருளாதார அடிப்படையில் அமைந்துள்ள இலங்கைக்கு தொடர்ச்சியாக பன்னாட்டுக் கடன் உதவியை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் வரவு செலவுத் திட்ட இடைவெளியை குறைப்பதற்காக உலக வங்கியின் நிதியுதவி பெற்றுத் தரப்படுகிறது - என்றார்.

நீண்டகாலமாக இலங்கைக்கு வழங்கும் ஒத்துழைப்புக்க இதன்போது உலக வங்கிக்கு அரச தலைவர் நன்றி தெரிவித்தார். (ம)

## மா அதிக விலைக்கு விற்றால் நடவடிக்கை

### வவு. பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அறிவுறுத்தல்

கொழும்பு, ஜூலை 19

வவுனியாவில் கோதுமை மாவை அதிக விலைக்கு விற்பனை செய்த மொத்த வியாபாரிகள், வியாபார நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வவுனியா மாவட்டப் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் தெரிவித்தனர்.

கோதுமை மா பிரிமா நிறுவனம் விலை அதிகரிப்புச் செய்துள்ளது. அதையடுத்து வவுனியாவிலுள்ள கோதுமை மா மொத்த விற்பனை வியாபாரிகள் மற்றும் சில்லறை வியாபார நிலையங்கள் சிலவற்றில் கட்டுப்பாட்டு விலையை விட அதிகரித்த விலைக்கு விற்பனை செய்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அரசிதழில் புதிய விலை வெளிவரும் வரையிலும் பழைய விலைக்கு விற்பனை செய்ய வேண்டும் என்று வவுனியா வர்த்தகர் சங்கத்தின் ஊடாக வியாபார நிலையங்களுக் அறிவிக்கப்பட்டுள்ளது-என்றார். (எ)

## மணல் அனுமதி இனிமேல் பொது அமைப்புக்களுக்கே

### தனி நபர்களுக்கு வழங்குவதில்லையென்று பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

மன்னார், ஜூலை 19

முல்லைத்தீவின் பல இடங்களிலிருந்து மணல் வியாபாரத்துக்காக வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. அந்தப்பகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்த பின்னர்தான் வெளியிடங்களுக்கு இனிமேல் மணல் கொண்டு செல்ல வேண்டும். மணல் அனுமதியைத் தனிநபர்களுக்கு வழங்காமல் அமைப்புகளுக்கு மாத்திரம் வழங்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.



முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவரும் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.சிவமோகன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மேலும் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அதன்படி, உடையார் கட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் காலத்தில் பராமரிக்கப்பட்ட விவசாயப் பண்ணையைத் தொடர்ந்தும் அப்படியே பராமரிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்புப் பிரதேச எல்லைக்குள் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துத் தண்ணீர் பெறுவதன் மூலம் சாதாரண கிணறுகளில் தண்ணீர் குறைந்து குடிதண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படுகிறது. ஆழ்துளைக் கிணற்றுக்கு மாற்று வழி செய்ய வேண்டும் என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர், புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தவிசாளர், உறுப்பினர்கள், மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களும் கலந்து கொண்டனர். (த-213)

## தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலர் சமன் நேற்றுக் கைதானார்

கொழும்பு, ஜூலை 19

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலர் சமன் திசாநாயக்க நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜயவர்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த அவர் சிறப்பு இரகசியப் பொலிஸால் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார். அவன்கார்ட் ஆயுத களஞ்சியசாலை தொடர்பில் 7பேரை உடனடியாக கைது செய்யுமாறு சட்ட மா அதிபர் ஆலோசனை வழங்கியிருந்த நிலையிலேயே சமன் திசாநாயக்க கைதானார். (ம)

# மாகாண முத்திரை வரியை பெற்றுக்கொள்வதில் சிரமம்

## உள்ளூராட்சிச் சபைகள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 19

வடக்குமாகாணஉள்ளூராட்சித்திணைக்களங்களின்பிரதேசத்துக்குட்பட்ட காணிகளுக்கு வடக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டச் செயலகங்கள் ஊடாகப் பதிவு மேற்கொள்ளும் பணம் சபைகளுக்குக் கிடைக்கின்றபோதும் மாகாண முத்திரை வரியைப் பெறுவதில் சிரமம் உள்ளதாக உள்ளூராட்சி மன்றங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

வடக்குமாகாணசபையின் உருவாக்கத்தின் பின்னர் முத்திரை வரி நியதிச் சட்டம் உருவாக்கப்பட்டதற்கமைய வடக்கு மாகாணத்தில் உள்ள நிலங்களைக் கை மாற்றும்போது எழுதப்படும் உறுதிகளுக்கு அறவிடப்படும் கட்டணம் தற்போது வடக்கு மாகாண திறைசேரியில் வைப்புச் செய்யப்படும். அவ்வாறு வைப்புச் செய்யப்படும் நிதி மாவட்டப் பதிவாளரின் ஒப்புதலுடன் மாகாணத் திறைசேரியானது குறித்த உள்ளூராட்சித்திணைக்களத்துக்குரிய நிதியை விடுவிக்கின்றது.

மாகாணத்துக்கு வெளியே பிற மாவட்டங்களில் எழுதப்படும் உறுதிகளுக்கான முத்திரைத் தீர்வை வடக்கு மாகாண திறைசேரிக்கு கிடைக்கின்றது. இருப்பினும் அந்தப் பணத்தை உள்ளூராட்சி மன்றங்கள் பெறுவதற்கான விடுவிப்பு அனுமதி அல்லது பரிந்துரையை பிற மாகாணங்களில் உள்ள பதிவாளர் நாயகம் வழங்குவதில் நெருக்கடி நிலை காணப்படுவதனால் அந்தப் பணம் வடக்கு மாகாண திறைசேரியிலேயே உள்ளது. அந்த அடிப்படையில் 2015ஆம் ஆண்டில் 21 மில்லியன் ரூபாவும், 2016ஆம் ஆண்டு இறுதியில் 41 மில்லியன் ரூபாவும் காணப்பட்டதோடு 2017ஆம் ஆண்டில் 152 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட நிலையில் 2018ஆம் ஆண்டில் தற்போது 182.78 மில்லியன் ரூபா மாகாணத் திறைசேரியில் உள்ளது. அந்த நிதி 3 ஆண்டுகால எல்லை தாண்டிய வகையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்படாது விடின் மாகாண பொதுக் கணக்குக்கு மாற்றப்படும் சந்தர்ப்பமும் உண்டு.

உள்ளூராட்சி மன்றங்கள் அதிக நிதி நெருக்கடியில் உள்ள நிலையில் குறித்த பணத்தை உள்ளூராட்சி மன்றங்களிடம் கிடைக்க ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது. (ஏ-105)

### திருமுறை மனனப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 19

சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே திருமுறை மனனப் போட்டி நடத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் வண்ணை, சாந்தையர்மடம் சிறி கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகத்தால் சைவச் சிறார்களின் மனனம் செய்யும் ஆற்றலையும் சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு இந்தப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டி தரம்- 1,2, 3,4 பிரிவுகளுக்கு நடைபெறவுள்ளது. தரம் 1,2 பிரிவுகளுக்கு 'நத்தார் படை ஞானன்பசு', 'பொன்னார் மேனியனே' ஆகிய இரு திருமுறைகளும், தரம் 3,4 பிரிவுகளுக்கு 'பித்தாபிறை சூடி பெருமானே', 'மற்றுப் பற்று எனக்கு இன்றி நின் திருப்பாதமே' ஆகிய இரு திருமுறைகளும் மனனம் செய்யப்படல் வேண்டும்.

திருமுறை மனனப் போட்டி எதிர்வரும் 28ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 24ஆம் திகதியாகும்.

திருமுறை மனனப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் 'சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல.82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு பிற்பகல் 3.30 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று சைவ சமய அபிவிருத்திக் கழக சமய பிரசாரகரும் பரீட்சை செயலருமான சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார். (ஐ)

### கல்விக் கண்காட்சி

கொடிகாமம், ஜூலை 19

வரணி, கரம்பைக் குறிச்சி அ.த.க பாடசாலை மாணவர்களின் கல்விக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் க.இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக கல்வி நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.பிறேமதாஸ், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன், மதிப்புறு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்களான என்.திருவாசகன், எஸ்.சிவதாஸன், கிராம அலுவலர் மோ.பிரகாஸ், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இ.நிஜன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-159)



### அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை 19

தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாசாலைக்குச் சுற்று மதில் அமைப்பதற்கான அடிக்கல் அண்மையில் நடப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இந்த அடிக்கல்லை நட்டு வைத்தார்

கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினரால் 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு சுற்றுமதில் வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர் ச.ஜெயந்தன், கல்லூரி அதிபர் மற்றும் பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-7)

### கற்றல் வளநிலையக் கண்காட்சி

கொடிகாமம்,ஜூலை 19

யாழ்ப்பாணம் மந்துவில் சிறிபாரதி வித்தியாலயத்தின் கற்றல் வளநிலையக் கண்காட்சி அண்மையில் அதிபர் திருமதி ஆ.இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வரணி ஆசிரிய வாண்மை விருத்தி மத்திய நிலைய முகாமையாளர் வே.திருச்சபேசன் கலந்துகொண்டார். கண்காட்சியில் புதிய நூல்கள், கழிவுப் பொருள்களால் ஆக்கப்பட்ட ஆக்கப் பொருள்கள் என்பன காட்சிப் படுத்தப்பட்டன. (ஐ-159)



### கல்வி மகாநாட்டில் பங்குபற்ற யப்பான் செல்லும் மாணவன்

யாழ்ப்பாணம்,ஜூலை 19



'ஆசிய பசுபிக் சிறுவர் கல்வி மகாநாடு 2019 'இல் பங்குபற்றுவதற்காகக் கொழும்பு றோயல் கல்லூரியில் தரம் -7 இல் கல்வி கற்கும் மகேந்திரன் திகழ்ஒளிபவன் என்ற மாணவன் யப்பானுக்கு பயணமானார்.

2018ஆம் ஆண்டு இடம்பெற்ற 5ஆம் தரப்புலமைப் பரிசில் பரீட்சையில் குறித்த மாணவன் 198 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் தமிழ்மொழி மூலம் முதலிடத்தைப் பெற்றார்.

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் பழைய மாணவருமான இவர் கடந்த வாரம் யப்பான் பயணமானார். (ஐ)

### ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,ஜூலை 19

பெண்களுக்கும்,பெண் பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறைகள் தொடர்பான கருத்துக்களை பல்வேறு சமூகத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான ஒன்றுகூடல் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் சமூக நடவடிக்கை மையத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு இந்த ஒன்றுகூடல் நடைபெறவுள்ளது. (ஐ)

### சீரமைக்கப்பட்ட வீதி திறப்பு

கொடிகாமம், ஜூலை 19

யாழ்ப்பாணம், கோப்பாய் ஊறணி குடியிருப்பு வீதி சீரமைக்கப்பட்டு கடந்த திங்கட்கிழமை மாலை 5.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனால் வீதிச் சீரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், வலி.தெற்குப் பிரதேச சபைத் தவிசாளர் தர்சன், வலி. கிழக்குப் பிரதேசசபை உறுப்பினர்கள் இ.செல்வராஜா, சி.அகீபன், நகரசபை முன்னாள் உறுப்பினர் கிசோர், சமுர்த்தி அலுவலகர் உட்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். (ஐ-159)



யாழ். பள்ளிவாசலில் வைக்கப்பட்டிருந்த

## பாவனைக்குதவாத தேயிலை விவகாரம்; ஒருவருக்கு ரூ.18 ஆயிரம் தண்டம்

### மௌலவி, நிர்வாகி மீதான வழக்கு ஒத்திவைப்பு

வலி.தென்மேற்கு, ஜூலை 19

திகதி காலாவதியான, சுட்டுத்துண்டில்லாத தேயிலை, கோப்பி ஆகிய பொருள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் பள்ளிவாசல் மௌலவி, நிர்வாகி உட்பட மூவருக்கெதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், கண்டியைச் சேர்ந்த மூன்றாவது நபர் குற்றத்தை ஏற்றுக்கொண்டார். அவருக்கு 18ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. ஏனைய இருவர் மீதான வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கொழும்பில் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் ஐந்து சந்தியிலுள்ள பள்ளிவாசலைச் சோதனைக்கு உட்படுத்திய பொலிஸார் அங்கு தேயிலை, கோப்பி ஆகியவை இருந்தமையைக் கண்டுபிடித்தனர்.

இது சம்பந்தமாக யாழ்ப்பாண மாநகர பொதுச் சுகாதாரப் பிரிவினருக்குப் பொலிஸாரால் அறிவிக்கப்பட்டது.

அங்கு சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவன் காலாவதியான, சுட்டுத்துண்டில்லாத கோப்பி, தேயிலைப் பைக்கற்றுகள் இருந்தமையை அவதானித்துள்ளார். இதையடுத்து 120 கிலோகிராம் தேயிலை, 10 கிலோ கிராம் கோப்பி மற்றும் 200 கிராம் கொண்ட 397 பைக்கற் தேயிலை, 100 கிராம்கொண்ட 105 பைக்கற் தேயிலை ஆகியவற்றைக் கைப்பற்றி யாழ்ப்பாண நீதிமன்றில் ஒப்படைத்தார்.

இவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் பள்ளிவாசலின் மௌலவி, நிர்வாகி உட்பட மூவருக்கு எதிராக பொலிஸார் வழக்குத் தொடுத்தனர். அவர்கள் மீது 6 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. கடந்த மே மாதம் 2ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது மௌலவியும் நிர்வாகியும் தாங்கள் சுற்றவாளிகளெனக் கூறினர். கண்டியைச் சேர்ந்த மூன்றாவது நபரே குற்றவாளியென்று கூறினார்.

மௌலவியையும் நிர்வாகியையும் 50ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் செல்ல உத்தரவிட்ட நீதிவான் மூன்றாவது நபருக்குத் தண்டனை வழங்குவதற்காக கடந்த 10ஆம்திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

அன்று வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது ஏற்கனவே குற்றத்தை ஒப்புக்கொண்ட கண்டியைச் சேர்ந்த நபருக்கு 18ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார்.

ஏனைய இருவருக்குமான விசாரணையை அடுத்த மாதம் 28ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (த-115)

# வாழ்வாதாரத் திட்டங்களை அவதானித்து உதவுவோம்!

## ஆஸ்திரேலியத் தூதர் மன்னாரில் தெரிவிப்பு

*மன்னார், ஜூலை 19*

**எதிர்காலத்தில் உங்களின் வாழ்வாதாரத் திட்டங்கள் எவ்வாறு உள்ளன என்பதை அவதானித்துக் கொண்டிருப்பது மட்டுமல்லாது தொடர்ந்தும் தேவையான உதவிகளைச் செய்து கொண்டிருப்பேன்.**



இவ்வாறு ஆஸ்திரேலியாவின் இலங்கைக்கான தூதர் டேவிட் ஹோலி தெரிவித்தார்.

மன்னார் அடம்பனில் ஒரு கோடியே 40 லட்சம் ரூபா செலவில் 'ஆரோக்யா' உணவகத்தை ஆஸ்திரேலியத் தூதர் நேற்றுத் திறந்துவைத்தார்.

போரால் பாதிக்கப்பட்டு கணவனை இழந்த, கணவரால் கைவிடப்பட்ட மற்றும் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்த உணவகம் கட்டப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ், மாந்தை மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் சந்தியோகு செல்லத்தம்பு, பிரிஜின் லங்கா அமைப்பாளர்கள், பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் உணவகத்தின் பயனாளிகளான பெண்கள் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றுகையில் தூதர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையிலும் ஆஸ்திரேலியாவிலும் பெண்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப இப்படியான தொழிற்றுறைகளை அமைத்துக் கொடுப்பது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. எங்களுடைய செயற்பாடுகளில் முக்கியமான செயற்பாடுதான் வாழ்வாதாரத் திட்டம்.

இப்படி முன்னேற்றமடைய நினைப்பவர்களுக்கு நாங்களும் சந்தர்ப்பம் வழங்கக் கடமைப்பட்டுள்ளோம். இப்படியான செயற்பாடுகள் பலருக்குப் பலவிதமான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கிறது. இந்த வேலைகளுக்கான பயிற்சியும் மற்றவர்களை உபசரிப்பது பற்றிய பயிற்சியும் இங்கே கிடைக்கிறது.

கணினி அறிவைப் பெற்றுக் கொள்ளவும் முடியும். சந்தைப்படுத்தல் அறிவையும், தொடர்புகளையும் இது ஏற்படுத்திக் கொடுக்கிறது. ஆகவேதான் இந்த நிலையத்தின் ஆரம்பமும் அவ்வாறான நோக்கங்களைக் கொண்டதாக இருக்கிறது.

இவ்வாறு பெறுமதியான காரியத்தை அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த வேலைத்திட்டங்கள் ஆஸ்திரேலியத் தூத ரகத்துக்கும் மக்களுக்கும் இடையே ஒரு உறவுப்பாலத்தை ஏற்படுத்தியுள்ளது என்றார். (த-213)



## பொலிஸ் நிலையத்தில் பரிசோதனை நிகழ்வு

கொடிகாமம், ஜூலை 19

யாழ்ப்பாணம் கொடிகாமம் பொலிஸ் நிலைய அரையாண்டுக்கு ஒருமுறை நடத்தப்படும் பரிசோதனை நிகழ்வு நேற்றுமுன்தினம் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் இ.எம். எதிரிசிங்க தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் நிகல் தல்துவ கலந்து கொண்டு பொலிஸ் அலுவலர்களின் செயற்பாடுகள், பொலிஸாரின் வாகனாங்கள், ஆயுதங்கள், பொலிஸ் நிலையக் கட்டடங்கள் என்பனவற்றை பரிசீலனை செய்தார். இதன்போது பொலிஸாரின் அணி வகுப்பும் இடம் பெற்றது. (ஜ-159)



## விளையாட்டு நிகழ்வும் சிறுவர் பூங்கா திறப்பும்

கொடிகாமம், ஜூலை 19

யாழ்ப்பாணம் மட்டுவில் மத்தி கலைவாணி முன்பள்ளி பாலர்களுக்கான விளையாட்டு நிகழ்வும், சிறுவர் பூங்கா திறப்பும் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றன.

சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவனின் ஏற்பாட்டில் முன்பள்ளித் தலைவரும், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருமான ச. உமாமகேஸ்வரன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே. சயந்தன், சிறப்பு விருந்தினராக இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட பொருளாளர் த. சுதர்சன் மதிப்புறு விருந்தி னர்களாக கிராம அலுவலகர் பா. சுபாசன், அபிவிருத்தி அலுவலகர் த. வனிதா, சமுர்த்தி அலுவலகர் வி. நாகேந்திரன், பொதுச் சுகாதார அலுவலகர் க. கிருஷ்ணறக்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறார்களுக்கான பழம் பொறுக்குதல், பாம்பு ஓட்டம், முயல் பாய்ச்சல் போன்ற பல விளையாட்டுக்கள் இடம்பெற்றன.

அத்துடன் மறைந்த கனகலிங்கம் கார்த்திகாவின் நினைவாகச் சீரமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா நாடா வெட்டி திறக்கப்பட்டு முன்பள்ளியிடம் கையளிக்கப்பட்டது. (ஜ-159)



யாழ்ப்பாணம் வரணி சாவிலிப்பிட்டி கந்தசுவாமி ஆலயத்துக்குப் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத் தேர் வெள்ளோட்ட நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (ஜ-9)

## போதைப் பொருளுடன் ஒருவர் கைது



யாழ்ப்பாணம். ஜூலை 19

யாழ்ப்பாணம், புங்கன் குளத்தில் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனார்.

கைது செய்யப்பட்டவர் 18 வயதுடையவர் என்றும், அரியாலையைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. நேற்றுமுன்தினம் மாலை மணலுடன் சென்ற உழவியந்திரம் ஒன்றைப் பொலிஸார் சோதனை செய்தபோது 5 பொட்டலங்களில் போதைப் பொருள் இருந்தது என்று கூறப்படுகின்றது. கைது செய்யப்பட்டவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், அதன்பின்னர் அவர் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-106)

## பீடி இலை, புகையிலையுடன் மண்டைதீவில் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 19



பீடி இலை மற்றும் புகையிலை யைச் சட்டவிரோதமாகக் கொண்டு சென்றனர் என்ற சந்தேகத்தில் 3 பேர் கடற்படையினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், மண்டைதீவில் சந்தேகத்துக்கு இடமான முறையில் பயணித்த பாரவூர்தி ஒன்றைச் சோதனை செய்யப்பட்டபோது 44 பொதிகளாக்கப்பட்ட ஆயிரத்து 359 கிலோ பீடி இலைகளும், 31 பொதிகளாக்கப்பட்ட ஆயிரத்து 3 கிலோ புகையிலையும் கைப்பற்றப்பட்டன. அவை ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணத்துக்குப் பாரவூர்தி மூலம் கொண்டு செல்லப்பட்டபோதே கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்டவர்கள் 37 மற்றும் 47 வயதுடையவர்கள் என்றும், மாதகலை, கல்லேவெல்லவைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. கைப்பற்றப்பட்ட பொருள்களுடன், சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம் சுங்கப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்தது. (எ-7)

## விளையாட்டு நிகழ்வு

கொடிகாமம், ஜூலை 19

யாழ்ப்பாணம் மிருசுவில் புனித நீக்கிலார் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நீக்கிலார் ஆலய முன்றலில் பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்றது.

மிருசுவில் புனித நீக்கிலார் ஆலய பங்குத் தந்தை அருட்பணி எக்ஸ் டபிள்யூ ஜேம்ஸ் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை அதிபர் க.சத்தியானந்தம், சிறப்பு விருந்தினராக எழுது மட்டுவாழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சூ.குணசாந்தன், மதிப்புறு விருந்தினராக அ.அல்பிரட் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-159)



# 5ஜி அலைவரிசை வேண்டாம்! மாநகர சபை முன் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

5ஜி அலைவரிசைக் கோபுரம் அமைக்கும் செயற்பாடுகளை நிறுத்தக் கோரி, யாழ்ப்பாண மாநகர சபை அலுவலகம் முன்பாக நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது. சபை அமர்வு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது போராட்டம் நடத்தப்பட்டதால், பரபரப்பான நிலைமை அங்கு காணப்பட்டது.




சபையின் அமர்வு முற்பகல் 9 மணியளவில் ஆரம்பமாகவிருந்த நிலையில், பொது மக்கள் அணிதிரண்டு, மாநகர சபை வாயிலை மூடிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் பல்வேறு அமைப்புக்கள், பொது மக்கள் எனப் பலரும், கண்டனத்தையும் எதிர்ப்பையும் வெளியிட்டனர்.

மாநகர ஆணையாளரின் ஒப்புதலின்றி, 5ஜி அலைவரிசைக் கோபுரம் அமைப்பது தொடர்பாக மாநகர முதல்வர் தன்னிச்சையாகச் செயற்படுகின்றார் என்று குற்றஞ்சாட்டினர். பொது மக்களுக்கு 5ஜி அலைவரிசை தொடர்பான விழிப்புணர்வு எதுவுமில்லை. போரால் பாதிக்கப்பட்ட எமக்கு 5ஜி அலைவரிசைக் கோபுரம் தேவையில்லை என்றும், முதல்வருக்கு எதிராகவும் கோசங்களை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முதல்வரை அலுவலகத்தைவிட்டு வெளியே வருமாறு போராட்டத்தில் ஈடுபட்டோர் அழைப்பு விடுத்தபோதும் முதல்வர் வெளியே வரவில்லை. மாநகரப் பகுதியிலுள்ள பாடசாலைகள் மற்றும் கோவில்கள் போன்ற இடங்களில் 5ஜி அலைவரிசைக் கோபுரம் அமைப்பதை உடனடியாக நிறுத்துமாறும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

**அரசியல்வாதிகளுக்கு போராட்டக்காரர்கள் எதிர்ப்பு**

போராட்டத்தில் பல அமைப்புக்களுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நியமன நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் மற்றும் சில அரசியல்வாதிகளும் பங்கேற்றிருந்தனர். போராட்டத்தில், அரசியல்வாதிகளைக் கலந்துகொள்ள வேண்டாமென்றும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

5ஜி அலைவரிசைக் கோபுரம் அமைப்பதற்கு வன்மையான கண்டனத்தையும் அவர்கள் தெரிவித்தனர்.

அலைவரிசை கோபுரம் அமைக்கும் பணியை நிறுத்தாவிடின், தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் பொது மக்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

சுமார் 2 மணித்தியாலயங்கள் போராட்டம் தொடர்ந்தது.

5ஜி அலைவரிசைக் கோபுரம் அமைக்க அனுமதி வழங்க வேண்டாம் என்று பல அமைப்புக்களும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. போராட்டங்களும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. (த-106)

## இம்முறையும் அரை மானியத்தில் விதை உருளைக்கிழங்கு

பதிவுகள் இடம்பெற்று வருகின்றன

யாழ்ப்பாணம்,ஜூலை 19

யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளுக்கு இம்முறையும் அரை மானிய விலையில் விதை உருளை கிழங்கை வழங்குவதற்கான பதிவுகள் நடைபெற்று வருவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடத்தை போல அரை மானிய விலையில் இம்முறையும் விதை உருளை கிழங்கு வேண்டும் அப்போது தான் உருளை கிழங்கு செய்கையை சிறப்பாக மேற்கொள்ள முடியும் என்று விவசாயிகள் தொடர்ச்சியாக கோரிக்கையை முன் வைத்து வருகின்றனர்.

அரை மானியத்தில் விதை உருளை கிழங்கை இந்த முறையும் வழங்குவது தொடர்பாக கடந்த மே மாதம் வரையில் அரசு எந்த அறிவித்தலையும் மாவட்ட விவசாய திணைக்களத்துக்கு வழங்கவில்லை.

ஆனால் உருளை கிழங்கு செய்கையாளர்களின் நன்மை கருதி அரை மானியத்துக்கு ஒப்பான உள்ளூர் விதை உருளை கிழங்கை கொள்வனவு செய்து வழங்குவதற்கு விவசாய திணைக்களம் நடவடிக்கை எடுத்து வந்தது. சுமார் 50 மெற்றிக் தொன் வரையில் உள்ளூர் விதை உருளை கிழங்கை கொள்வனவு செய்வதற்கு திணைக் களம் எண்ணியிருந்தது.

ஆனாலும் வெளிநாட்டு விதை உருளை கிழங்கே செய்கைக்கு உகந்தது என்றும் அதனை அரை மானியத்தில் பெற்று தருவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி விவசாயிகள் பல்வேறு தரப்பினருக்கும் கோரிக்கை முன்வைத்தனர்.

இந்த நிலையில் உருளை கிழங்கு செய்கை அதிகம் நடைபெறும் கோப்பாய் ,உடுவில் பிரதேசங்களில் கிராம பொருளாதார அபிவிருத்தி அலுவலர் நிலையங்களில் அரை மானிய உருளை கிழங்கு வழங்குவதற்கான பதிவுகள் நடைபெறுவதாக தெரிவிக்கப் பட்டது.

இந்த விடயம் தொடர்பில் மாவட்டச் செயலக விவசாய பிரிவிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது தெரிவிக்கப்பட்டதாவது:

கொழும்பு விவசாய அமைச்சு மற்றும் அரச தலைவர் செயலகம் ஆகியன அரை மானியத்தில் விதை உருளை கிழங்கை வழங்குவதற்குகான ஒப்புதல் தந்துள்ளன. ஆகவே மானியத்துக்கான நிதி கிடைக்கும் என்ற அடிப்படையில் பதிவுகள் இடம் பெறுகின்றன. சுமார் 47 மில்லியன் ரூபாவில் 280 மெற்றிக் தொன் விதை உருளை கிழங்கு கொள்வனவு செய்ய எதிர்ப் பார்க்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

குடிவெறுப்புச் சிகிச்சைப் பிரிவுடன் இணைந்த

# தொழிற் பயிற்சிக் கூடத்தின் கட்டட வேலைகள் முழுமை

சாவகச்சேரி, ஜூலை 19

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்ட குடிவெறுப்பு சிகிச்சைப் பிரிவும் தொழிற் பயிற்சிக் கூடமும் இணைந்த பகுதியின் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. விரைவில் திறக்கப்பட்டு பாவனைக்கு விடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குடிபோதைக்கு அடிமையாகி மீள முடியாத நிலையில் தவித்துக் கொண்டிருந்தவர்களுக்கு மீள் வாழ்வு வழங்கும் நோக்குடன் மனநல மருத்துவ நிபுணர் சிவயோகனின் யோசனைக்கமைய மருத்துவமனையில் காணப்பட்ட கட்டடமொன்றில் அப்போதைய மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் த.குகதாசனால் 'குருந்தம்' என்னும் குடிவெறுப்பு பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. பிரிவுக்குப் பொறுப்பாக மருத்துவர் திருமதி வி. அச்சுதன் நிய மிக்கப்பட்டார். பயிற்றப்பட்ட பணியாளர்களுடன் சிகிச்சை பெறுபவர்களுக்கு ஏற்பட்ட தாக்கத்தைக் குறைப்பதற்காக உளநல ஆலோசனைப் பணியாளர்களும் பணியாற்றி வருகின்றனர். குடிபோதை [illegible]லிருந்து விடுபட முடியாமல் தானாக முன் வந்து சிகிச்சை பெறவந்தவர்களுக்கும் நீதி மன்றால் சிகிச்சை பெறுமாறு அறிவுறுத்தப்பட்டவர்களுக்கும் இங்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. சிகிச் சைக்கென அனுமதிக்கப்படுபவர்கள் 15 தினங்கள் தொடர்ச்சியாக விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று அதன் பின்னர் தொடர்ந்து ஆறு மாதங்கள் சிகிச்சை பெறவேண்டும். திங்கட் கிழமைகளில் மட்டும் சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படுகின்றனர் இவ்வாறு அனுமதிக்கப்படுபவர்களுக்கு மருந்துகளை விட சிறந்த வழிகாட்டல் ஆலோசனைகளே பெருமளவில் வழங்கப்பட்டு வருகின்றன.



விடுதி புள்ளி விவரங்களின் பிரகாரம் கடந்த ஐந்து வருடங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுள்ளனர் எனவும் வெளிநாடுகளில் குடிப் பழக்கத்துக்கு அடிமையாகி மீள முடியாத தமது பிள்ளைகளைப் பெற்றோர் இங்கு அழைத்து வந்து சிகிச்சைக்கு அனுமதித்தனர் எனவும் சிகிச்சைகளின் பயனாக அவர்கள் குடிப்பழக்கத்திலிருந்து மீண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. குடி போதையிலிருந்து முழுமையாக மீட்டெடுப்பதற்கு, அவர்களின் எண்ணங்களைச் சிதறடிக்க விடாமல் தடுப்பதற்கு அவர்களுக்கு தொழில் பயிற்சிகளை வழங்க வேண்டும்.

அதற்குரிய கட்டட வசதிகளை அமைத்து வழங்க வேண்டுமென்று மருத்துவமனை நிர்வாகம் வேண்டுகோள் விடுத்ததையடுத்து மூன்று மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது - என்று மேலும் தெரிவிக்கப் பட்டது. (த-9)



யாழ்ப்பாணம் கைதடி கயிற்றசிட்டி கந்தசாமி முருகன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா கடந்த திங்கட்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. இதன்போது நூற்றுக்க ணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். (ஐ-159)

## நல்லூர் பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை 19

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலகம், பிரதேச கலாசார பேரவை மற்றும் கலாசார அதிகார சபையின் ஏற்பாட்டில் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா நடைபெற்றது. இந்த நிகழ்வு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் பிரதேச செயலரும், கலாசார பேரவைத் தலைவருமான அன்ரன் யோகநாயகம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.



நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலர் இ. இளங்கோவன், சிறப்பு விருந்தினராக பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி அபிராமி பாலமுரளி, மதிப்புறு விருந்தினராக நாதஸ்வர வித்துவான் கலாபூஷணம் வல்லிபுரம் குமாரசாமி உட்பட பலர் கலந்துகொண்டனர். நிகழ்வின் போது கலைஞர்களுக்கு 'கலைஞானச்சுடர்' மற்றும் இளம் கலைஞர்களுக்கு 'இளம் கலைஞர்' விருது வழங்கியும் கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கியும் மதிப்பளிக்கப்பட்டது.

அத்துடன் 'கலைஞானச்சுடர்' கைநூல் வெளியிடப்பட்டதுடன் கலைநிகழ்வுகளும் நடைபெற்றன. (ஐ)

# சீரற்ற உணவுப் பழக்கத்தால்தான் மகப்பேற்றில் அறுவைச்சிகிச்சை

## ஆடிப்பிறப்புக் கொண்டாட்டத்தில் மாவட்டச் செயலர் தெரிவிப்பு

வவுனியா, ஜூலை 19

எமது பாரம்பரிய உணவுப் பழக்கம் மற்றும் உடற் பயிற்சிகளில் மாற்றம் ஏற்பட்டதன் காரணமாக அதிகளவு தாய்மார்கள் சத்திரசிகிச்சை மூலமே குழந்தை பெற்றுக்கொள்கிறார்கள். ஆகவே உடற்பயிற்சிகள் மற்றும் எமது பாரம்பரிய உணவு முறைகளை கைவிடக் கூடாது.



இவ்வாறு வவுனியா மாவட்டச் செயலர் ஐ.எம்.கனீபா தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் ஆடிப்பிறப்பு கொண்டாட்டம் மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

ஆடிக்கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மருத்துவர் செல்வராசா மதுகரன் தெரிவித்ததாவது:

கோதுமை மாவின் வருகையுடன் எமது பாரம்பரிய உணவுப்பழக்க வழக்கங்கள் தலைகீழாக மாறி விட்டன. எமது சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள தொற்றா நோய்க்குக் காரணமாக இருக்கும் உணவுகளைத் தவிர்த்து எமது பாரம்பரிய உணவு முறைகளுக்கு மாறும் போது 99 வீதமான தொற்றா நோய்களைத் தவிர்க்க முடியும் என்று தெரிவித்தார்.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற ஆடிப்பிறப்பு கொண்டாட்டத்தில் மாவட்டச்செயலர், அலுவலர்கள், ஊழியர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

அனைவருக்கும் மோதகம் மற்றும் ஆடிக்கூழ் வழங்கப்பட்டன.

**சிலையடி**

வவுனியாவில் தர்மலிங்கம் வீதியிலுள்ள சோமசுந்தரப்புலவர் நினைவுச்சிலையடியில் நேற்றுமுன்தினம் காலை 8.30 அளவில் வவுனியா முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் அனுசரணையில் வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் ஆடிப்பிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றன. வவுனியா விபுலானந்தக்கல்லூரி மாணவர்கள் 'ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை' பாடலைப் பாடினர். தொடர்ந்து சோமசுந்தரப் புலவரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் வவுனியா நகரசபை உறுப்பினர்கள், வவுனியா நகரசபை செயலர் தயாபரன், மாவட்ட சமூக சேவை அலுவலர் செ.சிறிநிவாசன், பிரதேச கலாசார அலுவலர் வீ.பிரதீபன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் ச. கண்ணன், செயலர் மா. ஜெகன், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத் தலைவர் ரவீந்திரன், வர்த்தக சங்க உறுப்பினர்கள், நகரசபை ஊழியர்கள், சமூக ஆர்வலர்கள், வர்த்தகர்கள் விபுலானந்தாக்கல்லூரி பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்

**திகதிகளில் தவறு**

அதில் தமிழருவி சிவகுமார் தெரிவித்ததாவது:

எமது பகுதிகளில் காணப்படும் பெரியார்கள் சிலரின் சிலைகளில் காணப்படும் பிறந்த திகதி மற்றும் இறந்த திகதிகள் தவறாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. சோமசுந்தரப் புலவர் யாழ்ப்பாணம் நவாலியூரில் 1878 ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி பிறந்தார். ஆனால் இங்கு காணப்படும் சிலையில் ஜூன் மாதம் 12ஆம் திகதி என்று காட்சிப் படுத்தப்பட்டிருக்கின்றது.

அவர் மறைந்த திகதி 1953ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10ஆம் திகதி. கடந்த 10ஆம் திகதியே அவருடைய மறைவு தினம். சரியாக 75வருடங்கள் இந்தப் பூமியிலே வழ்ந்தவர். அதில் 60வருடங்களாகத் தமிழ்த் தொண்டு செய்தவர். அவருடைய 15ஆவது வயதில் கவிதைகள் இயற்றத் தொடங்கியவர். இன்று இலங்கையினுடைய வடதிசையிலே தோன்றிய தமிழ்ப் பாரம்பரியத்தின் மிகச்சிறந்த முக்கியமானவராக நவாலியூர் சோமசுந்தரப்புலவர் போற்றப்படுகின்றார்.

அவருடைய காலத்திலே நிறையப் புலவர்கள் இருந்தார்கள். இவருக்கு தங்கத் தாத்தா என்று ஒரு பெயர். அவருடயை தமிழ் அவ்வாறான ஒரு தங்கம்போன்றது. அதனாலேயே அவர் தங்கத்தாத்தா என்று அழைக்கப்பட்டார் என்று மேலும் தெரிவித்தார்.

**மன்னார்**

வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஒழுங்கமைப்பில் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் ஆடிப்பிறப்புக் கொண்டாட்ட நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் சிறப்பு அதிதியாக வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் கலந்து கொண்டார்.

மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ், வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் சி.சத்தியசீலன், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் இ.இளங்கோவன், மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலர் திருமதி எஸ்.துரைராஜா மற்றும் மாகாணத் திணைக்களங்களின் செயலர்கள், மன்னார் மாவட்டச் செயலக தலைமைக் கணக்காளர், மேலதிக மாவட்டச் செயலர் சி.குணபாலன் மன்னார் மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலர்கள், காணி அலுவலர்கள், மன்னார் மாவட்டச் செயலக ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஆடிப்பிறப்பு நிகழ்வை மன்னார் மாவட்டச் செயலக கலாசார அலுவலர் இ.நித்தியானந்தன் நெறிப்படுத்தியிருந்தார்.

(கு-213)

## ஆடிப் பிறப்பு நிகழ்வுகள்





யாழ்ப்பாணம்.ஜூலை 19

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாரணர் மாணவர்களால் ஆடிப்பிறப்பு நிகழ்வு பாடசாலையில் மிகச் சிறப்பாக கொண் டாடப்பட்டது.

கல்லூரி அதிபரின் வழிகாட்டுதலில் குழுச் சாரணியப் பொறுப்பாசிரியர் க.சுவாமிநாதனின் நெறிப்படுத்தலில் இந்த நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வுகள் தேவாரத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து க.சுவாமிநாதன் ஆசிரியர் ஆடிப் பிறப்பு கொண்டாடப்படுவதன் முக்கியத்துவம் தொடர்பாக உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து மாணவர்கள் நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் "ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை..... "என்ற பாடலை பாடி மகிழ்ந்தனர். ஆடிக்கூழ் , கொழுக்கட்டை என்பன சமைக்கப்பட்டு பாடசாலைச் சமூகத்தினர் அனைவருக்கும் பரிமாறி நிகழ்வைச் சிறப்பாகக் கொண்டாடினர். (ஐ)

✦ ✦ ✦ ✦



கொடிகாமம், ஜூலை 19

யாழ்ப்பாணம் கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலையில் ஆடிப்பிறப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

அதிபர் க. இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஒன்றிணைந்து ஆடிப்பிறப்பு நிகழ்வை சிறப்பாகக் கொண்டாடினர். அத்துடன் மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றதுடன் கூழ் சமைத்து அனைவருக்கும் பரிமாறப்பட்டது. (ஐ-159)

✦ ✦ ✦ ✦

முல்லைத்தீவு, ஜூலை 19

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆடிப்பிறப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஆடிப்பிறப்புக் கொண்டாட்ட நிகழ்வில் மாவட்டச் செயலர் உட்பட மாவட்ட செயலக அலுவலர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டிருந்தனர். அனைவருக்கும் ஆடிக்கூழ் வழங்கப்பட்டது. (கு-ரி3)



## பெருந்திருவிழா

சாவகச்சேரி, ஜூலை 19

யாழ்ப்பாணம் சாவகச்சேரி வடக்கு இலஞ்சி ஆரணியம் குமர கோட்ட முருகமூர்த்தி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 30 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

திருவிழா கிரியைகள் வேதாகமசிரோன்மணி சிவசிறி தே.கௌரிசங்கரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ -9)

## பச்சிலைப் பள்ளிப் பிரிவில் 89 குடும்பங்களுக்கு வீடுகள்

பளை, ஜூலை 19

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள 89 குடும்பங்களுக்கு மீள்குடியமர்வு அமைச்சால் நிரந்தர வீடுகள் அமைக்கப் படவுள்ளன என்று பிரதேச செயலகத் தரப்புத் தெரிவித்தது.

வீட்டுத்திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு அறிவுறுத்தல் கூட்டம் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்தியாவிலிருந்து தாயகத்துக்குத் திரும்பி மீளக்குடியமர்ந்த 5 குடும்பங்கள் 2012 இன் பின்னர் தமது காணிகளில் மீள்குடியமர்த்தப்பட்ட குடும்பங்கள் போன்றோருக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டுள்ளன. முகாவில், பளை நகரம், அரசர்கேணி, தம்பகாமம், இயக்கச்சி, கிளாலி, மாசார், வேம்பொடுகேணி, புலோப்பளை, முகமாலை, புலோப்பளை மேற்கு, முல்லையடி, கச்சார்வெளி, தர்மக்கேணி, இத்தாவில் ஆகிய கிராமஅலுவலர் பிரிவுகளில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று அங்கு தெரிவிக்கப்பட்டது. (கு-9)

## பரிசளிப்பு நிகழ்வும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம்.ஜூலை 19

யாழ்ப்பாணம் மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வும், நூல் வெளியீடும் இன்று வெள்ளிக்கிழமை பாடசாலை முதன்மை மண்டபத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

அதிபர் திருமதி நறுமதா பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ)

# வெல்ல உற்பத்தி நிலையத்துக்கு ரூ.11 மில்லியன் ஒதுக்கப்பட்டது

## ஆரம்ப வேலைகளை நேற்றுப் பார்வையிட்டனர்

கிளிநொச்சி, ஜூலை 19

கண்டாவளை வெல்ல உற்பத்தி நிலையத்துக்கு மீள்குடியேற்ற மற்றும் வடக்கு அபிவிருத்தி அமைச்சின் ஊடாக 11 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த பகுதியில் வசிக்கின்ற மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தினரின் வேண்டுகோளையேற்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் பரிந்துரையின் அடிப்படையில் குறித்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் ஆரம்பக்கட்ட வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சின் அலுவலர்களும் பனை அபிவிருத்தி சபையினரும் அங்கு நேற்றுக் களப் பயணம் மேற்கொண்டனர். அவர்களுடன் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேனும் சென்றார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-222)



## சிறுவர்களின் நலன்கருதி 21 பேருக்கு தலா 5,000 வைப்பு

கிளிநொச்சி, ஜூலை 19

கிளிநொச்சி உருத்திரபுரம் காந்தி நிலைய சிறுவர்களின் எதிர்கால நலன் கருதி அங்குள்ள 21 சிறுவர்களுக்கும் புதிய வங்கிக் கணக்குகளை ஆரம்பித்து, தலா 5 ஆயிரம் ரூபா வீதம் வைப்பிலிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பின் பிரான்ஸ் நாட்டு ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான சிவஞானம் ரங்கன் குறித்த நிதியை வைப்பிலிட்டுள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-222)

## ஆராய்ச்சி நிலையத்தில் நேற்று மதியம் தீ பரவல்

வவுனியா, ஜூலை 19

வவுனியா ஏ-9 வீதியில் அமைந்துள்ள விவசாய திணைக்களத்தின் அனுசரனை ஆராய்ச்சி நிலையத்தில் நேற்று மதியம் தீ ஏற்பட்டுள்ளது.

ஆராய்ச்சி நிலையத்தில் காணப்படும் வயல் நிலத்தில் ஓர் இடத்தில் ஏற்பட்ட தீ வயல் முழுவதும் பரவிப் பற்றியெரிந்தது.

அதனையடுத்து வவுனியா நகரசபைத் தீயணைப்புப் பிரிவினரின் உதவியுடன் வயலில் ஏற்பட்ட தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

தீ ஏற்பட்ட பகுதி வெற்று வயல் என்பதால் விவசாயத் திணைக்களத்தின் ஆராய்ச்சி நிலையத்தின் நடவடிக்கைகளில் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை. தீ ஏற்பட்டதற்கான காரணம் கண்டறியப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## குடிசை வீடு தீயில் நாசம்



கிளிநொச்சி, ஜூலை 19

இயக்கச்சியில் குடிசை வீடு ஒன்று எரிந்து நாசமாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேசசபைக்கு உட்பட்ட இயக்கச்சி பகுதியில் நேற்று முன்தினம் இரவு அது எரிந்துள்ளது. இனம்தெரியாதோர் அதற்குத் தீ வைத்திருக்கலாம் என்று அந்தக் குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

கிணறு இல்லாததால் தீயை அணைக்கமுடியவில்லை. எமது ஆவணங்கள் உடைமைகள் எல்லாம் சேதமடைந்துவிட்டன என்று தெரிவித்தனர். இது பற்றி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்படவில்லை என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர். (த-6)



## இரட்டை வாய்க்கால் வீதியை சீரமைக்கவும்

முல்லைத்தீவு, ஜூலை 19

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேசத்துக்கு உட்பட்ட இரட்டைவாய்க்கால் தொடக்கம் அடைக்கலமாத கோவில் வரையான 8 கிலோமீற்றர் வீதியைச் சீரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான இந்த வீதி குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

இந்த வீதியில் 300 மீற்றர் தூரம் மாத்திரம் தார்போட்டு செப்பனிடப்பட்டுள்ளது.

ஏனைய வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால் மக்கள் பயணிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பலதடவைகள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையிட்டும் எவரும் கண்டுகொள்ளவில்லை என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். எனவே இந்த வீதியை விரைவில் சீரமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-ரி3)

## மைதான சீரமைப்பு டிசெம்பருக்குள் நிறைவு

மன்னார், ஜூலை 19

மன்னார் பள்ளிமுனை புனித லூசியா விளையாட்டு மைதானச் சீரமைப்புப் பணிகள் டிசெம்பர் மாதத்துக்குள் முழுமையாக்கப்படும் என்று நகர திட்டமிடல் அதிகார சபையின் திட்டப் பணிப்பாளர் ஜெமுனு பிரேம தெரிவித்தார்.

சீரமைப்பு கைவிடப்பட்டதால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டன.

இதுபற்றி மன்னார் நகர சபை, நகரத் திட்டமிடல் அதிகார சபை மற்றும் மன்னார் மாவட்ட பொறியியலாளர் சங்கம் ஆகியனவற்றுக்கிடையில் கடந்த திங்கட்கிழமை மதியம் மன்னார் நகர சபையில் சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நகரத் திட்டமிடல் அதிகார சபை குறித்த விளையாட்டு மைதானத்தில் உள்ள பிழைகள் தொடர்பில் சிறப்புக்குழு ஒன்றை நியமித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். டிசெம்பர் மாதம் குறித்த வேலைத்திட்டங்கள் முழுமை யாக்கப்பட்டு மன்னார் நகர சபையிடம் ஒப்படைக்கப்படும் என்று மேலும் தெரிவித்தார். (த-56)

## ரூ.10 லட்சம் பெறுமதியான தங்கூசி வலைகள் மீட்கப்பட்டன

கிளிநொச்சி, ஜூலை 19

பள்ளிக்குடா கடற்பரப்பில் கைவிடப்பட்டிருந்த சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கூசி வலைகளைக் கைப்பற்றிய கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர்.

கிளிநொச்சி மாவட்ட பூநகரி - பள்ளிக்குடா கடற்பரப்பில் வழமையான சோதனையில் ஈடுபட்ட கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் திணைக்கள நீரியல் வளத்துறை அதிகாரிகள் கடற்கரை ஓரமாகக் கைவிடப்பட்ட நிலையிலிருந்த தங்கூசி வலைகள் இருந்தமையை அவதானித்தனர். இந்த வலைகளுக்கு உரிமை கோர எவரும் முன்வராமையால் அதிகாரிகள் வலைகளைக் கைப்பற்றி கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் ஒப்படைந்துள்ளனர். (த-115)





## மறைத்து வைக்கப்பட்டிருந்த 19 கிலோ கடலட்டை சிக்கியது

### சந்தேகத்தில் ஒருவர் கைது

மன்னார், ஜூலை 19

மன்னார், எருக்கலம்பிட்டியில் சட்டவிரோதமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயிரத்து18.9கிலோ உலர் கடல் அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. கடற்படையினரும், மாவட்டக் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளும் இணைந்து இந்தக் கடலட்டைகளை மீட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் திடீரென நடத்தப்பட்ட சோதனையின்போது வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இவை கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. வீட்டின் உரிமையாளரே கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், விசாரணைகளின் பின்னர் அவர் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார் என்றும் மன்னார் மாவட்டக் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-56)



## பொலிஸ் நிலைய வளாகத்தில் விளையாட்டு அரங்கம் திறப்பு

வவுனியா, ஜூலை 19

வவுனியா பொலிஸ் நிலைய வளாகத்தில் நேற்றுக் காலை உள்ளகப் பூப்பந்தாட்ட விளையாட்டு அரங்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் மாமடுவ விகாராதிபதி, வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் விஜே குணவர்த்தன, வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர அபேவிக்கிரம, மடுக்கந்த சிறப்பு அதிரடிப்படை முகாம் அதிகாரிகள், வவுனியா பிரதேச செயலர் கா. உதயராசா, உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

நிகழ்வின் இறுதியில் வளாகத்தில் மரக்கன்றுகள் நடுகை இடம்பெற்றது. (த)

# வடக்கு மீன்பிடியின் உண்மை நிலவரத்தை அறிந்துகொள்ள தெற்கு மீனவர்கள் வருகை

## அடுத்த மாதம் இடம் பெறும் என்று தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 19

தென்னிலங்கை மீனவ பிரதிநிதிகளை வடக்குக்கு அழைத்து வந்து வட பகுதி மீன்பிடித் தொழிலின் உண்மை நிலவரத்தை விளக்குவதற்காக அனுபவப் பரிமாற்று நிகழ்ச்சி ஒன்றை அடுத்த மாதம் நடத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது பற்றிய விரிவான கலந்துரையாடல் நடத்துவது என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

பருவகால மீன்பிடியிலுள்ள பிரச்சினை தொடர்பாக வடக்கு - தெற்கு மீனவர்களுக்கிடையிலான கலந்துரையாடல் நீர் கொழும்பில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அதில் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் வடக்கு கிழக்கு இணைப்பாளர் அன்டனி ஜேசுதாஸன் தலைமையில் இடம்பெற்றது.

அங்கு, வடக்கு மீனவர்கள் பருவகால மீன்பிடி முறையால் குறிப்பாக தெற்கு மீனவர்களின் வருகை மற்றும் அவர்கள் பயன்படுத்துகின்ற சட்டவிரோத மீன்பிடி முறைகளால் தொடர்ச்சியாகப் பாதிக்கப்படுகின்றனர். இது தொடர்பாக தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் பலகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதன் மேலும் ஒரு படியாக வடக்குத் தெற்கு மீனவர்களுக்கிடையிலான கலந்துரையாடல் வழியாக நிரந்தரத் தீர்வை நோக்கி நகர்வதை அடிப்படையாகக் கொண்டே இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டதாக அதன் இணைப்பாளர் தெரிவித்தார்.

இதற்கு பிறகு வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர், உப தலைவர், செயலர் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் தலைவர் மற்றும் மன்னார் மாவட்ட பெண் பிரதிநிதி ஒருவருமாக தமது அனுபவங்களை பகிர்ந்துக் கொண்டனர்.

தென்னிலங்கை மீனவர்கள் மற்றும் பிற மாவட்ட மீனவர்களின் வருகை மற்றும் அவர்கள் பயன்படுத்தும் சட்டவிரோத மீன்பிடி முறை காரணமாக குறிப்பாக லயிட்கோஸ், டைனமைற், சுருக்குவலை மற்றும் கரைவலை தொழிலுக்காக றெக்டர் மெசினைப் பாவித்து தொழில் செய்வதால் சிறு மீனவர்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. புதிய தொழில்நுட்ப முறைகள் இல்லாமல் மற்றும் அரசின் சரியான அபிவிருத்தித் திட்டங்கள் இல்லாததால் தாம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளோம். தெற்கு மீனவர்கள் இதை உணர்ந்து வட பகுதியில் தமது வருகையை வரையறுக்குமாறும், பாரம்பரிய தொழிலை மாத்திரம் மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டனர்.

இதன்போது தெற்கு மீனவர்கள் வட பகுதி மீனவர்களிடம் பல கேள்விகளை கேட்டிருந்தனர்.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஹெர்மன் குமார வட பகுதி மீனவர்களின்பிரச்சினைகளை தெற்கு மீனவர்கள் சரியாக புரிந்துக்கொள்வதற்காக பகுப்பாய்வு செய்து தெளிவுப்படுத்தினார்.

இதன்போது வடக்கு - தெற்கு மீனவர்களின் பல கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன. இறுதியாக இரு பகுதி மீனவர்களும் ஏனைய மீனவர்களைத் தெளிவுப்படுத்துவதற்காக ஒரு உடன்பாட்டுக்கு வந்தனர். அது இறுதி உடன்பாடு அல்ல. அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வரைக்கும் மீனவர்களுக்கிடையில் இதை நடத்துவது என்று தெரிவிக்கப்பட்டது.

அதன்படி,

1. பாரம்பரியமாக வட பகுதியில் குறிப்பிட்ட பகுதிகளில் தொழிலில் ஈடுபட்ட தென் பகுதி மீனவர்கள் அந்தந்தப் பகுதிகளில் பாரம்பரிய தொழிலை மேற்கொள்ள முடியும். அவர்களின் தொகை தொடர்பாக வட பகுதியில் இருக்கின்ற கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களுடன் கலந்துரையாடி அவர்களின் தீர்மானத்துக்கு ஏற்பவே மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. ஒரு பகுதியிலிருந்து வேறொரு பகுதிக்கு மீன்பிடித் தொழிலுக்குச் செல்வதாயின் அந்தப் பகுதி மீன்பிடி சங்கங்கள் மற்றும் சமாசங்களுடன் கலந்துரையாடி, அந்தப் பகுதி சட்டதிட்டங்களை ஏற்று அதற்கு மதிப்பளித்தேதங்கள் தொழிலை மேற்கொள்ள வேண்டும்.
3. போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மீனவர்கள் தொடர்பாக சிறப்பு அவதானம் செலுத்தி அரசு மீனவர்களுக்கு தொழில்நுட்பத்தை பெற்றுக்கொடுத்தல் மற்றும் நிவாரணங்களை வழங்குவதோடு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
4. கடல் வளங்களை அழிக்கின்ற இழுவை மடிகளைக் கட்டுப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள சட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துதல்.
5. லயிட்கொஸ், டைனமைட், இழுவைமடிகள் உட்பட சகல விதமான சட்டவிரோத மீன்பிடி முறைகளையும் நிறுத்துவதற்கான நடவடிக்கையை அர்சு சிறப்பாக மேற்கொள்ளல்.

இதற்கு அப்பால் ஆகஸ்ட் மாதம் தென்னிலங்கை மீனவ பிரதிநிதிகளை அழைத்து வந்து வட பகுதி மீன்பிடித் தொழிலின் உண்மை நிலையைக் காட்டுவதற்காக அனுபவப் பரிமாற்று நிகழ்ச்சி ஒன்றை நடத்த முடிவெடுக்கப்பட்டது. மேலும் ஒரு பரவலான கலந்துரையாடலை ஒழுங்குசெய்வது என்றும் முடிவு எடுக்கப்பட்டது. அதில் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மாத்தறை, காலி, கம்பஹா மற்றும் புத்தளம் மாவட்டங்களின் பிரதிநிதிகள், பெண்கள், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட இணைப்பாளர்கள், தேசிய செயலக இணைப்பாளர்கள் கலந்துகொண்டனர். (து)

# ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு

தென்மராட்சி, ஜூலை 19

தென்மராட்சி கிழக்கு எழுதுமட்டுவாழ் தெற்கில் அமைக்க ப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் நாள்ள சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

எழுதுமட்டுவாழ் தெற்கு கரம்பகம் ஒட்டுவெளி போன்ற கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களுக்கான ஆரம்ப சுகாதார சிகிச்சைக்கென இக்கட்டடம் அமைக்கப்பட்டது.

சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஈ.தேவநேசன், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு, சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன், ஓய்வுபெற்ற அதிபர் இ.கைலைநாதன், கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஈ. எம்.எஸ்.எதிரிசிங்க மதிப்புறு விருந்தினர்களாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதாரத் திணைக்கள முன்னாள் திட்டமிடல் மருத்துவ அதிகாரி எஸ்.நித்தியானந்தா, சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் க.தயாளன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க காணியை அன்பளிப்புச் செய்த எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்த திருமதி இ.சிவபாக்கியம் மதிப்பளிக்கப்படவுள்ளார். (ஐ-9)

# மின்தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்ப்பாண மாவட்டத்தில் மாதகல்,காஞ்சிபுரம், குசுமாந்துறை, காட்டுப்புலம், ஜம்புகோளப்பட்டினம், ஜம்புகோளப்பட்டினம் வாடி வீடு, ஆர்க்லேன் உடுவில், அம்பலவாணர் வீதி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆனந்தபுரம்,பாரதிபுரம், கிருஸ்ணபுரம், மலயாழபுரம், இரணைமடு சந்தி, கிளிநொச்சி மருத்துவமனை, இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், இராணுவ ஆதார மருத்துவமனை ஆகிய இடங்களிலும் மன்னார் மாவட்டத்தில் செம்மண்தீவிலிருந்து நானாட்டான் வரை,

அளவாக்கை, பள்ளங்கோட்டை, அச்சங்குளம், செம்மண்தீவு ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கன்னியா தாக்குதலுக்கு வலி. வடக்கில் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

கன்னியாவில் தாக்குதல் நடத்தப்பட்டமை மற்றும் மத அடக்குமுறைக்கு எதிராக வலி.வடக்குப் பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம் ஒன்று நேற்று நிறைவேற்றப்பட்டது.

சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் மாதந்த அமர்வு நேற்று நடைபெற்றது. அதில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினரால் கொண்டு வரப்பட்ட தீர்மான வரைபு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

கன்னியா வெந்நீர் ஊற்றுப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் பௌத்த விகாரை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அண்மையில் போராட்டம் நடத்தப்பட்டது. அதில் இந்து மதத் தலைவர்கள் அவமதிக்கப்பட்டமை, தமிழர்கள் தாக்கப்பட்டமை போன்ற சம்பவங்கள் நடந்துள்ளன. இது தமிழர்களைப் பெரும்பான்மை இனத்தவர்கள் அடக்குவதாகவும், மதம் சார்ந்த பெரியவர்களை இழிவுபடுத்துவதாகவும் அமைந்துள்ளது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-7,26)

கஞ்சா கடத்தல் வழக்கில்

# பொலிஸ் அலுவலர் உட்பட சந்தேகநபர்கள் இருவருக்கு மறியல்

சாவகச்சேரி, ஜூலை 19

கஞ்சா கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் கைதான பொலிஸ் அலுவலரையும் மற்றைய சந்தேகநபரையும் சாவகச்சேரியிலுள்ள எதிர்வரும் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

கடந்த திங்கட்கிழமை காலை தென் பகுதியிலிருந்து வந்த வர்கனத்தில் பயணித்த பொலிஸ் அலுவலர் 4 கிலோ 400 கிராம் கஞ்சா போதைப் பொருளைக் கொண்டு வந்திருந்தார். அவர் பொலிஸ் அலுவலர் என்பதை அறியாத இராணுவத்தினர் அவரை விசாரித்துப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

சந்தேகநபரான பொலிஸ் அலுவலர் சாவகச்சேரியில் மற்றைய நபரை வரவழைத்து சாவகச்சேரி அஞ்சலக வீதியில் வைத்து கஞ்சாவைக் கைமாற்றும்போது அங்கு மறைந்திருந்த தாம் இருவரையும் கைது செய்திருந்தோம் என்று சாவகச்சேரிப் பொலிஸார் நீதிமன்றில் நேற்றுத் தெரிவித்தனர். கஞ்சா போதைப் பொருளைக் கொள்வனவு செய்ய வந்தார் என்று கூறப்படும் நபர் தனக்குச் சுகவீனம் என்று கூறியதால் சாவகச்சேரி ஆதார மருத்து வமனையில் சேர்க்கப்பட்டார்.

பொலிஸ் அலுவலரை நீதிமன்றப்பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியபோது நேற்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டிருந்தார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நபரும் பொலிஸ் அலுவலரும் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப் பட்டனர். இருவரையும் எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. சந்தேநபரான பொலிஸ் அலுவலர் பொகவந்தலாவையைச் சேர்ந்த 27 வயதுடைய வன்னிநாயக்க என்றும் வவுனியா ஈரப்பெரியகுளம் பொலிஸ் நிலையத்தில் பணிபுரிகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை குறித்த மற்றைய நபரான எம்.கே. ரிசாத் குடும்பத்தினருக்கும் தமது சிற்றூண்டிச் சாலைக்கு எந்தச் சம்பந்தமும் இல்லையென்று சாவகச்சேரியில் இயங்கும் முஸ்லிம் சிற்றுண்டிச் சாலை உரிமையாளர் தெரிவித்தார். (து-117)

# கல்வி ஊக்குவிப்புக் கொடுப்பனவு

கொடிகாமம், ஜூலை 19

சாவகச்சேரியில் டிறிபேக் கல்லூரியில் கல்வி பயிலும் வசதியற்ற 25 மாணவர்களுக்கு இந்த மாதத்துக்கான கல்வி ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் வழங்கப்பட வுள்ளன.

இந்த நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மதியம் 12 மணிக்கு அதிபர் எஸ். பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் ஆஸ்திரேலியா பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தினரால் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் குறித்த மாணவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா கல்வி ஊக்குவிப்பு கொடுப்பனவாக வழங்கப்பட்டுவருகிறது. (ஐ-159)

# ரஞ்சனைக் கைது செய்யாவிட்டால் சிறிகொத்தாவை முற்றுகையிடுவோம்

## மிரட்டுகின்றன பௌத்த அமைப்புக்கள்

கொழும்பு, ஜூலை 19

பிக்குகளுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் காணொலியையும் கருத்துக்களையும் வெளியிட்ட இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவை இரண்டு நாள்களுக்குள் கைது செய்யாவிட்டால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவை முற்றுகையிடுவோம் என்று பௌத்த பேரினவாத அமைப்புக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, இலங்கையில் இனவாதத்தை பரப்பி வன்முறைகளில் ஈடுபடும் பிக்குகள் அனைவரும் சிறு வயதில் பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளானவர்கள் என்று குறிப்பிட்டிருந்தார். விகாரைகளிலேயே பிக்குகள் சிறு வயதிலேயே பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளாகியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இராஜாங்க அமைச்சரின் கருத்தால் கடும் ஆத்திரத்துக்கு உள்ளாகியிருக்கும் பௌத்த பேரினவாத அமைப்புக்கள் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்தி வருகின்றன.

சிங்கள ராவய, ராவண பலய, சிங்கலே ஆகியவற்றின் தலைமைப் பிக்குகள் பொலிஸ் தலைமையகத்துக்கு நேற்று முன்தினம் நேரில் சென்று இராஜாங்க அமைச்சருக்கு எதிராக முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளன.

இந்த நிலையிலேயே, இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவை கைது செய்வதற்கு இரண்டு நாள் கால அவகாசம் வழங்கி, பௌத்த பேரினவாத அமைப்புக்கள் பொலிஸார் முன்னிலையில் எச்சரிக்கை விடுத்துள்ளன. (ஒ.5)

# அமெரிக்க – சீன முரண்பாட்டுக்கு நாட்டை பலிக்கடாவாக்க முடியாது

## வாசுதேவ கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 19

அமெரிக்க சீன முரண்பாடுகளுக்கு நாட்டைப் பலியாக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்கா ஆசிய நாடுகளில் நிரந்தர ஆதிக்கம் செலுத்தும் திட்டங்களை தற்போது வகுக்கின்றது. சீனாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் பெரிய பொருளாதார போட்டித்தன்மை காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில் எமது நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் ஒப்பந்தங்களை அமெரிக்காவுடன் அரசு செய்துகொள்வது எதிர்காலத்தில் நாட்டை பெரிய நெருக்கடிக்குள் கொண்டு செல்லும் - என்றார். (ஒ.5)

# பயங்கரவாதத்தை ஒழிக்க 8 ஆண்டுகளாவது தேவை

## கூறுகிறார் பொன்சேகா

கொழும்பு, ஜூலை 19

நாட்டில் பயங்கரவாதத்தை முற்றாக ஒழிப்பதற்கு 8 அல்லது 9 ஆண்டுகளாவது தேவையென நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

களனியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டதாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், உடனடியாக இதனை ஒருபோதும் நிறுத்த முடியாது. என்னைப் பொறுத்தவரை பயங்கரவாதத் தாக்குதலொன்றை தடுக்கக்கூட இன்னும் இரண்டு வருடங்கள் தேவைப்படுகிறது. பயங்கரவாதத்தையே முற்றாக இல்லாதொழிக்க எப்படியும் இன்னும் 8 அல்லது 9 ஆண்டுகளாவது வேண்டும். நான் கூறுவதை இன்று எவரும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. தயாசிறி ஜயசேகர போன்றோர் பயங்கரவாதம் தொடர்பில் எனக்கு பாடம் கற்பிக்கவே தற்போது முற்படுகிறார்கள். எதிர்காலத்தில் என்ன நடக்கின்றது என்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் - என்றார். (ஒ.5)

# ஜே.வி.பியும் பொதுவேட்பாளரை தேர்தலில் களமிறக்குகிறது



கொழும்பு, ஜூலை 19

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தலைமையிலான இடதுசாரி கூட்டணி சார்பாக பொது வேட்பாளர் அடுத்த அரச தலைவர் தேர்தலில் களமிறக்கப்படுவார் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது வேட்பாளரை அறிவிக்க முதலில் அரச தலைவர் தேர்தலுக்கான திகதியை அறிவிக்க வேண்டும். ஒரு பொதுவான வேட்பாளர் தொடர்பாக பொது மக்கள் வைத்திருந்த நம்பிக்கையை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சிதைத்துள்ளார்.

என்வே இடதுசாரி குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தும், ஜனநாயகத்தை ஆதரிக்கும் மற்றும் அதன் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் முற்போக்கான வேட்பாளரையே மக்கள் விடுதலை முன்னணி களமிறக்கும்.

கடந்த 71 ஆண்டுகளில், இலங்கை சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன புதிய மற்றும் பழைய தலைவர்களுடன் ஆட்சிக்கு வந்த பிற கட்சிகள் இரண்டாலும் நாட்டை மேம்படுத்த முடிய வில்லை. எவ்வாறாயினும், இந்த இலக்கை மக்கள் விடுதலை முன்னணியால் உடைத்தெறிய முடியும் - என்றார். (ஒ.5)

# தெரிவுக் குழுவின் அறிக்கை ஓகஸ்டில் இறுதி செய்யப்படும்

கொழும்பு, ஜூலை 19

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து ஆராயும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கை ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதிக்குள் தயாராகி விடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்க அதிகாரம் இல்லாததால், பெயர் குறிப்பிட விரும்பாத தேர்வுக் குழுவின் உறுப்பினர் ஒருவரே இந்த விடயம் தொடர்பாக தெரிவித்தார் என்று கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

2019 ஆகஸ்ட் 25ஆம் திகதிக்குள் குறித்த குழுவின் அறிக்கை நிறைவு செய்யப்படுமென அவர் தெரிவித்துள்ளார். தற்போது முக்கிய நபர்களிடம் சாட்சியங்கள் பெறப்பட்டுள்ளன என்று தெரிவித்த அவர், எதிர்வரும் 24ஆம் திகதி புலனாய்வு அதிகாரிகளிடம் சாட்சியங்கள் பெறவுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, புலனாய்வு அதிகாரிகளிடம் பெறப்படும் சாட்சியங்கள் தொடர்பான அறிக்கை குறித்து பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையுடன் கலந்துரையாட வேண்டும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து முடிவெடுக்கப்ப டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# திறன் வகுப்பறை திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ்ப்பாணம் காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் கந்தசாமி பேரின்பகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. இளங்கோ, சிறப்பு விருந்தினராக காரைநகர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஆ. குமரேசமூர்த்தி, மதிப்புறு விருந்தினர்களாக திருமதி ப. அருமைத்துரை, க. ஜெயராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ஆ. இளங்கோ திறன் வகுப்பறை திறந்துவைத்து உரையாற்றுகையில்,

"தீவக கல்வி வலயத்தில் சிறப்பாக இயங்கிவரும் ஆரம்பப் பாடசாலைகளில் இப்பாடசாலையும் ஒன்றாகும். நவீன உலகின் போக்கிற்கேற்ப மாணவ சமுதாயத்தினரும் மாற்றமடைய வேண்டிய சூழலில் இத்தகைய திறன் வகுப்பறையின் மூலம் தொழில்நுட்டத் திறன் மிக்க மாணவர்களை உருவாக்கமுடியும். கிராமப்புறத்தில் அமைந்த இப்பாடசாலைக்கு திறன் வகுப்பறையையும், உபகரணங்களையும் வழங்கிய பழைய மாணவர்களுக்கும் ரட்ணம் 'பவுண்டேசன்' இயக்குநருக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்." எனத் தெரிவித்தார்.

பாடசாலையின் பழைய மாணவர்களான ஐயம்பிள்ளை தவராஜா, திருமதி விஜயராசா குலராணி, திருமதி சுவர்ணராசா தவராணி ஆகியோரின் நிதிப்பங்களிப் பில் கலாநிதி ரட்ணம் நித்தியானந்தன் (ரட்ணம் 'பவுண்டேசன்') அனுசரணையுடன் மேற்கொண்டிருந்தனர். (ஐ)



# திருமலைப் பிரச்சினைகளுக்குக் காரணம் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களமே

## சிவமோகன் எம்.பி. விசனம் தெரிவிப்பு

மன்னார், ஜூலை 19

திருகோணமலைப் பிரச்சினைக்கு முக்கிய காரணம் தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம். அந்தத் திணைக்களத்தின் வேண்டத்தகாத செயற்பாடுகள் தான் மக்களின் ஒற்றுமையைச் சீர் குலைக்கிறது.

இவ்வாறு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் தெரிவித்தார்.


வவுனியா சைவபிரகாசா வித்தியாலயத்தில் பத்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட மைதான பார்வையாளர் அரங்கு நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது. திறந்து வைக்கும் நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாது:

**பிரித்தாளும் சூழ்ச்சி**

அது ஒரு புறம் இருக்க நாங்கள் தமிழர்களாக தமிழ் பேசும் ஒரு சமூகத்தினராக வடக்கு-கிழக்கு இணைந்த மாநிலத்தில் எமக்கான சுயமதிப்புடன் வாழ்வதற்கான தீர்வுக்காக நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இன்று எமது சமயங்களை வைத்து பிரித்தாளும் சூழ்ச்சி நடக்கிறது. திருக்கேதீச்சரத்தில் சாதாரணமாக முடிக்க வேண்டிய பிரச்சினை வளர்த்துவிடப்பட்டிருக்கிறது. கடந்த பயங்கரவாத தாக்குதலை வைத்துக் கொண்டு கிறிஸ்தவ, முஸ்லிம் மக்களிடையே முரண்பாட்டை வளர்த்து விடத் துடிக்கிறார்கள்.

**ஆழமாகச் சிந்திக்கும் திறனை வளர்க்கவும்**

மாணவர்கள் ஆழமான சிந்தனை கொள்ளும் திறனை வளர்த்து கொண்டு பிற மதத்தவர்களை மதித்து சகோதரத் தன்மையுடன் வாழ கற்றுக் கொள்ள வெண்டும்.



சமுதாயத்துக்கு வெளியில் இருந்து நம்மை உருக்குலைக்க நினைக்கும் சக்திகளுக்கு இடமளிக்கக்கூடாது மக்கள் ஒற்றுமையாக இருக்கிறார்கள் எமது மாணவர்கள் ஒற்றுமையாக இருக்கிறார்கள் கற்றவர்கள் நாங்கள் ஒற்றுமையாக இருக்கின்றோம் ஆனால் இந்த தேச நலனில் அக்கறை இல்லாத ஒரு சக்தி நம் வாழ்வை சீர்குலைக்க தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறது.

சிங்கள மக்கள் எம்மிடம் கோரிக்கை விடுத்து விநாயகர் கோவிலை கட்டுகிறார்கள். திருகோணமலையில் விநாயகர் கோவிலை இடித்து புத்தர் கோவில் அமைப்பதற்கு முயற்சி நடைபெறுவதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இதில் எது உண்மை? எது பொய்? இதற்கான காரணங்கள் என்ன? யார் இதன் பின்னணியில் நிற்கிறார்கள் என்பதை தீர்க்கமாக ஆராய வேண்டியிருக்கிறது. இப்பொழுது மத விடயங்கள் தான் பேசுபொருளாக இருக்கிறது.

மாணவர்கள் வெறும் புத்தகப்படிப்புடன் நின்று விடாமல் உங்களது சுய தேவைக்காக பொது அறிவுத் தேவைக்காக சமுகப்பிரச்சினைகளையும் கவனத்தில் எடுத்து வைத்திருப்பதானது உங்களது எதிர்கால செயற்பாடுகளுக்கு நல்லது - என்றார். (து-213)

# தேர்தலுக்காக கோத்தா மீது வழக்குத் தொடுக்கவில்லை

## லசந்தவின் மகள் அகிம்சா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 19

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குக்கும், இலங்கையில் நடக்கும் எந்தத் தேர்தலுக்கும் தொடர்பில்லை என்று லசந்த விக்கிரமதுங்கவின் மகளான அகிம்சா விக்கிரமதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இலங்கையின் அரச தலைவராக கோத்தபாய ராஜபக்ச பதவிக்கு வருவதைத் தடுக்கும் அரசியல் நோக்கத்துடனேயே இந்த வழக்கு அமெரிக்காவில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கூறப்படுவதை அகிம்சா விக்கிரமதுங்க அடியோடு மறுத்துள்ளார்.

இலங்கையில் இதுவரை எந்தத் தேர்தலுக்கும் அறிவிப்பு வெளியிடப்படவில்லை. எந்தவொரு கட்சியும் அரச தலைவர் வேட்பாளர் என எவரையும் அறிவிக்கவில்லை. நான் கலிபோர்னியாவில் வழக்குத் தாக்கல் செய்த பின்னரே கோத்தபாய ராஜபக்ச அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான அறிவிப்பைச் செய்தார். உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்களைப் பயன்படுத்தித் தனது பரப்புரைகளை முன்னெடுப்பது பொருத்தமானதென கோத்தபாய ராஜபக்ச நினைத்திருக்கலாம். எனக்குத் தெரிந்து அவரை இதுவரை எந்தவொரு கட்சியும் தமது வேட்பாளராக அறிவிக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை நீதிமன்றங்களில் கோத்தபாய தனித்துவமான விலக்கீட்டு உரிமையை அனுபவிக்கின்றார் என்று தெரிகின்றது. பல ஊழல் விவகாரங்கள் தொடர்பான விசாரணைகளில் அவர் கைது செய்யப்படுவதைத் தடுத்து, குற்றவியல் விசாரணைகளை நிறுத்திய தன் மூலம் நூற்றாண்டுக்கும் அதிகமான காலப் பாரம்பரியத்தை இலங்கை நீதித்துறை மீறிவிட்டது. அதனால் கோத்தபாய தொடர்பான வழக்குகளில் நீதியான விசாரணைகளை இலங்கையில் எதிர்பார்ப்பது பயனற்றது என்றே நம்புகின்றேன். அதனாலேயே அமெரிக்காவில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கோத்தபாய மீதான வழக்குக்கு அரசியல் சாயம் பூசப்படுவது ஏன் வசதியாக இருக்கின்றது என்பதை என்னால் விளங்கிக்கொள்ள முடிகின்றது. எனது நடவடிக்கையால் தாம் விரும்புகின்றவர் அரச தலைவராகத் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்புக்கள் ஏதோ சில வழிகளில் பாதிக்கப்படக்கூடும் என்று சிலர் கவலை கொண்டுள்ளார்கள் என்று நினைக்கின்றேன்.

ஆனால், எனது தந்தையின் இறப்புக்குப் பொறுப்பானவர் என்று நான் நம்புகின்ற நபர் இலங்கையின் அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டால் இலங்கையில் நீதியைப் பெறுவது சாத்தியமில்லை என்ற எனது நிலைப்பாட்டைப் பலப்படுத்துவதாகவே அது அமையும்.

10 ஆண்டுகளுக்கும் அதிகமாக எனது குடும்பமும், நானும் பல்வேறு சட்ட நிறுவனங்கள் உட்பட அனைத்து வகையான அதிகாரிகளையும் சந்தித்துப் பேசுகின்றோம். அவர்களின் உதவியின் மூலம் நீதியைப் பெறுவதற்கான சாத்தியப்பாடு உள்ளதா என்பது தொடர்பாக முயற்சித்துக் கொண்டே இருக்கின்றோம். இது ஒரு நீண்ட தேடலாகவே இருக்கின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

**கேள்வி** : 2015 தேர்தல்களில் உங்களது தந்தையாரின் கொலை முக்கியமான பரப்புரை வாசகமாக இருந்தது. அந்த தேர்தலுக்குப் பின்னர் கோத்தபாய ராஜபக்ச பாதுகாப்புச் செயலர் பதவியிலிருந்தும் விலகவேண்டி ஏற்பட்டது. பதவிக்கு வந்த அரசுக்கும் லசந்த விக்கிரமதுங்க கொலை வழக்கில் நீதி வழங்கப்பட வேண்டும் என்பதில் அக்கறை இல்லை என்று நீங்கள் உணர்கிறீர்களா?

**பதில்** : இந்தக் கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸ் அதிகாரிகள் அசாதாரணமான துணிச்சலை வெளிக்காட்டினார்கள். உண்மையைவெளிக்கொணர்ந்து வழக்கை நிறைவுக்குக் கொண்டுவருவதில் அவர்கள் ஆபத்துக்களை எதிர்கொண்டனர். அவர்கள் அரசுடன் இணைந்து போராடவில்லை. அரசுடன் போராடுகின்றார்கள் என்பதை நான் அடிக்கடி உணர்ந்தேன். அரசின் பல நிறுவனங்கள் கொலையை விசாரணை செய்த விசாரணையாளர்களுக்குத் தேவையான சான்றுகளை வழங்க மறுத்திருந்தன.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க எனது தந்தையின் நெருங்கிய நண்பர்களில் ஒருவர். இராஜதந்திர விலக்கீட்டு உரிமையை கோத்தபாய ராஜபக்ச கோருவதற்கான வழிவகைகளைத் தேடுவதன் ஊடாக இந்த வழக்கில் குற்றப் பழியில் இருந்து அவரை விடுவிக்க அரசு முயற்சிக்கின்றதா? என்ற கேள்வி எழுகின்றது. மறுபுறத்தில் அதிர்ஸ்டவசமாக அரச தலைவர் மற்றும் முக்கிய அமைச்சர்களிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பியிருக்கின்றது. அவர்கள் குறைந்தபட்சம் இப்போதாவது நீதியை விரும்புகின்றார்கள் போன்று தெரிகின்றது.

**கே:** நீங்கள் அமெரிக்காவில் தொடுத்த வழக்கு வெற்றி பெறாமல் போகக்கூடும் என்றும் உங்களது தந்தையாரின் கொலைக்கு கோத்தபாய ராஜபக்ச ஒரு போதுமே குற்றவியல் பொறுப்புக் கூறலுக்குட்படுத்தப்படாது போகலாம் என்றும் கவலைப்படுகிறீர்களா?

**ப:** அரசியல் அனுகூலத்துக்காக ஊடகங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிக்கு முன்னுரிமை கொடுக்கக்கூடிய அரச தலைவரும், தலைமை அமைச்சரும் இலங்கையில் என்றாவது ஒருநாள் தெரிவு செய்யப்படுவார்கள் என்று நான் நம்புகின்றேன். அந்தநிலைமை ஏற்படும்வரையில் சுயாதீனமான நியாயாதிக்கம் ஒன்றில் சிவில் நடவடிக்கைகளை முன்னெடுப்பதே நீதியான விசாரணைக்கு ஒரே வாய்ப்பாக இருக்கும்.

**கே:** கலிபோர்னியாவில் நீங்கள் தொடுத்த வழக்கு வெற்றிகரமான முடிவைக் எட்டுமேயானால் , இந்த வழக்கின் சான்றுகளின் அடிப்படையில் லசந்த விக்ரமதுங்கவின் கொலைக்காக குற்றவியல் வழக்கை தொடர்வதன் மூலம் அமெரிக்க அரசு தனது சொந்தக் குடிமகனைப் பொறுப்புக்கூற வைக்குமா?

**ப:** எனது தந்தையின் கொலையுடன் கோத்தபாய ராஜபக்சவுக்கு இருக்கும் தொடர்புபற்றி நீதிமன்றில் தீர்க்கமான சான்றுகளை முன்வைப்போம். அதன் பின்னர் குற்றவியல் செயன்முறை தொடங்கும். குற்றவியல் விசாரணைக்கான சரியான இடம் இலங்கை தான். ஆனால் அமெரிக்க அரசு அதன் சட்டங்களின் கீழ் அத்தகைய குற்றச்சாட்டுக்கள் பொருத்தமானவை என்று பரிசீலிக்கும் என்று நம்புகின்றேன்.

**கே:** நீங்கள் தொடுத்திருக்கும் வழக்கின் தீர்ப்பு உங்களுக்குச் சாதகமாக வந்தால் இழப்பீட்டைக் கோத்தபாயவிடம் கோரமுடியும். அவர் ஒரு அமெரிக்க நாட்டவர். அந்த நாட்டில் அவரது சொத்துக்கள் பற்றி அறிந்திருக்கிறீர்களா?

**ப :** எனது தந்தை கொல்லப்பட்ட நேரத்தில் கோத்தபாய ராஜபக்சவின் சொத்துக்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டிருந்தார். லொஸ் ஏஞ்சல்சில் உள்ள வீடொன்றை 2006ஆம் ஆண்டில் பௌத்த பிக்கு ஒருவருக்குக் கொள்வனவு விலையின் மூன்று மடங்கு அதிக விலைக்கு அவர் விற்பனை செய்ததை அவர் கண்டுபிடித்தார். நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்வதால் அவரது சொத்துக்களின் நிலை பற்றி நான் இதுவரை அறிந்தவற்றைக் கூறமுடியாது. (எ)

# மகாநாயக்கர்களிடம் மன்னிப்புக் கேட்கேன்

## ராமநாயக்க திட்டவட்டம்



கொழும்பு, ஜூலை 19

பௌத்த பிக்குகள் தொடர்பாகத்தான் வெளியிட்ட கருத்துக் குறித்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுமுன்தினம் சந்தித்து விளக்கமளித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

மகாநாயக்க தேரர்களை அபகீர்த்திக்கு உள்ளாக்கும் வகையில் தான் கருத்து வெளியிடவில்லை என்பதால் பொது மன்னிப்புக் கேட்பதற்கு அவசியம் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மகாநாயக்க தேரர்களை அபகீர்த்திக்கு உள்ளாக்கும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளதாக வெளியான தகவல்கள் தொடர்பில் விளக்கமளிக்குமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க முன்னதாக ரஞ்சன் ராமநாயக்கவுக்கு அறிவுறுத்தியிருந்தார். அதற்கமைய இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, அலரி மாளிகைக்கு சென்று தலைமை அமைச்சரைச் சந்தித்து விளக்கமளித்துள்ளார். (ஓ.5)

# என்னை சாகடித்துவிடுவார்கள் என்று அச்சம் எழுகின்றது

## இப்படிக் கூறுகிறார் அமைச்சர் சஜித் பிரேமதாச

கொழும்பு, ஜூலை 19

என்னைக் கொலை செய்து விடுவார்களோ' என்ற அச்சம் தனக்குள் இப்பொழுது எழுந்துள்ளதாக அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

காலி அல்பிட்டிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் சஜித் பிரேமதாசவே, ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அரச தலைவர் வேட்பாளராக களமிறக்கப்பட வேண்டும் என்று, அந்தக் கட்சியிலுள்ள அமைச்சர்களே பொதுவெளியில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். அமைச்சர் சஜித் பிரேமதாச, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் நிகழ்சி நிரலில் பயணிப்பதாக, ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா குற்றம் சுமத்தியிருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே அமைச்சர் சஜித் பிரேமதாச தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருக்கின்றது என்று கூறியிருக்கின்றார்.

அவர் அந்த நிகழ்வில் மேலும் தெரிவித்ததாவது:

சில நபர்கள் எனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதற்குத் தீவிர முயற்சி எடுத்து வருகின்றனர். எதிர் நீச்சல் போடும் போது சில நரிகள் நதி ஓரத்தில் இருந்து கொண்டு கூக்குரல் இடுகின்றன. எமது கிராம எழுச்சித் திட்டமும் அவ்வாறான ஓர் எதிர்நீச்சல் போடும் திட்டமாகும். நதியின் கரையில் இரண்டு பக்கங்களையும் சேர்ந்த நரிகள் தொடர்ச்சியாக என்னை இழிவுபடுத்தி வருகின்றன. எத்தனை அச்சுறுத்தல்கள் எத்தனை விமர்சனங்கள், சில வேளைகளில் இவர்கள் என்னைப் படுகொலை செய்து விடுவார்களா? என்ற அச்சமும் எழுகின்றது.

இந்த சஜித் பிரேமதாச மீது தாக்குதல் நடத்தும் நோக்கில், இரண்டு பக்கங்களிலும் உள்ள நரிகள் கைகளில் அரசியல் கைக்குண்டு ஒன்றை வைத்துக் கொண்டே இருக்கின்றன - என்றார். (ஓ.5)

# சோபா உடன்பாட்டில் கையெழுத்திடவில்லை

## ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 19

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் சோபா உடன்பாடு கையெழுத்திடப்படவில்லை என்று, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைச் சட்டவாளர் சங்கத்துடன் நேற்றுமுன்தினம் நடத்திய சந்திப்பின் போதே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவுடன் சோபா உடன்பாடு மற்றும் ஏனைய உடன்பாடுகள் குறித்த பேச்சுக்கள் தொடர்பாக, தலைமை அமைச்சர் ரணிலிடம் சட்டவாளர் சங்கம் விளக்கம் கோரியிருந்தது. இதன் போதே ரணில் விக்கிரமசிங்க, சோபா உடன்பாட்டில் கையெழுத்திடவில்லை என்று பதிலளித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் அமைச்சர்கள் திலக் மாரப்பன, தலதா அத்துகோரள ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஓ.5)

# கஞ்சிப்பானவுக்கு எதிரான பீ அறிக்கை பிழை

## அவரது சட்டத்தரணி வாதம்

கொழும்பு, ஜூலை 19

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பில் உள்ள பாதாள உலகக் குழுத் தலைவர் கஞ்சிப்பான இம்ரான் தொடர்பாக நீதி மன்றில் முன்வைத்துள்ள முதல் அறிக்கை சட்டவிரோதமானது என்று அவரது சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கஞ்சிப்பான இம்ரானின் சட்டத்தரணி முன்வைத்துள்ள விடயங்கள் தொடர்பாக மன்றுக்கு விளக்கமளிப்பதற்கு குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி எதிர்வரும் 24ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என்று கொழும்பு மேலதிக நீதிவான் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கஞ்சிப்பான இம்ரான் சார்பில் முன்னிலையான அரச தலைவர் சட்டத்தரணி டிரந்த வலியத்த முன்வைத்த வாதங்களை அடுத்தே மேலதிக நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (எ)

# ஐ.தே.கவை ஆட்சியில் வைத்திருக்க அமெரிக்கா ஒருபோதும் முற்படவில்லை

## அந்த நாட்டுத் தூதுவர் ரெப்லிட்ஸ் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 19

இலங்கையில் ஆட்சி மாற்றத்துக்கு அமெரிக்கா நிதி அளிக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியில் வைத்திருப்பதற்கும் அமெரிக்கா முயற்சிக்கவில்லை. இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலய்னா ரெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

முகநூல் மூலம் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மக்களே, தற்போதைய அரசைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இன்னும் சில மாதங்களில் அடுத்த அரசை அவர்கள் தேர்ந்தெடுப்பார்கள். மக்களின் விருப்பத்தை அமெரிக்கா ஆதரிக்கிறது. அடுத்து எந்த அரசு பதவிக்கு வந்தாலும், அவர்களுடன் இணைந்து பணியாற்ற அமெரிக்கா தயாராக உள்ளது. ஒரு வலுவான, இறைமை கொண்ட, சுதந்திரமான இலங்கையை அமெரிக்கா ஆதரிக்கிறது. இந்தோ - பசிபிக் பாதுகாப்பில் இலங்கையின் பங்களிப்பையும் மதிக்கிறது. இலங்கை இந்த விடயத்தில்இன்னும்திறமையாகஇருக்க உதவுவதற்காகவே, வருகை படைகள் உடன்பாடு குறித்த பேச்சுக்களில் அமெரிக்கா ஆர்வம் கொண்டுள்ளது.

வருகை படைகள் உடன்பாடு என்பது ஒரு நிர்வாக உடன்பாடு ஆகும். இது நுழைவு / வெளியேறும் தேவைகள், தொழில்முறை உரிமங்களை அங்கீகரித்தல் மற்றும் பெறப்பட்ட சேவைகளுக்கான கட்டணங்கள் உள்ளிட்ட வழக்கமான நடைமுறைகளை தரப்படுத்துகிறது.

தற்போது ஒவ்வொரு பயிற்சி, கப்பல் வருகை அல்லது பரஸ்பரம் ஒப்புக் கொள்ளப்பட்ட நிகழ்வுக்கும் முன்னர் இந்த பிரச்சினைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டியுள்ளது.

இதற்கு நிறைய நேரம் தேவைப்படுகிறது. இந்தப் பிரச்சினைகளை எமது நாடுகள் எவ்வாறு தீர்க்க விரும்புகின்றன என்பதை முன்கூட்டியே ஒப்புக்கொள்ள முடிந்தால், நாங்கள் மற்ற பணிகளுக்கு அந்த நேரத்தைசெலவிட முடியும்.

சீனாவுக்கும் வருகைப் படைகள் உடன்பாட்டுக்கும் எந்த தொடர்பும் இல்லை. இது இலங்கையுடனான நீண்டகால இருதரப்பு கூட்டு பற்றியது. ஒரு குறிப்பிட்ட சட்டத்தை குறிப்பிட்ட சூழ்நிலைகளை கையாளுவது தொடர்பாக பல நாடுகளில் உடன்பாடுகள் உள்ளன.

உதாரணத்துக்கு, வெளிநாடுகளில், இலங்கைப் படையினர் குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்டபோது, அவர்கள் இலங்கைக்கே அனுப்பப்பட்டனர். இலங்கைச் சட்டத்தின் கீழேயே விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொண்டனர். இதுபோன்ற நிகழ்வுகள் மிகவும் அரிதானவை - என்றார். (ஒ.5)

# கன்னியா விவகாரம்: அங்கஜன் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

தமிழினத்தை மதங்களை கடந்து ஓர் இனமாக ஒன்றுபடுத்தி கன்னியா மீட்புக்கான கண்டனப் போராட்டத்தை அகிம்சை வழியில் வழிநடத்திய தென் கையிலை ஆதின முதல்வர் மீதான தாக்குதலை வன்மையாக கண்டிக்கிறேன் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது:

ஆன்மிகவாதியான தென் கையிலை ஆதீனத்தின் அகத்தியர் அடிகளார் மீது தேநீர் ஊற்றப்பட்ட கடும் போக்குத்தன்மை வன்மையாக கண்டிக்கவும் தண்டிக்கப்பட வேண்டியது.

புண்ணியபூமியில்அகிம்சை வழியில் போராட்டத்தை இணைந்து முன்னெடுத்த அகத்தியர் அடிகளார் மீது தேநீரை ஊற்றிய காடையர்கள் மற்றும் அவர்களுக்கு பாதுகாப்பு அளித்த பொலிஸாரின் செயல் சாபகேடுக்குரியது.

மோதலின் பிரதிபலிப்புக்களைஉரியமுறையில்ஆராயப்பட்டு முறையான விம்பங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும்-என்றுள்ளது.(எ)

# கன்னியா சம்பவத்துக்கு சித்தார்த்தன் கண்டனம்

திருகோணமலை, ஜூலை19

திருகோணமலை மாவட்டத்தின் கன்னியாவில் மதத் தலைவர் மற்றும் ஆலய உரிமையாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினரும், புளொட் அமைப்பின் தலைவருமான த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது:

அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாது கன்னியாவை மீட்டு எங்கள் பிரதேசமாக்கத் தொடர்ந்தும் அனைவரும் உழைப்போம். தமிழ் மக்களின் பிரச்சனைகளில் அரசு இருவிதமான கருத்தைஅல்லது இரு முகத்தைக் காட்டுகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

பொலிஸார் முன்னிலையிலேயே தென் கையிலை ஆதீனம் மீதும் பிள்ளையார் ஆலய உரிமையாளர் கோகிலறமணிஅம்மையார் மீதும் காடையர்கள் தேநீர் ஊற்றியிருக்கின்றனர். பொலிஸார் இந்த விடயத்தில் அலட்சியப் போக்கில் நடந்தனர் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

பொலிஸார் இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கைபார்த்ததையும் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது. அநாகரிகமான முறையில் தாக்குதல் நடத்தியவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை சம்மந்தப்பட்ட தரப்பினர்கள் எடுக்கவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

தமிழ் மக்களை அச்சுறுத்தி அடிபணிய வைக்கமுடியாது. தமிழ் மக்களின் கன்னியாவை மீட்டெடுப்போம். அதனைமீண்டும் எங்கள் பிரதேசமாக்குவோம். அதற்கான அனைவரு தொடர்ந்தும் உழைப்போம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே அண்மையில் நடந்த சந்திப்பில் கன்னியா விவகாரம் தொடர்பில்அதிக கவனம் செலுத்தப்பட்டிருந்தது. அங்கு முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் தலைமை அமைச்சரிடம் வலியுறுத்தப்பட்டது. - என்றார்.(எ-ரீ1)

# புதிய அதிபர்களை நியமிக்க விரைவில் நேர்முகப் பரீட்சை

புதிய அதிபர் சேவை யாப்பின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்துபாடசாலைகளிலும் காணப்படும் மூன்றாம் வகுப்புக்கான அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக புதிய அதிபர்களை கல்விக் கட்டமைப்பில் அவசரமாக இணைத்துக்கொள்ள வேண்டும் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அவர்கள் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். அதன்படி நேர்முகப் பரீட்சையைநடத்துவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என்று கல்வி அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவிததுள்ளது. அதில் உள்ளதாவது:

2018 ஆம் ஆண்டு வரை அனைத்து பாடசாலைகளிலும் மூன்றாம் வகுப்புக்கான ஆயிரத்து 918 அதிபர்கள் வெற்றிடங்கள் உள்ளன. அதற்கான நேர்முக பரீட்சை ஜூலை மாதம் 23 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதிபர்களை இணைத்துக்கொள்வ்தற்காக நடத்தப்பட்ட போட்டி பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்றவர்களில் வெற்றிடங்கள் உள்ள எண்ணிக்கைக்கும் அதிகமான தொகையினர் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். தற்போது நேர்முக பரீட்சைக்கான கடிதம் தகுதியானோருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நேர்முக பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்பட்டோரின்பெயர்பட்டியலைகல்வி அமைச்சின் இணையத்தளத்துக்குச் சென்று பார்க்க முடியும். நேர்முகப்பரீட்சை நடத்தும்திகதி, நேரம் இன்று முதல்அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படும் - என்றுள்ளது. (எ)

# வடக்கு ஆளுநரைச் சந்தித்த ஆஸ்திரேலியத் தூதுவர்

யாழ்ப்பாணம், ஜூலை 19


இலங்கைக்கான ஆஸ்திரேலியா தூதுவர் டேவிட் ஹொலிக்கும் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பு ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

இந்த சந்திப்பின்போது வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் மற்றும் ஆஸ்திரேலிய அரசால் வடக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி திட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டன.

அத்துடன் வடமாகாணத்தின் தண்ணீர்ப் பிரச்சினை, அதனைதீர்ப்பதற்காகமுன்மொழியப்பட்டுள்ள 'வடமராட்சி களப்பு' திட்டம் உள்ளிட்ட செயற்திட்டங்கள் குறித்தும் விரிவாக இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இதேவேளை இலங்கை அகதிகள் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்கு நுழைய முயற்சிப்பது குறித்து கருத்துத் தெரிவித்த தூதுவர், சட்டவிரோத குடியேற்றவாசி களை கட்டுப்படுத்த ஆஸ்திரேலியா அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டார்.



இதன்போது, சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை என்று குறிப்பிட்ட ஆளுநர், அகதிகள் விடயத்தில் ஆஸ்திரேலிய அரசானது கனடா பேர்ன்று மனிதாபிமான ரீதியில் உள்ளீர்ப்பது தொடர்பில் கொள்கையொன்றினை உருவாக்குவதன் ஊடாக பன்னாட்டு ரீதியில் தனக்கான இடத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் சுட்டிக்காட்டினார். (ஐ)

# அடிப்படைவாதத்துக்கு பொலிஸாரே காரணம்

## ஞானசாரர் கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 19

கிழக்குமாகாணத்தில்சேவையாற்றும் பொலிஸார் தமது பொறுப்புக்களை முறையாகக்பின்பற்றாமையாலேயே அங்கு இஸ்லாமிய அடிப்படைவாதம் தலைதூக்கியது.

இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர்கலகொடஅத்தேஞானசார தேரர்.

பொதுபலசேனா அமைப்பின் தலைமை அலுவலகத்தில்நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமையில் உள்ள பொலிஸ் அதிகாரிகள் தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சு உரிய கவனம் செலுத்த வேண்டும்.

கிழக்கு மாகாண அரசியல்வாதிகள் இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கு அங்கு அடித்தளமிடுகின்றனர். முறையற்ற செயற்பாடுகளை மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண அரசியல்வாதிகளுக்குஎதிராகஅனைத்துச் சாட்சியங்களையும் விரைவில் நாட்டு மக்களுக்குப் பகிரங்கப்படுத்துவோம். - என்றார். (எ)

# தூக்குத் தண்டனை விதிக்கப்படவேண்டும் ஆனால் நடைமுறைப்படுத்தப்படக் கூடாது

## மகிந்த குழப்பமான கருத்து

கொழும்பு, ஜூலை 19

குற்றம் இழைப்பவர்களுக்கு சாவுத் தண்டனை விதிக்கப்பட வேண்டும். ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படக் கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பிலியந்தலையிலுள்ள விகாரைக்குச் சென்றிருந்த எதிர்க்கட்சித் தலைவரிடம் சாவுத் தண்டனை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் தலைமை அமைச்சர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியின்போது 1970ஆம் ஆண்டுகளில் இருவர் தூக்கிலி டப்பட்டதுடன் சாவுத் தண்டனை நாட்டில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதனை மீண்டும் நடைமுறைப்படுத்தினால் போதைப்பொருள் பாவனையை முற்றாக ஒழிக்கலாமென அரச தலைவர் மைத்திரிபால நினைக்கின்றார். அது அவருடைய கருத்து. தற்போது இவ்விடயம் தொடர்பில் பாரிய விவாதங்கள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. எனினும் சாவுத் தண்டனை தொடர்ந்தும் இருக்க வேண்டும் அதில் மாற்றங்கள் செய்யத் தேவையில்லை. ஆனால் அதனை நடைமுறைப்படுத்தக் கூடாது - என்றார். (ஒ.5)



## சம்பந்தனை...

கவில்லை. இதன் காரணமாகவே அரச தலைவருக்கும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பில் பங்கேற்கவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கன்னியா விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் சந்ஏற்பாடு செய்யப்பட்டது. அமைச்சர் மனோகணேசன் இதனை முன்னெடுத்திருந்தார். இந்தச் சந்திப்பில் பங்கேற்குமாறு அமைச்சர் மனோகணேசன் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்திருந்ததாகத் தெரிவித்திருந்தார். நேற்று இடம்பெற்ற சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றிருக்கவில்லை.

கூட்டமைப்பினர் பங்கேற்காமை தொடர்பில் அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனிடம்கேட்டபோது, அமைச்சர் மனோகணேசன் நேற்று இரவு (நேற்றுமுன்தினம்) அரச தலைவருடனான சந்திப்பு பற்றிக் கூறினார். அரச தலைவருடன், யார் சந்திப்பை ஒழுங்குபடுத்தினாலும், சந்திப்புக்கான அழைப்பு அரச தலைவர் செயலகத்தால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் விடுக்கப்படும். இந்தச் சந்திப்புக்கான அழைப்பு அரச தலைவர் செயலகத்தாலோ, அரச தலைவரிடமிருந்தோ கிடைக்கவில்லை.

கன்னியா விவகாரம் தொடர்பில் பேசப்பட இருந்ததால், அந்த மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எமது கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் கலந்து கொள்ளவேண்டும். அவரைத் தொடர்புகொண்டு, கூட்டத்துக்கான அழைப்பு கிடைத்ததா என்று கேட்டேன். எந்தவொரு தரப்பினரிடமிருந்தும் தனக்கு அழைப்புக் கிடைக்கவில்லை என்று கூறினார்.

மேலும், அரசதலைவரை இந்த விவகாரங்கள் தொடர்பில் தனியாகச் சந்தித்துப் பேசுவதற்கு நாங்கள் கோரியிருந்தோம். எனவே, சந்தித்துப் பேச்சு நடத்துவோம் - என்றார். (ஓ.5)

## கிழக்கு...

வர் கே.சிவநாதன்,

கிழக்கு தமிழர் ஒன்றியம் உருவானபோது அது எதுவித அரசியலிலும் ஈடுபடப் போவதில்லை, இருக்கின்ற கட்சிகளை இணைத்து தமிழ் மக்கள் தேர்தல்களில் அதிகூடிய ஆசனங்களைப் பெறக்கூடிய வகையில் கட்சிகளை ஒருங்கிணைத்து தேர்தலுக்கு கொண்டுசெல்வது என்ற முயற்சியுடன்தான் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இருக்கின்ற கட்சிகள் சுய நலனை முன்னிறுத்திவருவதன் காரணமாக எமக்குச் சாதகமான பதில்களை வழங்கவில்லை.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள அரசியலை அனைத்து தமிழ் மக்களும் விரும்பவில்லை. கடந்த காலத்தில் தமிழ் தலைமைகள் தமிழ் மக்களின் நலன் கருதிய எந்த நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் அந்தத் தலைமைகள் மீது தமிழ் மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக எதிர்காலத்தில் வரக்கூடிய தேர்தல்களில் கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த புத்திஜீவிகளை உள்ளடக்கிய பலமான அரசியல் சக்தியை நாங்கள் உருவாக்காது விட்டால் விரக்தியில் உள்ள தமிழ் மக்கள் தேசியக் கட்சிகளின் பின்னால் செல்லும் நிலை உருவாகலாம். சக்தி வாய்ந்ததொரு அரசியல் தளத்தை அமைத்துக் கொடுக்க வேண்டிய தேவை கிழக்குத் தமிழர் ஒன்றியத்துக்கு ஏற்பட்டது.

கிழக்கு மாகாண மக்கள் வாக்களிப்பதானால் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தக் கட்சிக்குத்தான் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்பதோடு, தேர்தல் காலங்களில் இருக்கின்ற எல்லாக் கட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரே சின்னத்தின் கீழ் போட்டியிடுவதற்கான முயற்சிகளை கிழக்குத் தமிழர் ஒன்றியத்தால் உருவாக்கப்பட்ட அரசியல் பிரிவு மேற்கொள்ளும்.

எங்களது தமிழ்த் தலைமைகள் கடந்த காலங்களில் எங்களுக்குக் கிடைத்த எந்த வாய்ப்பையும் தமிழ் மக்கள் சார்பாக பயன்படுத்தத் தவறிவிட்டனர். இறுதியாக நடைபெற்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போதும்கூட தமிழ் மக்கள் சார்பான எத்தனையோ கோரிக்கைகள் இருந்தும்எதனையும்முன்வைக்காது வெறுமனே மகிந்த ராஜபக்ச வந்துவிடக்கூடாது என்பதற்காக இறைவனின் அனுக்கிரகத்தில் ஏதாவது நடக்கட்டும் எனக்கூறி வாக்களித்ததாக சம்பந்தன் ஐயா கூறியிருந்தார்.

தமிழ் மக்களின் தேவைகள் எதனையுமே கோரிக்கையாக முன்வைக்காது வெறுமனே மகிந்த ராஜபக்ச வந்துவிடுவார் எனக்கூறும் இவர்தானா தமிழ் மக்களின் தலைவர் என்று எண்ணி வெட்கப்படவேண்டிய சூழ்நிலையில் நாங்கள் இருக்கின்றோம். இந்தச் சந்தர்ப்பத்தில் எத்தனையோ விடயங்களை ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டிருக்கலாம். கல்முனை பிரதேசசபைக்கு ஒரு கணக்காளரை நியமிப்பதற்கு ஏற்றுக்கொண்டிருப்பதாக கூறப்படுகின்றது. தமிழீழத்தில் ஆரம்பித்து நாங்கள் போராட்டம் நடத்தியது கணக்காளர் ஒருவருக்குத்தானா என நான் கேட்கின்றேன்.

உண்மையில் இந்தக் கணக்காளரால் கல்முனை பிரதேச செயலகத்தில் உள்ள உபபிரதேச செயலரின் கீழ் செயற்பட முடியுமா, சட்டம் இதனை ஏற்றுக் கொள்ளுமா? கணக்காளருக்கான பணிப்புரைகள் ஒரு பிரதேச செயலரினால்தான் கடமைகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். கல்முனை வடக்கு பிரதேச செயலகம் ஒரு பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்படும்வரை கணக்காளர் உபபிரதேச செயலரின்கீழ் செயற்பட முடியாது. உபபிரதேச செயலர் தரமுயர்த்தப்படும்போதுதான் பிரதேச செயலராக வருவார். அந்தப் பிரதேச செயலர்தான் கணக்காளருக்கான பணிப்புரைகளை விடுக்க முடியும். ஒரு கணக்காளரை நியமித்துவிட்டோம், அதற்காகத்தான் வாக்களித்தோம் என்று கூறுவது சரியான கூற்றல்ல.

தமிழ் மக்களின் வேணவாக்களை பூர்த்தி செய்யக் கூடியதும் தமிழ் மக்களின் நலனை பார்க்கக்கூடியதுமான சரியானதொரு அரசியல் தளத்தை தமிழ் மக்கள் வேண்டிக்கொண்டதன் பேரில் அமைத்துக்கொடுக்க வேண்டிய தேவை எங்களுக்கு இருந்தது. அந்த அடிப்படையில் இன்று கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் அரசியல் பிரிவான ஒன்றிணைந்த தமிழ் மக்கள் கட்சி உதயமானது - என்றார். (மஓ.5)

## 22...

வழங்கிய பின்னரேயே இந்தக் கம்பங்கள் அமைக்கப்பட்டன என்று யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இம்மனுவல் ஆனல்ட் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் அமர்வு நேற்றையதினம் இடம்பெற்றது. இதற்போதே அண்மைக்காலமாக நிலவும் 5ஜி கருத்துக்கு தனது முழுமையான விளக்கத்தை வழங்கினார் முதல்வர் இம்மனுவல் ஆனல்ட்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை முழுவதும் கம்பங்கள் அமைப்பதற்கான அனுமதியுடன் நாடு பூராகவும் இதுவரை 139 கம்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் 19 கம்பங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் மாநகர சபை எல்லைக்குள் 9 கம்பங்கள் பொருத்தப்பட்டுள்ளன. அதிலும் அண்மைக்கால போராட்டங்களால் அவற்றில் பல தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் மட்டுமே இத்தகைய கம்பங்கள் பொருத்தப்படுகின்றன என்ற கூற்று மிகமிகத் தவறானது. இலங்கையிலேயே அதிக மக்கள் வாழும் மாவட்டம் கொழும்பு. அங்கேதான் அதிகமாக 36 கம்பங்கள் பொருத்தப்பட்டுள்ளன. உலகிலேயே இல்லாத 5ஜி இந்த மாநகரத்தில் வர முடியாது. அத்தகைய கருத்துக்களுக்கு எந்த ஆதாரமோ ஆவணமோ கிடையாது. இருப்பின் நாம் அது தொடர்பில் பரீட்சிக்கலாம். இவ்வாறு என்னால் கூறப்படும் அனைத்தினது ஆவணாங்களும் எம்மால் உத்தியோக பூர்வமாக பெறப்பட்டுள்ளன - என்றார். (ம-105)

## யாழ்ப்பாணம்...

சராஜா, மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்தார். மனுவின் எதிர் மனுதாரர்களாக, சட்டமா அதிபர், சைவ மகா சபையினர் குறிப்பிடப்பட்டிருந்தனர். இந்த மனு மீதான விவாதம், சமர்ப்பணங்கள் நிறைவடைந்த நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கோவில்கள் சிலவற்றில் மிருகபலியிட்டு வேள்வி நடத்தப்படுகிறது. அதற்கான அனுமதியை, இறைச்சிக்கடைச் சட்டத்தில் உள்ளூராட்சி சபைகளும் சுகாதாரத் திணைக்களமும் வழங்குகின்றன. அவ்வாறு அனுமதி வழங்கப்படுவது தடை செய்யப்பட வேண்டுமெனக் கோரி, சைவ மகா சபையினர், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தலையீட்டு நீதிப் பேராணை மனுவைத் தாக்கல் செய்திருந்தனர். இந்த மனுவை, சட்டத்தரணி வி.மணிவண்ணன், 2016ஆம் ஆண்டு ஏப்ரல் 2ஆம் திகதி தாக்கல் செய்திருந்தார். அன்றிலிருந்து வேள்விக்கு இடைக்காலத் தடை விதித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ஒன்றரை வருடங்கள் விசாரணையி லிருந்த இந்த வழக்குக்கு 2017ஆம் ஆண்டு ஒக்டோபர் 26ஆம் திகதியன்று இறுதிக் கட்டளையை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் வழங்கினார்.

இந்துக் கோவில்களில் வேள்விப் பூசைகளின் போதும் ஏனைய எந்தப் பூசைகளின் போதும் மிருகங்கள் பலியிடப்படுவதற்கு முற்றாக தடை விதிக்கப்படுகிறது. இந்தத் தடை உத்தரவை மீறி எவரேனும் மிருக பலியிடலை மேற்கொண்டால், அது தொடர்பாக ஒரு பொதுமகன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தாலும், அதன் மீது உடனடியாக விசாரணை செய்து குற்றமிழைத்தவரை கைது செய்து அருகிலுள்ள நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த வேண்டும் என வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடப்படுகிறதெனவும், அப்போதைய யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் கட்டளையிட்டிருந்தார். இந்தத் தடை உத்தரவுக்கு ஆட்சேபணை தெரிவித்தும் வேள்வியின் பண்பாட்டுத் தேவையை வலியுறுத்தியும் மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்பட்ட நிலையிலேயே, தடை உத்தரவு நீக்கப்பட்டது. மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீட்டை ஏற்றுக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம், மேன்முறையீட்டாளரான கவுணவத்தை நரசிம்ம வைரவர் கோவில் நிர்வாகத்துக்கு வழக்குச் செலவை வழங்குமாறும் உத்தரவிட்டது. (ம)

## எச்சில்தேநீர்...

விரும்புகிறேன்

என்று எச்சில் தேநீர் ஊற்றிய சந்தேகநபர்களும் பொலிஸ் நிலையத்தில் வைத்துத் தெரிவித்தனர் என்றும் தம்பிரான் அடிகளார் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:

கன்னியா வெந்நீர் ஊற்று பிள்ளையார் ஆலய இடித்து அழிப்பின் பின்னர் நடத்தப்பட்ட மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டத்தின் போது ஆதீன குருமுதல்வர் மீது சில நபர்கள் தேநீர் ஊற்றி அவரையும் அவர் சார்ந்தவர்களையும் அவமதித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் வாய்மொழி மூலமான முறைப்பாடு பொலிஸாருக்கு உடனே வழங்கப்பட்டது. ஆனால் சம்பவ இடத்தில் இவ்வாறு அசம்பாவிதத்தை மேற்கொண்டவர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை. அதன் பின்னர் எழுத்து மூல முறைப்பாடு பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது. நேற்றையதினம் (நேற்றுமுன்தினம்) திருகோணமலை உப்புவெளி பொலிஸ் நிலையத்துக்கு நாம் அழைக்கப்பட்டோம். குறித்த அசம்பாவிதத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் தரப்பினரும் வந்திருந்தனர். விசாரணையின் பின்னர் எதிர்த்தரப்பினர் தாம் இவ்வாறான அசம்பாவிதத்தைச் செய்யவில்லை. இந்தப் பிரச்சினையை இரண்டு தரப்பும் சுமுகமாக முடித்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் பொலிஸாரின் பேச்சும், எதிர்த்தரப்பின் பேச்சும் அமைந்திருந்தது. ஆன்மிக நெறியில் பிற சமயத்தை மதித்தல், அன்பு செய்தல் இதையே நாம் பின்பற்றுகின்றோம். இனமுறுகலை தோற்றுவித்தல் எமது நோக்கம் அல்ல. எச்சில் தேநீர் ஊற்றப்பட்டவுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருந்தால் இன்று இது மக்கள் மயப்படுத்தப்பட்ட பிரச்சினையாக மாறியிருக்காது. ஆகவே மக்கள் எந்நேரமும் நிற்கும்போது உடனடியாக சமாதானத்துக்கு வருவதற்கு முடிவுகளை நாங்க்ள் எடுக்க முடியாது. மக்களுடன் கலந்துரையாடியே எமது முடிவை அறிவிப்போம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## கையிலை...

தமிழர் பூர்வீகத்தை பாதுகாக்கும் போராட்டத்தை வழிநடத்திய தமிழர் ஆன்மிகத் தலைவர்களில் ஒருவராகிய வணக்கத்துக்குரிய தென் கையிலை ஆதீனத்தின் மீது வன்ம உணர்வோடு பொலிஸ் வாகனத்துக்குள்ளேயே வைத்து தேநீர் வீச்சினை மேற்கொண்டவர்கள் மீது இதுவரை எந்த நடவடிக்கையுமில்லை. போராட்டத்தை அகிம்சை முறையில் மேற்கொண்ட தமிழ் மக்களை கொடுங்கரங்கள் கொண்டு அடக்க முற்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் ஒட்டு மொத்த தமிழ் மத, அரசியல், சமூக தலைமைகளும் தங்கள் கடுமையான எதிர்வினையை வெளிப்படுத்த வேண்டும் என வேண்டி நிற்கின்றோம். அனைவரும் ஒன்றிணைந்து எமது சமய தலைவர்களில் ஒருவரும் தமிழர்களின் பூர்வீக கன்னியாவை மீட்கும் போராட்டத்தின் முதன்மை வழிகாட்டியுமான தென் கையிலை ஆதீன முதல்வருக்கு இழைக்கப்பட்ட கொடுஞ் செயலுக்கு நீதி வேண்டி எமது கண்டன குரலை பதிவு செய்ய யாழ்ப்பாணம் கைலாச பிள்ளையார் முன்றலில் நாளை (இன்று) மாலை ஒன்றுகூடுவோம் என்றுள்ளது. (ம)

## மைத்திரி,..

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மு.ப. 11.30 மணியிலிருந்து 12.30 மணிவரை அரச தலைவர் செயலகத்தில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் அமைச்சர்களான மனோகணேசன், திகாம்பரம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான திலகர், வேலுகுமார், வியாழேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

கன்னியா பிள்ளையார் ஆலயம் இடித்தழிக்கப்பட்டு விகாரை அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அவற்றை இடைநிறுத்துமாறு அரச தலைவர் பணித்துள்ளார். இருப்பினும் அந்த விகாரையை அகற்றி மீண்டும் பிள்ளையார் ஆலயத்தை நிறுவுமாறு பணிப்பதற்கு அரச தலைவர் தவறிவிட்டார் என்று இந்து அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. மேலும், முல்லைத்தீவு நீராவிப்பிட்டி பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் முளைத்துள்ள விகாரை எந்தவிதமான புராதான வரலாற்றையும் கொண்டிருக்கவில்லை என்று தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் அரச தலைவர் முன்பாக வெளிப்படுத்திய பின்னரும், அந்த விகாரையை அகற்றுவதற்கான உத்தரவை அரச தலைவர் பிறப்பிக்கவில்லை என்று குற்றம் சுமத்தும் இந்து அமைப்புக்கள், ஆகக் குறைந்தது பிள்ளையார் ஆலய கட்டுமானப் பணிகளை தடையின்றி மேற்கொள்வதற்கு கூட அனுமதி வழங்கவில்லை என்றும் தெரிவித்தன.


'சைவ மக்களை இரண்டாவது பிரதான மதமாக கொண்ட எமது நாட்டில் மக்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கும் செயல் தற்போது நடைபெற்று வருகிறது. முல்லைத்தீவில் நந்தி கொடி கிழிக்கப்பட்டமை, கன்னியா பிள்ளையார் கோவில் இடிக்கப்பட்டமை போன்ற செயற்பாடுகள் இதனை வெளிப்படுத்தி நிற்கின்றன. இந்த அசம்பாவித நடவடிக்கைகளுக்கு நாட்டின் பொறுப்பு வாய்ந்த அரச தலைவர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அரச தலைவர் பதவியேற்கும் போது நாட்டில் உள்ள மக்கள் அனைவரையும் சந்தோசமாக வாழ வைப்பது தனது நோக்கம் என்று கூறியிருந்தார். வாக்களித்த மக்களுக்கு அவர்தனது கடமையை செய்ய வேண்டும். காலம் தாழ்த்தாமல் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கன்னியாவில் ஆரம்பத்தில் புத்தர் சிலைகள் ஒன்றும் இருக்கவில்லை. அங்கு இருந்த பிள்ளையார் ஆலயம் இடித்து அழிக்கப்பட்டுள்ளது. அது மீண்டும் கட்டப்பட வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று கூறி இந்த அரசு அமைக்கப்பட்டது. ஆனால் மக்களின் பிரச்சினைகளை முழுமையாகத் தீர்க்கப்படவில்லை. கன்னியா விடயத்தையும் அப்படியே விட முடியாது' என்றார் ஆறுதிருமுருகன்.

இதேவேளை தென்கையிலை ஆதீனத்தின் இரண்டாவது குருமுதல்வர் தெரிவித்ததாவது: கன்னியா பிள்ளையார் ஆலயம் இருந்த இடத்தில் மீண்டும் பிள்ளையார் ஆலயம் அமைக்கப்பட வேண்டும். அதற்கு அனுமதி மறுக்கப்பட்டால் அங்கு எந்தவொரு மதத்தலமும் அமைக்க இடமளியோம் - என்றார். (ம-ஓ.5)

# ஜப்பானில் தனிநபர் தாக்குதல் கலையகம் மீது அமில வீச்சு

## 13 பேர் சாவு; 37 பேருக்குக் காயம்

டோக்கியோ,ஜூலை 19
ஜப்பானிலுள்ள அனிமேசன் கலையகம் ஒன்று தீப்பிடித்த சம்பவத்தில் 13பேர் சாவடைந்ததாக முதற்கட்டத் தகவல் வெளியாகியது.



அமில வீச்சாலேயே இந்தத் தீ ஏற்பட்டதாகவும், அது குறித்த கலையகத்தின் 3 மாடிகளிலும் பரவியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்தோடு இந்தச் சம்பவத்தில் 37பேருக்குக் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


குறித்த கலையகத்துக்குள் நுழைந்த, ஒருவர் அடையாளம் தெரியாத திரவத்தை வீசி நெருப்பை உண்டாக்கியதாகவும் அடையாளம் தெரியாத அந்த நபர் கைது செய்யப்பட்டதாகவும் ஜப்பான் பொலிஸார் தெரிவித்தனர். எனினும் சந்தேக நபரும் காயங்களுக்குள்ளாகியிருப்பதால் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். தொடர்ந்து அங்கு மீட்புப் பணிகள் நடந்து வருவதாக ஜப்பான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அண்மைக்காலங்களில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் அதிகரித்திருந்த தனிநபர் தாக்குதல்கள் ஜப்பானிலும் பரவியிருப்பதாகப் பன்னாட்டு அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.


# சந்திராயன் 2 விண்ணில் ஏவப்படும்

## இஸ்ரோ அறிவிப்பு

புதுடெல்லி.ஜூன் 19
நிலவை ஆய்வு செய்வதற்காக இந்தியா தயாரித்த சந்திராயன் 2 விண்கலம் வரும் எதிர்வரும் 22ஆம் திகதி விண்ணில் செலுத்தப்படும் என்று இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சி நிலையமான இஸ்ரோ அறிவித்தது. நிலவின் மேற்பரப்பு, வெளிப்புறத்தில் தண்ணீர் மூலக்கூறுகளின் அளவைக் கண்டறியும் ஆய்வுகளைச் செய்வதற்காகச் சந்திரயான்2 திட்டம் உருவாக்கப்பட்டது. கடந்த 15ஆம் திகதியன்று அது விண்ணில் செலுத்தப்பட இருந்தது. ஆனால், அது ஏவப்படுதற்கு 56 நிமிடங்களுக்கு முன்னதாக இயந்திரக் கோளாறு காரணமாக நிறுத்தப்பட்டது. இந்த நிலையி லேயே 'சந்திராயன் 2' எதிர்வரும் 22ஆம் திகதி விண்ணில் ஏவப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்சில் 850 ஆண்டுகள் பழமையான நோட்ரடொம் கதீட்ரல் தேவாலயமானது கடந்த ஏப்ரல் மாதம் தீக்கிரையாகியிருந்தது. தேவாலயம் முழுவதும் பரவிய தீயால் தேவாலயத்தின் கோபுரங்களில் ஒன்று முற்றிலுமாக எரிந்தது. பழமை மிக்க கலையம்சங்களுடன் மிளிர்ந்த குறித்த தேவாலயம் தீக்கிரையான சம்பவம் உலகம் முழுதும் கவலையை விதைத்திருந்தது. உட்புறம் உள்ள மர வேலைப்பாடுகள் முற்றிலுமாக அழிந்துவிட்டன. கோதிக் பாணியிலமைந்த குறித்த கட்டடத்தைச் சீரமைக்கும் பணி துரிதமாக நடக்கிறது.





# ஈரான் விவகாரத்தில் சமாதான உடன்படிக்கையே சிறந்த தீர்வு

## தெரேசா மே தெரிவிப்பு



லண்டன், ஜூலை 19
ஈரானுடன் சமாதான உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்வதே ஈரான் அணு ஆயுத உற்பத்தி செய்வதைத் தடுத்து நிறுத்தக் கூடிய ஒரே வழி என்றார் பிரிட்டனின் தலைமை அமைச்சரான தெரேசா மே. கடந்த புதன்கிழமை நடந்த பன்னாட்டு ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். எந்த விதத்திலாவது அணு ஆயுத உற்பத்தி தடை செய்யப்பட வேண்டும். அது சகல உலக நாடுகளுக்குமே நன்மை தரக் கூடிய விடயம் என அவர் அப்போது மேலும் தெரிவித்தார். பிரிட்டனின் தலைமை அமைச்சர் பதவியில் இருந்து தான் விலகுவதாக அறிவித்துள்ள நிலையில் தெரேசா மே இவ்வாறு கருத்துத் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**பின்னணி**
பன்னாட்டு அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் ஒன்றில் ஈரான், அமெரிக்கா ஜேர்மனி, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற பல நாடுகள் கைச்சாத்திட்டன. பின்னர் சென்ற ஆண்டில் அமெரிக்கா இந்த ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறியது. அதுமட்டமல்லாது ஈரான் மீது பொருளாதாரத் தடைகளையும் விதித்தது. இந்த ஒப்பந்தத்தின் ஊடாக ஈரான் தனது யுரேனியச் செறிவை அதிகரிக்க முடியாது. இந்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடித்து வந்த ஈரான், தங்கள் நாட்டின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை அமெரிக்கா விலகிக் கொள்ளும்படி இந்த ஒப்பந்தத்துடன் தொடர்புடைய ஜேர்மனி, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தியது. இல்லாவிடில், தனது யுரேனியச் செறிவூட்டலை அதிகரிக்கப் போவதாக எச்சரித்தது.
அதன்படியே சமீபத்தில் யுரேனியச் செறிவூட்டலையும் அதிகரித்தது. அதேவேளை ஈரானின் பின்புலத்துடன் செயற்படும் ஹவுத்தி ஆயுததாரிகள், சவூதியின் வானூர்தி நிலையங்கள் எண்ணெய்க் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துகின்றனர் என அமெரிக்கா குற்றம் சாட்டுகிறது. அத்தோடு தனது போர்க்கப்பல் ஒன்றை வளைகுடாவில் நிறுத்தியுள்ளது.
அமெரிக்காவின் ஆளில்லா வானூர்தி ஒன்றை ஈரான் சுட்டு வீழ்த்தியது. ஈரான் மீது தாக்குதல் நடத்துமாறு அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கட்டளை விடுத்தார். பின்னர் அந்தத் தாக்குதல் திட்டத்தைக் கைவிட்டார்.




# பில் கேட்ஸைப் பின் தள்ளிய பிரான்ஸ் நாட்டுப் பணக்காரர்

பாரிஸ்.ஜூலை 19
உலகின் பெரும் பணக்காரர்கள் பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வந்த 'மைக்றோ சொவ்ட்' நிறுவனத் தலைவர் பில்கேட்ஸைப் பின்னுக்குத்தள்ளியுள்ளார் பிரான்சின் டு.ஏ.ஆர். நிறுவனத் தலைமைச் செயலதிகாரி பெர்னார்ட் ஆர்னோல்ட். ஆர்னோல்ட்டின் சொத்து மதிப்பு சுமார் 108 பில்லியன் டொலர்கள் என்றும் பில்கேட்ஸின் சொத்து மதிப்பு சுமார் 107 பில்லியன் டொலர்கள் என்றும் கூறப்படுகிறது.
இந்தத் தகவலைப் பன்னாட்டு நிறுவனம் ஒன்று வெளியிட்டது. பல ஆண்டுகளாக முதலிடத்தில் இருந்த பில்கேட்ஸை 'அமேசன்' நிறுவனர் ஜெவ்ப் பெசோஸ் ஏற்கனவே பின்னுக்குத் தள்ளி முதலிடம் பிடித்தார். இந்த நிலையிலே 2ஆம் இடத்தில் இருந்த பில்கேட்ஸையே பெர்னார்ட் ஆர்னோல்ட் மேலும் பின்னுக்குத் தள்ளியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.
பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளைக்குப் பில் கேட்ஸ் 35 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான தொகையை நன்கொடையாக அளித்ததாலேயே அவர் பின்னடைவு கண்டார் என்று பில்கேட்ஸின் இந்தப் பின்னடைவுக்குக் காரணமும் கூறப்பட்டுள்ளது.

# கப்பலைக் காணவில்லை ஈரான் மீதே சந்தேகம்!

## அமெரிக்கா தெரிவிப்பு



வோஷிங்டன். ஜீலை 19

ஹோர்முஸ் நீரிணையூடாகப் பயணித்த ஐக்கிய அரபு இராச்சியத்தின் எண்ணெய்க் கப்பல் காணாமல்போயுள்ளது. இதுபாரசீகவளைகுடாப்பிராந்தியத்தில் பதற்றத்தை அதிகப்படுத்தி உள்ளது. துபாயில் இருந்து ஐக்கிய அரபுஇராச்சியத்தின்புஜைராதுறைமுகம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த 'ரியா' எனப்படும் குறித்த எண்ணெய்க் கப்பல் கடந்த சனிக்கிழமை இரவு காணாமல்போனதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஐக்கிய அரபு இராச்சியத்தின் இந்த எண்ணெய்க் கப்பலை ஈரான் கைப்பற்றி இருக்கலாம் எனச் சந்தேகிப்பதாகஅமெரிக்கஇராணுவம் தெரிவித்தது. இதுகுறித்துஈரான்எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

**பின்னணி**

ஈரான் அமெரிக்கா இடையேயான மோதல் காரணமாகப் பாரசீக வளைகுடாப் பிராந்தியத்தில் பதற்றமான சூழல் நீடிக்கிறது. கடந்த மே மாதம் ஐக்கிய அரபு இராச்சியத்தின் புஜைராதுறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த எண்ணெய்க்கப்பல்கள்மீதுதாக்குதல் நடத்தப்பட்டது. ஈரான்தான் அந்தத் தாக்குதலை நடத்தியதாக அமெரிக்கா குற்றச்சாட்டியது. ஈரான் அதை மறுத்தது. கடந்த சில தினங்களுக்கு முன்பு பிரிட்டனின் எண்ணெய்க் கப்பலை ஈரான் படகுகள் கைப்பற்ற முயற்சித்தாக அமெரிக்கா மறுபடியும் குற்றம் சாட்டியது. ஈரான் அதையும் மறுத்தது. ஐக்கியஅரபுஇராச்சியத்தின் குறித்த கப்பல் விடயத்திலும் வழமை போலவே அமெரிக்கா ஈரானைக் குற்றம்சாட்டியுள்ளது.

# திருப்பதியில் சிறப்பு தரிசனத்துக்கு முடிவு!

## தேவஸ்தானம் அதிரடி அறிவிப்பு

ஆந்திரா.ஜீலை 19

இந்தியாவின்திருப்பதிக்கோயிலில்இதுவரைநடைமுறையில்இருந்துவந்தவி.ஐ.பி.தரிசனமுறையைநீக்குவதாகத் திருமலை திருப்பதி தேவஸ்தானம் கடந்த புதன்கிழமையன்று அறிவித்தது. திருமலையில் நடைபெற்றசெய்தியாளர்சந்திப்பில், திருமலைதிருப்பதிதேவஸ்தானத் தலைவர் சுப்பா ரெட்டி இதைத் தெரிவித்தார். இந்த 'வி.ஐ.பி' தரிசனம் குறித்து ஆந்திர உயர்நீதிமன்றத்தில் வழக்குநடந்துவருகிறது. முன்னுரிமைதரிசனம்என்பது மனித உரிமைகள் மீறல் என்றும் அதை நீக்குமாறும் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. மேலும் இம்மாதிரியாக சிறப்பு மதிப்பு வழங்குவது அரசமைப்பு சட்டத்தின் சில உறுப்புரைகளின்படிவிதியை மீறுவதாகும். மேலும் இது பக்தர்களை வகைப்படுத்துவது போன்றும் உள்ளது என மனுவில் குறிப்பிடப்பட்டது.

பக்தர்களைஎல்1, எல்2, எல்3, என்று வகைப்படுத்துகிறது திருப்பதி தேவஸ்தானம். இதன் மூலம், பக்தர்கள் வெங்கடேசப்பெருமாளைதரிசிக்கும்சமஉரிமையைஇழக்கிறார்கள் என மனுதாரர் கூறியிருந்தார். இதன்படி எல்1 -உயர் அரசியல் தலைவர்கள், புகழ்பெற்றவர்கள் வெங்கடேச பெருமாளைத் தரிசிக்க முடியும். அவர்களுக்குச் சிறப்பு வழிபாடும் ஆரத்தியும் காண்பிக்கப்படும்.

எல் 2 திருமலை திருப்பதி தேவஸ்தான ஊழியர்கள், பத்திரிகையாளர்கள், மற்றும் பிற அதிகாரிகள் தரிசனம் செய்யலாம். அவர்கள் அருகாமையில் இருந்து கடவுளைத் தரிசிக்கலாம். இவர்களுக்கு சிறப்பு பூஜையோ அல்லது ஆரத்தியோ காட்டப்படாது. எல்3 - அமைச்சர்களால் பரிந்துரை செய்யப்பட்டவர்கள், உயர் அதிகாரிக்ள் தூரத்தில் இருந்துகடவுளைத்தரிசிக்கலாம். தனிச்சிறப்புகள்எதுவும் வழங்கப்படமாட்டாது. திருமலை திருப்பதி தேவஸ்தானத்திடம்உயர்நீதிமன்றம்இந்தத்தரிசனத்துக்குமாற்றுஎன்ன என விளக்கம் கேட்டிருந்தது.

அப்போது 'திருமலை திருப்பதி தேவாஸ்தானத்தின் தலைவர், ஏற்கனவே விஐபி முறையை ஒழித்துவிட்டதாகத் தெரிவித்தார்' எனநீதிமன்றத்தில்தெரிவித்தார்வழக்குரைஞர். இந்தநிலையிலேயேசிறப்புத்தரிசனமுறைநீக்கப்பட்டுள்ளதாகத்தேவஸ்தானத்தின்சார்பில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஆந்திரப்பிரதேசத்தில் அமைந்துள்ள திருமலைதிருப்பதிக்கோயில்தென்னிந்தியாவில் இருக்கும் அதிக வருமானமீட்டும் கோயிலாகும். 2019ஆம் ஆண்டில் இதன் ஆண்டு வருமானம் 3ஆயிரத்து 116.25 கோடி (இந்திய மதிப்பில்) எனக் குறிப்பிடப்படுகிறது. திருப்பதிக்குச்சென்று இத்தகைசிறப்புத்தரிசனத்தில் இலங்கைஅரசியல்பிரமுகர்கள்ஈடுபடுதும்குறிப்பிடத்தக்கது.

# வைகோவுக்கு வழங்கப்பட்ட தண்டனை நிறுத்தி வைப்பு

## உயர் நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி.ஜீலை 19

தேசத்துரோக வழக்கில் ம.தி.மு.காவின் பொதுச் செயலர் வைகோவுக்கு விதிக்கப்பட்ட ஓராண்டுச் சிறைத் தண்டனையை நிறுத்தி வைப்பதாகச்சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. 2009ஆம்ஆண்டுஜீலைமாதம்சென்னையிலுள்ள ராணி சீதை மன்றத்தில் நடைபெற்ற 'நான் குற்றம் சாட்டுகிறேன்' என்ற புத்தக வெளியீட்டு விழாவில் வைகோ உரையாற்றினார்.

இந்திய அரசு, இலங்கைத் தமிழர் விவகாரத்தில் துரோகம் செய்து விட்டதாகவும், இந்திய இறையாண்மைக்கு எதிராகவும் அவர் கருத்துகளைத் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. இதையடுத்து, வைகோ மீது தேசத் துரோகம் மற்றும் பொது அமைதிக்குப்பங்கம் விளைவித்தல் ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுவிசாரணை நடந்தது. முடிவில் வைகோவுக்கு 1 ஆண்டு சிறை தண்டனையும், 10 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது.

ஆனால், 4 வாரங்களுக்குத் தண்டனையை நீதிபதி நிறுத்தி வைத்தார். நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து வைகோ சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். இந்தமனுநேற்றுவிசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி, வைகோவுக்கு விதிக்கப்பட்ட ஓராண்டுச்சிறைத் தண்டனையை நிறுத்தி உத்தரவிட்டார்.

## இந்தியாவில் கடும் மழை

# 5 மாவட்டங்களுக்கு சிவப்பு முன்னறிவிப்பு

புதுடெல்லி, ஜீலை 19

வங்கக்கடலில் உருவாகும் தாழமுக்கம் காரணமாக இந்தியாவின் கேரளா மாநிலத்திலுள்ள 5 மாவட்டங்களுக்கு சிவப்பு முன்னறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டசெய்திக்குறிப்பில்வங்கக்கடலில்அடுத்த48மணி நேரத்தில் தாழமுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், இதனால்பலத்தமழைபெய்யக்கூடும்என்றும்அறிவித்தது. கடலில் சுமார் 3 மீற்றர் உயரத்திற்கு அலை எழும்பும்என்றும், மீனவர்கள்கடலுக்குச்செல்லவேண்டாம் எனவும் எச்சரித்தது. ஏலவே கேரளாவில் பரவலாக மழை பெய்து வருகிறது. அங்கு பேரிடர் மீட்புக் குழுவினர்தயார்நிலையில் உள்ளனர். இந்தநிலையிலேயே தற்போதுதாழமுக்கஅறிவித்தல்விடுக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவின் மேற்கு மாநிலமான கேரளாவின் காலநிலை இவ்வாறிருக்கத்தென் மாநிலமானதமிழகத்தில் கடும் வறட்சி நிலவி வருவது குறிப்பிடத்தக்கது.

# இன்றைய நாள்

**மேடம்:** மனதில் இனம் புரியாத குழப்பம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் இடையூறை சரி செய்வது அவசியம். அளவான பணவரவு கிடைக்கும். உடல்நலத்திற்கு சிகிச்சை தேவைப்படலாம்.

**இடபம்:** தகுதி மீறிய செயல்களில் ஈடுபட வேண்டாம். தொழில், வியாபாரம் மந்த கதியில் இயங்கும். குறைந்தஅளவில்பணவரவுகிடைக்கும் பெண்கள் வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர்.

**மிதுனம்:** இஷ்ட தெய்வ அருள்பலம் துணைநிற்கும். தொழில்வியாபாரத்தில் அபிவிருத்திப்பணி செய்வீர்கள். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும்.

**கடகம்:** மனதில் அன்பும், கருணையும் அதிகரிக்கும். தொழில், வியாபாரம் செழித்து புதிய சாதனை இலக்கை அடையும். கூடுதல் வருமானத்தால் சேமிப்பு கூடும். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**சிம்மம்:** சிலரது வீண்பேச்சால் சங்கடத்திற்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாக்கவும். சராசரி அளவில் பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** பேச்சில்நிதானம்பின்பற்றவும். தொழில், வியாபாரம் சீராக இருக்க கூடுதல் உழைப்பு தேவைப்படும். மிதமான அளவில் பணவரவு கிடைக்கும். பாதுகாப்பு தவறாமல் பின்பற்றவும்.

**துலாம்:** பேச்சு, செயலில் உறுதி நிறைந்திருக்கும். கூடுதல் உழைப்பால் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெறுவீர்கள். தாராள அளவில் பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிவிஷயமாக வெளியூர் செல்வர். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.

**விருச்சிகம்:** திட்டமிட்டு செயலாற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேறும். பணவரவு அளவுடன் இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**தனுசு:** நண்பரின் ஆலோசனையால் நன்மைகாண்பீர்கள். தொழில்வியாபாரம் பலம் பெறும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**மகரம்:** உங்களிடம் உதவி பெற்றவர் நன்றி மறந்து செயல்படுவார். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் இருக்கும். அதிக நிபந்தனையுடன்கடன் பெற வேண்டாம்.

**கும்பம்:** முக்கியமான செயல் தடையின்றி நிறைவேறும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**மீனம்:** அடுத்தவர் வியக்கும் வகையில் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அளப்பரிய நன்மை உருவாகும். பணவரவுதிருப்தியளிக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை திறம்பட சமாளிப்பர்.

## தேசியமட்ட கூடைப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

தேசிய மட்ட இருபாலருக்குமான கூடைப்பந்தாட்ட சுற்று தொடரில் பெண்கள் பிரிவில் வடக்கு மாகாண பெண்கள் அணி முதலாவது ஆட்டத்தில் வெற்றி பெற்றது.

அனுரதபுரம் மாகாண விளையாட்டு கட்டத் தொகுதி உள்ளகரங்கில் நேற்றுமதியம் 12 மணிக்கு இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் வடக்கு மாகாண பெண்கள் அணியை எதிர்த்து ஊவா மாகாண அணி மோதியது. இதில் வடக்கு மாகாண பெண்கள் அணி 58 : 3 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

- - - - - - - - - - -

ஆண்களுக்கான ஆட்டத்தில் வடக்கு மாகாண ஆண்கள் அணியை எதிர்த்து சப்பிரகமுவ மாகாண அணி மோதியது. இதில் வடக்கு மாகாண ஆண்கள் அணி 88: 61 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)



# கிண்ணத்தை சுவீகரித்தது புதிய பாரதி வி.க. அணி

கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியோடு பாரதிபுரம் ஆதவன் விளையாட்டுக் கழகம் மின்ஒளியில் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் மலையாள்புரம் புதிய பாரதி விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

கழக மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மலையாள்புரம் புதிய பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விவேகனாந்த நகர் கிருஸ்ண பாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது. 5 சுற்றுகளை கொண்டதாக இறுதியாட்டம் இடம் பெற்றது.

இதில் மலையாள்புரம் புதிய பாரதி விளையாட்டுக் கழக அணி முதல் மூன்று சுற்று ஆட்டத்தை 25:23, 25:15, 25:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது. (23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 19

பூநகரி கால்பந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் முதன்முறையாக நடத்தும் பூநகரி கால்பந்தாட்ட லீக் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை முழங்காவில் விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இதில் முதலாவது ஆட்டத்தில் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலையொளி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரண்டாவது ஆட்டத்தில் கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மூன்றாவது ஆட்டத்தில் சிறி முருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இன்னிசை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. நான்காவது ஆட்டத்தில் அன்பு ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளங்கதிர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

- - - - - - - - - - -

யாழ்ப்பாணம், ஜூலை 19

கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக்கழகத்தின் 63 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக தாச்சி சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெற்று வருகின்றது.

இன்று வெள்ளிக் கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கைதடி துர்க்கா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

# பாகிஸ்தான் அணியை சீரழித்தது மிக்கி ஆர்தர்

## அப்துல் காதிர் குற்றச்சாட்டு

தலைமைப் பயிற்சியாளரான மிக்கி ஆர்தர் பாகிஸ்தான் அணியை சீரழித்து விட்டார் என்று அப்துல் காதிர் குற்றச்சாட்டியுள்ளார்.

உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணி மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தி அரையிறுதிக்குக்கூட செல்லாமல் வெளியேறியது.

இந்த நிலையில் உள்ளூர் தொடர்களில் சிறப்பாக விளையாடி வரும் உமர் அக்மர், அகமது ஷேசாத் போன்ற வீரர்களை புறக்கணித்ததன் மூலம் மிக்கி ஆர்தர் பாகிஸ்தான் கிரிக்கெட்டை சீரழித்துவிட்டார் என்று முன்னாள் பாகிஸ்தான் முன்னாள் வீரர் அப்துல் காதிர் குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்;

மிக்கி ஆர்தர் பாகிஸ்தான் கிரிக்கெட்டை சீரழித்து விட்டார். அவர் அகமது ஷேசாத், சமி அஸ்லாம், சல்மான் பட், உமர் அக்மல், சோஹைல் கான் ஆகிய இவர்களுடன் மேலும் பல வீரர்களை இவர் புறந்தள்ளிவிட்டார். இவர்களின் அனுபவம் மற்றும் ஆட்டத்திறனால் பாகிஸ்தான் அணியை முன்னோக்கி எடுத்துச் சென்றிருக்க முடியும். இந்த வீரர்களுக்கு ஒழுங்கு நடவடிக்கை பிரச்சினை இருந்தாலும் கூட, அதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பொறுப்பேற்று வருங்காலத்தில் சிக்கலில் சிக்காத வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும்.

உலகக் கிண்ணத் தொடருடன் மிக்கி ஆர்தரின் தலைமை பயிற்சியாளர் பதவிக்காலம் முடிவடைந்து விட்டது. அவரது பதவிக் காலம் நீட்டிக்கப்பட மாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





## இருபாலருக்குமான ஓட்டப்போட்டி இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ்ப்பாண மாவட்ட மட்ட இளைஞர் விளையாட்டு போட்டியில் ஓர் அங்கமான ஆண்களுக்கான 10ஆயிரம் மீற்றர், பெண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர், ஓட்டப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (23)

## யங்கம்பன்ஸ் வெற்றி

வடமராட்சி கால்பந்தாட்ட லீக் அனுமதியுடன் வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக் கழகம் மைதான திறப்பு விழாவை முன்னிட்டு வடமராட்சி லீக் பருத்தித்துறை லீக் அழைக்கப்பட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டு கழகம் மோதியது. இதில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

## புற்றுநோயில் இருந்து மீண்ட வர்ணனையாளர் இயன் சப்பல்



1964 - 1980ஆம் ஆண்டுகளில் ஆஸ்திரேலியாவுக்காக 75 டெஸ்ட் போட்டிகளை ஆடியவரும் முன்னாள் அணித் தலைவரும் தற்போதைய வர்ணனையாளருமான இயன் சப்பல் சரும புற்று நோயால் பாதிக்கப்பட்டு கதிரியக்கச் சிகிச்சை யில் 5 வாரங்கள் போராடி மீண்டுள்ளார். ஆனால் அடுத்த மாதம் ஆஷஸ் தொடரில் நிச்சயம் வர்ணனைக்கு வருவேன் என்று அவர் நம்பிக்கை வெளி யிட்டுள்ளார்.

தோள்பட்டை, கழுத்து, பகுதிகளில் சருமப் புற்று நோய் தாக்கி அதற்காக தீவிர சிகிச்சையை 5 வாரங்கள் எடுத்து கொண்டார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்;

70 வயதைக் கடந்து விட்டாலே உட்ல் பலவீனமடையும், எதிர்ப்புச் சக்திகள் குறைந்து விடும், ஆனால் சில ஆண்டுகளாகவே இதனுடன் நான் வாழப்பழகிக் கொண்டேன்-என்றார்.

## ஞானமுருகன், சென். மேரிஸ் சுப்பர் எட்டு ஆட்டத்துக்கு தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 19

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் சோபநாத் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் மயிலங்காடு ஞானமுருகன், நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணிகள் சுப்பர் எட்டு ஆட்டத்துக்குத் தகுதி பெற்றன.

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் 3:0 என்ற கோல் கணக்கில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விளான் அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் 7: 2 என்ற கோல் கணக்கில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. (23)

பங்களாதேஷ் தொடருக்குப் பின்னர்

# இலங்கையின் பயிற்சியாளர்கள் கூண்டோடு நீக்கப்படுகின்றனர்!

## அமைச்சர் ஹரின் அதிரடி உத்தரவு


பங்களாதேஷ் அணியுடனான தொடரின் பின்னர் இலங்கை கிரிக்கெட் அணியின் அனைத்துப் பயிற்சியாளர்களையும் பதவி விலகுமாறு விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ பணிப்புரை விடுத்துள்ளார்.
இதற்கான காரணம் எதுவும் அறிவிக்கப்படவில்லை. நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணி அரையிறுதிக்குக்கூட தகுதி பெறாது வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. புதிய பயிற்சியாளர்களாக இளம் முன்னாள் வீரர்களை நியமிக்க வாய்ப்பு உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.
இதனூடாக இலங்கை அணியினுள் புதிய வீரர்களையும் உள்ளீர்த்து புதியதொரு அணியை உருவாக்குவதற்கான நடவடிக்கையாக இருக்கலாம்.
இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் பங்களாதேஷ் கிரிக்கெட் அணி மூன்று ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. முதல் போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இடம் பெறவுள்ளது.



# நெய்மர் வேண்டுமென்றால் 300 மில். யூரோ கொடுங்கள்

## பார்சிலோனாவுக்கு பி.எஸ்.ஜி. அழுத்தம்

நெய்மர் வேண்டுமென்றால்300மில்லியன்யூரோ கொடுங்கள் என்று பார்சிலோனாவுக்கு கிடுக்குப்பிடி போட்டுள்ளது பாரிஸ் செயின்ட் ஜெர்மன்.
பிரேசில் நாட்டின் முன்னணி கால்பந்து வீரர் நெய்மர். இவர் ஸ்பெயினில் உள்ள புகழ்பெற்ற பார்சிலோனா அணிக்காக விளையாடி வந்தார். கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் திடீரென இவர் உலகின் பணக்கார கால்பந்து கழகமான பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் செயின்ட் ஜெர்மன் அணிக்குச்செல்ல விரும்பினார்.
அங்கு சென்றால் நெய்மரின் புகழ் மங்கிவிடும், தலைசிறந்த கால்பந்து வீரர் என்ற பெயரை தக்கவைத்துக் கொள்ள முடியாது, பார்சிலோனா அணியும் அவரை விடுக்க விரும்பவில்லை. நெய்மர் அங்கு செல்வதைத் தடுக்க எவ்வளவோ முயற்சி எடுத்தது.
நெய்மர் பிடிவாதமாக இருந்ததால் பார்சிலோனா அவருக்கு 222 மில்லியன் யூரோவை ஏலமாக அறிவித்தது. என்றாலும் பாரிஸ் செயின்ட் ஜெர்மன் அந்த பணத்தை ஒரே தவணையாக செலுத்தியது.
ஆனால் பாரிஸ் செயின்ட் ஜெர்மனில் நெய்மரால் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. நெய்மரால் பாரிஸ் செயின்ட் ஜெர்மனுக்கு பெரிய அளவில் வெற்றிகள் கிடைக்கவில்லை.
இந்த நிலையில்தான் நெய்மர் மீண்டும் பார்சிலோனா அணிக்கு திரும்ப விரும்பினார். இதற்கான முயற்சிகளை அவர் எடுத்து வருகிறார். பார்சிலோனாவும் அவரை திரும்ப அணியில் சேர்க்க விரும்புகிறது.
ஆனால் பாரிஸ் செயின்ட் ஜெர்மன் நெய்மருக்காக செலவழித்த பணத்தை திரும்ப பெறுவதில் உறுதியாக உள்ளது.
இதனால் பாரிஸ் செயின்ட் ஜெர்மன் அவரை 300 மில்லியன் யூரோ ஏலமாக நிர்ணயித்துள்ளது. இவ்வளவு பணத்தை கொடுக்க பார்சிலோனா தயங்குகிறது. பார்சிலோனா ஏற்கனவே அட்லெடிகோ மட்ரிட் அணியில் விளையாடிய கிரிஸ்மானை தற்போது தான்107மில்லியன்யூரோ கொடுத்து வாங்கியது.
நாங்கள் நெய்மருடன் மூன்று வருடங்களுக்கு ஒப்பந்தம் செய்துள்ளோம். அவருக்காக நாங்கள் செலவழித்த பணத்தை திரும்ப பெறாமல் விடமாட்டோம் என்பதில் பாரிஸ் செயின்ட் ஜெர்மன் அணி உறுதியாக இருப்பதாக தகவல் தெரிவிக்கின்றன. இதனால் பார்சிலோனா 300 மில்லியன்யூரோ செலவழித்தால் மட்டுமே நெய்மரை பெற முடியும் என்பதில் சந்தேகமில்லை.

# தர்ஜினியின் புதிய சாதனை

இலங்கை வலைப்பந்தாட்ட அணியின் முன்னாள் தலைவி தர்ஜினி சிவலிங்கம் தனது 100ஆவது பன்னாட்டு வலைப்பந்தாட்டப் போட்டியில் விளையாடி சாதனை படைத்தார்.
இதனை முன்னிட்டு தர்ஜினியைப் பாராட்டி கௌரவிக்கும் வைபவம் ஒன்று லிவர்பூலில் வீராங்கனைகள் தங்கியுள்ள ஹோட்டலில் இடம்பெற்றது. அணி முகாமையாளர் ட்ரிக்ஸி நாணயக்கார தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் பயிற்றுநர் திலக்கா ஜினதாச, அணித் தலைவி சத்துரங்கி ஜயசூரிய, ஏனைய வீராங்கனைகள் ஆகியோர் கலந்து கொண்டு தர்ஜினியை வாழ்த்தினர்.
இந்த நிகழ்வு தொடர்பில் தர்ஜினி தெரிவிக்கையில்;
நான் இப்படி ஒரு வைபவத்தை எதிர்பார்க்கவில்லை. எனவே இதனை ஏற்பாடு செய்து என்னைக் கௌரவித்தமைக்காக அணி முகாமையாளர், பயிற்றுநர் மற்றும் வீராங்கனைகளுக்கு நன்றி கூறுகின்றேன். பன்னாட்டு வலைப்பந்தாட்டத்தில் என்னை அறிமுகப்படுத்திய ட்ரிக்ஸி நாணயக்காரவுக்கு விசேட நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.
அத்துடன் எனக்கு ஒத்துழைப்பு நல்கி உற்சாகப்படுத்தி இந்த நிலைக்கு உயர்த்திய பயிற்றுநர் திலக்கா ஜினதாச, ஏனைய பயிற்றுநர்கள், சக வீராங்கனைகள், ரசிகர்கள் அனைவருக்கும் நன்றி- என்றார்.
பிஜி அணிக்கு எதிராக லிவர்பூலில் நேற்று நடைபெற்ற போட்டியில் விளையாடியதன் மூலம் தர்ஜினி சிவலிங்கம் 100ஆவது பன்னாட்டு வலைப்பந்தாட்டப் போட்டியில் விளையாடிய மூன்றாவது இலங்கை வீராங்கனை என்ற சாதனையைப் படைத்தார். இதற்கு முன்னர் காயத்ரி மற்றும் சஷிக்கா ஆகியோர் 100 பன்னாட்டு வலைப்பந்தாட்டப் போட்டிகளில் விளையாடிய இலங்கை வீராங்கனைகளாக உள்ளனர்.




இந்திய அணியின்

# தலைமைப் பயிற்சியாளர் பதவிக்கு மஹேல விண்ணப்பம்?



இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவிக்கு இலங்கை அணியின் முன்னாள் அணித்தலைவர் மஹேல ஜெயவர்தன விண்ணப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.
கெரி கேர்ஸ்டன், டோம் மூடி மற்றும் மஹேல ஜயவர்தன, விரேந்திர சேவாக் ஆகியோர் இந்திய அணியின் பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பிப்பார்கள் என இந்திய செய்தி இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
தென்னாபிரிக்க அணியின் முன்னாள் தலைவர் கெரி கேர்ஸ்டன் 2011 ஆம் ஆண்டு இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக செயற்பட்ட காலத்திலேயே இந்திய அணி உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது. தற்போது கேர்ஸ்டன் ஐ.பி.எல்.லில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளராகவுள்ளார்.
இதேவேளை இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவர் மஹேல ஜெயவர்தன ஐ.பி.எல்.லில் மும்பை இந்தியன் அணியின் தலைமைப் பயிற்சியாளராக செயற்பட்டு இரண்டு முறை கிண்ணத்தை பெற்றுக் கொடுத்தவர்.
அத்துடன் சேவாக் மற்றும் டோம் மூடி ஆகியோர் 2017 ஆம் ஆண்டு இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக ரவிசாஸ்திரி நியமிக்கப்பட்டபோது அந்தப் பதவிக்கு விண்ணப்பித்திருந்தனர்.
இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர் ரவிசாஸ்திரி, துடுப்பாட்ட பயிற்சியாளர் சஞ்சய் பாங்கர், பந்து வீச்சு பயிற்சியாளர் பரத் அருண், களத்தடுப்பு பயிற்சியாளர் ஸ்ரீதர், முகாமையாளர் சுனில் சுப்பிரமணியன் ஆகியோரின் பதவிக் காலம் உலக கிண்ண போட்டியுடன் முடிவடைந்துள்ளது.
இந்திய அணி அடுத்த மாதம் 3ஆம் திகதி மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று ரி-20, மூன்று ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.
இந்தத் தொடருக்காக தலைமை பயிற்சியாளர் மற்றும் பயிற்சியாளர்கள், நிர்வாக முகாமையாளர் ஆகியோரின் பதவி காலம் 45 நாட்கள் நீட்டிக்கப்பட்டது.
இந்த நிலையிலேயே இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர், துடுப்பாட்ட பயிற்சியாளர், பந்து வீச்சு பயிற்சியாளர், களத்தடுப்பு பயிற்சியாளர், உடற்பயிற்சி நிபுணர், நிர்வாக முகாமையாளர் ஆகிய பதவிக்கு விண்ணப்பம் கோரியிருந்தது.

# தலைமைப் பயிற்சியாளர் விடயத்தில் கோக்லியின் கருத்துக்கு இடமில்லை

## பிசிசிஐ திட்டவட்டம்

இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராக இருப்பவர் ரவி சாஸ்திரி. இவரது பதவிக் காலம் நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணத் தொடருடன் முடிவடைந்த நிலையில் தலைமை பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பத்தை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கோரியுள்ளது.
மொத்தமாகவரவேற்றவிண்ணப்பங்களை கபில்தேவ் தலைமையிலான குழு ஆராய்ந்து தகுதியான விண்ணப்பங்களை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு பரிந்துரை செய்யும். அதன்பின் தலைமை பயிற்சியாளரை யார் என்பது அறிவிக்கப் படும்.
தலைமை பயிற்சியாளரை நியமிப்பதற்கு முன் இந்திய அணித் தலைவரின் கருத்து கேட்கப்படுவது வழமை. கடந்த முறை ரவி சாஸ்திரியை நியமிக்கும்போது விராட் கோக்லியிடம் கருத்து கேட்கப்பட்டது. ஆனால் இந்த முறை அவரிடம் கருத்து கேட்கப்படமாட்டாது என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
கடந்த முறை அனில் கும்ப்ளே தலைமை பயிற்சியாளராக தெரிவு செய்யப்பட்டால் தனக்கும் அல்லது அணிக்கும் உள்ள சங்கடங்கள் குறித்து எடுத்துக் கூறினார். ஆனால் இந்த முறை கபில்தேவ் தலைமையிலான குழு அவரிடம் எதுவும் கேட்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தோனேசியா பூப்பந்துத் தொடர்;

# பிவி சிந்து காலிறுதிக்கு முன்னேற்றம்

இந்தோனேசியா பகிரங்க பூப்பந்துத் தொட ரில் இந்திய வீராங் கனை பிவி சிந்து 2ஆவது சுற்றில் தரநிலை பெறாத டென்மார்க்கின் மியா பிளிச்வெல்டை



எதிர்கொண்டு வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார். தரநிலை பெறாத வீராங்கனையை சிந்து இலகுவாக வீழ்த்துவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அவர் சிந்துவுக்கு நெருக்கடி கொடுத்தார். முதல் செற்றை 21:14 எனக் கைப்பற்றிய பிவி சிந்து 2ஆவது செற்றை 17:21 என இழந்தார். அதன்பின் சுதாரித்துக் கொண்ட சிந்து 3ஆவது செற்றை 21:11 எனக் கைப்பற்றி வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

077 3944 2964, 071 8413 6990
076 166 1986, 077 7441 7549

விசேட இறுதிக் கருத்தரங்குகள்
முகாமைத்துவ உதவியாளர்
சனி , ஞாயிறு 9.00 - 3.00
புள்ளிவிபரவியலாளர் பதிவாளர்
சனி , ஞாயிறு 9.00 - 4.00
SLAS
புதிய பிரிவு
பிரதி சனி 9.00-3.30
SLAS SLEAS
பிரதி ஞாயிறு 9.00-3.30
தொடர்புகளுக்கு 076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்திலிருந்து 100m தூரத்தில்)

# இந்திய அணியின் தோல்விக்கு டோனியே முழுக் காரணம்

## யுவராஜ் சிங்கின் தந்தை குற்றச்சாட்டு

நடைபெற்று முடிவடைந்த உலகக் கிண்ணப் போட்டியில் இந்திய அணி அரையிறுதியில் நியூசிலாந்து அணியிடம் தோல்வியடைந்து வெளியேறியது. இந்தத் தோல்வியின் பின்னர் இந்திய கிரிக்கெட் அணியின் மூத்த வீரர் டோனி ஓய்வு பெறுவார் என்று கூறப்பட்டது. ஆனால் அவ்வாறு எந்த அறிவிப்பும் வராத நிலையில், இந்திய அணி அடுத்த மாதம் மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 3 ரி-20 போட்டிகளில் விளையாட உள்ளது.



இந்த நிலையில் மேற்கிந்திய தீவுகள் செல்லும் அணியில் டோனி இடம்பெற வாய்ப்பு இல்லை என்று கூறப்படுகி றது. அதே சமயம் இந்திய அணியில் டோனி இடம் பிடித்தாலும், ரிஷப் பந்த் தான் இலக்குக் காப்பாளராகச் செயற்படுவார் என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில் இந்திய அணியின் முன்னாள் வீரர் யுவராஜ் சிங்கின் தந்தை யோகராஜ் இந்திய அணியின் தோல்வி குறித்து டோனியைக் குற்றம் சாட்டியுள்ளார்.

டோனி வேண்டுமென்று தான் நியூசிலாந்து அணியின் இலக்கைக் கடக்க அணிக்கு உதவவில்லை. இந்திய அணியில் தன்னைத்தவிர.

ஏனைய எந்த அணித் தலைவரும் உலகக் கிண்ணத்தைப் பெற்று பெருமையை சம்பாதித்துவிடக் கூடாது என்பதுதான் டோனியின் எண்ணம். டோனி தனக்கு கிடைத்த வாய்ப்புகளை வேண்டுமென்று பயன்படுத்தாமல் மறுத்து விட்டார் - என்றார்.

# வில்லியம்சனை புகழ்ந்த ரவிசாஸ்திரி

கடினமான தோல்வி ஏற்பட்ட நிலையிலும் அமைதி, கண்ணியத்தை கடைப்பிடித்தார் என நியூஸிலாந்து அணித்தலைவர் வில்லியம்ஸனுக்கு இந்திய அணியின் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி புகழாரம் சூட்டியுள்ளார்.

உலகக் கிண்ண இறுயாட்டத்தில் இரு அணிகளும் இறுதி வரை போராடி சமநிலையில் போட்டி முடிவடைய சுப்பர் பந்துப்பரிமாற்றம் வழங்கப்பட அதிலும் இரு அணிகளும் சமநிலை பெற இறுதியில் அதிக பவுண்டரிகள் அடித்த அணி என்ற அடிப்படையில் இங்கிலாந்து வென்றதாக அறிவிக்கப் பட்டது. இது நியூஸிலாந்து அணி வீரர்களுக்கு கடும் மன. வேதனையை ஏற்படுத்தியது.

இது தொடர்பில் இந்திய பயிற்சியாளர் ரவிசாஸ்திரி தெரிவிக்கையில்;

உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டி முடிவுகள், அதன் தொடர்ச்சியாக இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களின்போதும் கண்ணியம், அமைதியை கடைப்பிடித்ததற்காக வில்லியம்சனின் மன உறுதியை பாராட்டுகிறேன். உலகக் கிண்ணத்தில் உங்களது ஒரு கை இருந்ததை நான் அறிவேன். எனினும் அடுத்து சாதிக்க கடவுளின் ஆசிகள்- என்றார்.

# டெஸ்ட் அணியில் முதன்முறையாக ஜேசன் ரோய்

இங்கிலாந்தில் நடைபெற்று முடிந்த உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்று கிண்ணத்தை முதன் முறையாகக் கைப்பற்றியது.

இதில் அந்த அணியின் வீரர் ஜேசன் ரோய் 8 போட்டிகளில் ஒரு சதம், நான்கு அரைசதங்களுடன் 443 ஓட்டங்களைக் குவித்தார். இந்தியா, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா அணிகளுக்கு எதிரான முக்கியமான ஆட்டத்தில் அவர் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

ரோய் உலகக் கிண்ணத் தொடரில் சிறப்பாக விளையாடியதன் மூலம் இங்கிலாந்து டெஸ்ட் அணியில் முதன்முறையாக இடம் பிடித்துள்ளார். அயர்லாந்துக்கு எதிராக இங்கிலாந்து லோர்ட்ஸ் மைதானத்தில் ஒரேயொரு போட்டியில் விளையாடுகிறது. இதற்கான இங்கிலாந்து அணியில் ஜேசன் ரோய் இடம் பிடித்துள்ளார்.

இவர் 2014ஆம் ஆண்டு ரி-20 கிரிக்கெட்டிலும், 2015ஆம் ஆண்டு ஒரு நாள் போட்டியிலும் அறிமுகமானார். தற்போது வரை 84 ஒருநாள் மற்றும் 32 ரி-20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.



ராசி அதிர்ஷ்டம்
திகதி 18.07.2019 | வெற்றி வாரம் 2563 | வர்ணம் கபிலம்
மேடம்
வெற்றி இலக்கங்கள் 01 15 34 37
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000,000/=
19.07.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk


ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1587 | சீட்டிழுப்பு திகதி 18.07.2019
வெற்றி இலக்கங்கள் 36 38 60 64 P
அடுத்த திங்கட் கிழமைக்கான ஜக்பொட் ரூ.34, 329, 060/=

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 673
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.07.18
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 71,038,200/-
வெற்றி இலக்கங்கள் 03 37 52 53 P
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03 . 06 . 1946
மறைவு 30 . 07 . 2018
அமரர்
செல்லத்துரை சிதம்பரம்
என்றென்றும் எம் நினைவில்
வாழும் எங்கள் அம்மாவே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
கைதடி கிழக்கு,
கைதடி
குடும்பத்தினர்




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19 .07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.